றோ. க. கிறிஸ்தவம்

9, 10ஆம் வகுப்புகள்

★

# பயிற்சி வினவிடை

★

இயக்குநர்
யாழ் மறைக்கல்வி நிலையம்,
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்
1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினுப்பத்திரம் I

**மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

1. மனிதன் இவ்வுலகில் படைக்கப்பட்டதின் நோக்கம்;
   1. படித்துப் பட்டம் பெற்று உயர் பதவிகளை வகிக்க
   2. இவ்வுலகின் இயற்கைச் செல்வங்களை அனுபவிக்க
   3. இறைவனின் திட்டத்திற்கேற்ப அவரை மகிமைப்படுத்தி வாழ
   4. படைப்பை விருத்திசெய்து பாதுகாக்க.

2. திருமுழுக்குப் பெறும் குழந்தையைக் குரு ஏற்றுக்கொள்வது;
   1. குழந்தையின் பெற்றோரின் பெயரால்
   2. குழந்தையின் ஞானப் பெற்றோரின் பெயரால்
   3. கடவுளுடைய திருச்சபையின் பெயரால்
   4. பங்குக் கிறிஸ்தவர்களின் பெயரால்

3. இறையரசைச் சார்ந்த உண்மைக் கிறிஸ்தவனின் இயல்பு;
   1. நாள்தோறும் திருவழிபாடுகளில் பங்குபற்றுதல்
   2. உளமாற்றம் அடைந்து மற்றவர்களுக்குத் தன்னை அர்ப்பணித்தல்
   3. கடவுளின் அரசைப் பரப்புவதில் முன்னின்று உழைத்தல்
   4. தன் கடமைகளைத் திறமையாகச் செய்தல்

4. காலத்தை முழுமையாகப் பயன்படுத்தி எமக்கு மாதிரிகை காட்டியவர்;
   1. கிறிஸ்து 2. கன்னிமரியாள் 3. அருளப்பர் 4. எலிசபேத்

5. ''நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள்'' என்ற வேதாகம வாக்கின் பொருள்;
   1. மனிதன் உன்னத வளர்ச்சி பெறுவதும், படைப்பைப் பாதுகாப்பதும்
   2. இவ்வுலகில் மனிதன் நிறைவு பெறுவதும், மனமகிழ்ச்சியாக வாழ்வதும்
   3. குடும்பவாழ்வில் அதிக பிள்ளைகளைப் பெறுவதும், பேணி வளர்ப்பதும்
   4. உலகச் செல்வங்களைச் சேகரிப்பதும், வளமாக வாழ்வதும்

6. ''ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கின்றான்'' என்று கூறியவர்;
   1. சவுல் 2. சக்கரியாஸ் 3. சாமுவேல் 4. சின்னப்பர்

7. விசுவாசத்தின் முக்கிய சத்தியங்களை அடக்கியுள்ளது;
   1. இறைவார்த்தை 2. பத்துக்கட்டளை
   3. திருச்சபைக்கட்டளை 4. விசுவாசப்பிரமாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. இறைவனின் மறைபொருளை நாம் அறிந்துகொண்டது;
   1. மறைக்கல்விப் போதனையின் வழியாக
   2. இறைவெளிப்பாட்டின் வழியாக
   3. வியத்தகு படைப்பின் வழியாக
   4. ஆற்றல் மிகுந்த அறிவின் வழியாக

9. விசுவாசத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குப்வர்;
   1. கன்னிமரியாள்  2. மரியமதலேனுள்
   3. சக்கரியாஸ்  4. இராயப்பர்

10. விண்ணரசு தன் முழுப்பொலிவுடன் துலங்குவது;
   1. இறையரசு எல்லோருக்கும் அறிவிக்கப்படும்போது
   2. எல்லா இனத்தாரும் ஒன்று சேரும்போது
   3. அனைத்து மக்களும் உளமாற்றம் அடையும்போது
   4. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது

11. விண்ணகவிருந்தின் முன்சுவையாக விளங்கும் திருவருட்சாதனம்;
   1. திருமுழுக்கு  2. பச்சாத்தாபம்
   3. தேவநற்கருணை  4. உறுதிப்பூசுதல்

12. இறையரசின் உவமைகளை அதிகமாக எழுதிய நற்செய்தியாளர்;
   1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்காஸ் 4. அருளப்பர்

13. திருமுழுக்கின் வழியாகக் கடவுளின் அரசிற்கு அழைக்கப்பட்ட கிறிஸ்தவன்
   1. திருப்பலியில் பங்குகொண்டு செபிப்பான்
   2. இறையரசு தன்னில் வளரவும் உலகில் அதை வளர்க்கவும் உழைப்பான்
   3. வேதாகம அறிவைப் பெற்று மற்றவர்களுக்கு அளிப்பான்
   4. மக்களனைவரோடும் அன்புடன் உறவாடுவான்

14. திருமணவிருந்து உவமை வழியாகக் கிறிஸ்து நமக்குக் கற்பிப்பது;
   1. திருமணவிருந்து விண்ணக விருந்தின் அடையாளம்
   2. நாம் விண்ணகம் செல்ல அழைக்கப்பட்டுள்ளோம்
   3. அழைக்கப்பட்டோர் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டோர் சிலர்
   4. நாம் அருள்வாழ்வில் என்றும் நிலைத்திருக்க வேண்டும்

15. நாம் தூய்மையாக வாழவேண்டுமென்பதை இறைவன் விரும்புகின்றார்;ஏனெனில்
   1. தூய்மையாக வாழ்பவர்களை எல்லோரும் விரும்புவர்
   2. தூய்மை சுகத்தை அளித்து அழகைக் கொடுக்கும்
   3. தூய்மை நோய்களைத் தடுத்து மன அமைதியை அளிக்கும்
   4. தூய்மை இறைவனின் புனிதத்துவத்தை வெளிப்படுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. மோயீசன் வழியாக இறைவன் செய்த வியத்தகு செயல்;
   1. எரியும் முட்செடியில் காட்சி அளித்தது
   2. இஸ்ராயேலருக்கு விடுதலை அளித்தது
   3. மக்களுக்காக மோயீசனோடு உரையாடியது
   4. பாலைவனத்தில் பாறையில் தண்ணீர் ஓடச் செய்தது

17. இசையாஸ் இறைவாக்கினரை இறைவன் ஆலயத்தில் அழைத்தார். ஏனெனில்
   1. இறைவாக்கினரின் புனிதத்துவத்தை வெளிப்படுத்த
   2. பாவத்தின் தீமையை மக்களுக்கு உணர்த்த
   3. இறைவன் தாம் தூயவர் என்பதை எண்பிக்க
   4. இறைவாக்கினரில் தாம் கொண்ட அன்பைப் புலப்படுத்த

18. இறைவன் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றினார் என்பதற்குச் சான்று;
   1. இறைவன் மீட்பரை உலகுக்கு அனுப்பினார்
   2. இறைவன் படைப்பை விருத்தி செய்து பாதுகாத்தார்
   3. இறைவன் பாவிகள் மட்டில் மிகுந்த இரக்கம் காட்டினார்
   4. இறைவன் மனிதனின் மாண்புக்கு மதிப்பளித்தார்.

19. கடவுளின் அரசு வரும்படி நாம் செபிக்கும் செபம்;
   1. திரித்துவப் புகழ்   2. மங்களவார்த்தைச் செபம்
   3. விசுவாசப்பிரமாணம்   4. கர்த்தர் கற்பித்த செபம்

20. நமது விசுவாசத்தின் காவலரும் போதகருமாயிருப்பது;
   1. திருச்சபை   2. பாப்பானவர்   3. குருக்கள்   4. வேதாகமம்

## சுருக்கமான விடை தருக.

1. திருமுழுக்குப் பெற்றபோது இறைவன் நமக்களித்த முப்பெரும் கொடைகள் எவை?
2. ''புதுவாழ்வுக்கு நுழைவாயில்'' திருமுழுக்கு இதன் பொருள் என்ன?
3. காலத்தைப்பற்றிக் கூறும் பழைய ஏற்பாட்டு நூல் எது?
4. மூவொரு கடவுளின் பெருவிழாவைத் திருச்சபை எப்போ கொண்டாடுகின்றது?
5. உமது விசுவாசத்தை வளர்க்க உதவியான ஞானநூல்கள் எவை?
6. இறைவன் எவ்வடையாளங்கள் வழியாகத் தம்மை வெளிப்படுத்தி வருகின்றார்?
7. திருமுழுக்கினால் ஒரு கிறிஸ்தவன் பொறுப்பேற்கும் முப்பணிகளும் எவை?
8. சிலுவை அடையாளம் நமக்கு வெளிப்படுத்துவது என்ன?
9. ''புதிய வானமும் புதிய பூமியும்'' என்பதன் பொருள் என்ன?
10. நீர் உமது குடும்பத்தில் இறைவனின் அன்பை அனுபவிக்கும் வழிவகைகள் எவை?

## கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.

(நன்றி, விசுவாசம், உவமைகள், இறையரசு, யாத்திராகமம், மீட்பளிக்கின்றன, பெந்தக்கோஸ்து, திருச்சபையிடம், தீர்ப்பளிப்பார், கிறிஸ்து)

1. கிறிஸ்து போதிக்கும் முழு அதிகாரத்தையும்..........கொடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இறுதிநாளில் கிறிஸ்துநாதர் எமது நற்செயல்களைக் கொண்டு நமக்குத்......

3. உலகெங்கும் போய் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள் என்று ...... கூறினார்.

4. பரிசுத்த ஆவியின் பெருவிழாவை...... விழா என்று அழைக்கின்றோம்.

5. கிறிஸ்துவின் பாடுகள் நமக்கு......

6. உலகின் எல்லாச் செல்வங்களையும் விட...... நமக்கு அதி முக்கியமானது.

7. இஸ்ராயேல் மக்களது விடுதலைப் பயணத்தைப் பற்றி...... கூறுகின்றது.

8. கிறிஸ்து பற்பல சந்தர்ப்பங்களில் வாழ்வின் பொருளை...... வழியாக விளக்கியுள்ளார்.

9. நான் கிறிஸ்தவனாக அழைக்கப்பட்டதற்கு என்றும்...... கூறுவேன்.

10. திருமுழுக்கின்போது நாம் திருச்சபையிடம் கேட்பது......

## பகுதி II

1. அ. நீர் எப்போது விசுவாசம் என்னும் கொடையைப் பெற்றுக் கொண்டீர்?
   ஆ. இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தில் விசுவாசத்திற்கெதிரான தூண்டுதல்கள் எவை?
   இ. உம்மிலே விசுவாசத்தை வளர்த்து உறுதிப்படுத்த நீர் கையாளக்கூடிய வழி வகைகள் எவை?

2. அ. கிறிஸ்து எவ்வாறு காலத்தைப் பயன்படுத்தினார்?
   ஆ. தன் காலத்தை வீணே செலவழிக்கும் உமது வகுப்பு மாணவனுக்கு நீர் கூறக்கூடிய அறிவுரைகள் எவை?
   இ. உமது ஓய்வு நேரத்தை நீர் கிறிஸ்தவ மாணவன் என்ற முறையில் எவ்வாறு செலவழிப்பீர்?

3. அ. கடவுள் தம்மை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்?
   ஆ. இறைவனின் வெளிப்பாட்டை உமது நாளாந்த வாழ்வில் நீர் எவ்வாறு உணர்ந்து செயல்படுகின்றீர்?

4. அ. கிறிஸ்து விண்ணரசைப் பற்றி எவ்வுவமைகளால் விளக்கியுள்ளார்?
   ஆ. திருச்சபையின் மறைபரப்பு ஞாயிறு எப்போ கொண்டாடப்படுகின்றது?
   இ. மறைபரப்புப் பணி அழைத்தலுக்கு இளைஞர்கள் தங்களை அர்ப்பணிக்குமாறு இறைவனை வேண்டி ஒரு சிறு செபம் எழுதுக.

5. அ. இறைவன் தமது அன்பை நமக்கு எவ்வாறு காட்டியுள்ளார்?
   ஆ. கிறிஸ்து அன்பைப் பற்றிப் போதித்தவற்றுள் சில கூற்றுகளை எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் II

## மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

1. விண்ணகத் தந்தையை நாம் ஆராதிக்கும் முறையை;
   1. இறைவனே வெளிப்படுத்தியுள்ளார்
   2. அப்போஸ்தலர்கள் போதித்துள்ளார்கள்
   3. இறைவாக்கினர் முன்னறிவித்துள்ளார்கள்
   4. கிறிஸ்துநாதர் கற்றுக் கொடுத்துள்ளார்

2. நாம் எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனை அன்பு செய்ய வேண்டும்;
   1. திருச்சபை நமக்கு அவ்வாறு போதிக்கின்றது
   2. இறைவனே முதன்முதல் நம்மை அன்பு செய்தார்
   3. பத்துக் கற்பனைகள் நமக்குப் படிப்பிக்கின்றன
   4. நாம் இறைவனின் உன்னத படைப்பு

3. நாம் இறையுன்பில் நிலைத்திருக்க வேண்டுமானுல்;
   1. இறையருளுடன் ஒத்துழைக்க வேண்டும்
   2. சோதனைகளை எதிர்த்துப் போராட வேண்டும்
   3. அயலாரின் தேவைகளில் உதவ வேண்டும்
   4. நன்மையை விரும்பித் தீமையை விலக்க வேண்டும்

4. ''சேனைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்களாற் கண்டேன்'' எனக் கூறியவர்
   1. சின்னப்பர் 2. தோமையார் 3. இசையாஸ் 4. சக்கரியாஸ்

5. பாவிகள் மட்டில் இறைவனின் சித்தம்;
   1. அவர்கள் மனமாற்றம் அடைந்து மீட்பு பெறுதல்
   2. அவர்கள் வாழ்வில் துன்பத்தை அனுபவித்தல்
   3. மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்டு தனிமையில் வாழ்தல்
   4. அவர்கள் இறைவனின் இரக்கத்தை உணர்ந்து கொள்ளல்

6. மனச்சான்று என்பது;
   1. மனிதனில் மறைந்துள்ள மேலான ஆற்றல்
   2. நன்மை, தீமை எதுவெனக் காட்டும் இறைவனின் குரல்
   3. மனிதனின் மாண்புக்கு மேன்மையான அடையாளம்
   4. நம்மை வழிநடத்தும் நண்பன்

7. இறைவனின் உள்ளரங்க உண்மைகளை நாம் அறிவது;
   1. செபத்தின் வழியாக
   2. இறைவெளிப்பாட்டிலிருந்து
   3. திருமறை நூலின் வழியாக
   4. கற்பனைகளின் படிப்பினையிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. இறைவனின் ஞானத்தை எடுத்தியம்புவது;
1. விஞ்ஞானம் 2. நுட்பக்கலை 3. படைப்பு 4. அணுசக்தி

9. இறைவன் உயிருள்ள கடவுளாக இருப்பதால்;
1. அவர் எல்லோரையும் அன்பு செய்கிறார்
2. துன்புற்றோருக்கு ஆறுதல் அளிக்கின்றார்
3. மனந்திரும்பும் பாவிகளை மன்னிக்கின்றார்
4. அவர் எல்லாவற்றிற்கும் உயிர் அளிக்கின்றார்

10. தேவபராமரிப்பைப் பற்றிக் கூறும் நற்செய்தியாளர்கள்;
1. மாற்கு, அருளப்பர் 2. லூக்காஸ், மத்தேயு
3. லூக்காஸ், மாற்கு 2. அருளப்பர், மத்தேயு

11. படைப்புப் பொருட்கள் அனைத்தும் இறைவனின்;
1. நன்மைத்தனத்தில் பங்கு பெறுகின்றன
2. அதிகாரத்தில் பங்கு பெறுகின்றன
3. வல்லமையில் பங்கு பெறுகின்றன
4. ஞானத்தில் பங்கு பெறுகின்றன

12. இறைவன் மன்னிக்கும் தந்தை என்பதைக் காட்ட கிறிஸ்து கூறிய உவமை;
1. விருந்தின் உவமை 2. தாலந்து உவமை
3. இரக்கமற்ற ஊழியன் உவமை 4. ஊதாரிப்பிள்ளையின் உவமை

13. செல்வம், உடல்நலம், அறிவாற்றல் என்பவற்றைப் பயன்படுத்தி;
1. நம் ஆன்மாவை ஈடேற்ற வேண்டும்
2. பேரும், புகழும் தேடிக் கொள்ள வேண்டும்
3. நன்றாகப் படித்து அறிவாளர் ஆக வேண்டும்
4. உலக செல்வங்களைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும்.

14. ''முடிவில்லாத அன்பினால் உன் மேல் அன்பு வைத்தோம்'' என இறைவனால் கூறப்பட்டவர்;
1. இசையாஸ் 2. எசேக்கியேல்
3. யெரேமியாஸ் 4. சக்கரியாஸ்

15. இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் அளித்திருக்கும் துணையாளன்;
1. நல்லாசிரியன் 2. காவல் தேவதூதன்
3. உற்ற நண்பன் 4. ஞானத் தந்தை

16. கடவுள் நம்மேல் அக்கறை கொண்டுள்ளார் என்பதை;
1. கடவுளின் நன்மைத்தனத்திலிருந்து அறிகின்றோம்
2. இறைபராமரிப்பிலிருந்து அறிகின்றோம்
3. வளமான வாழ்விலிருந்து அறிகின்றோம்
4. திருச்சபையின் போதனைகளிலிருந்து அறிகின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. ஆதிப்பெற்றோருக்கு இறைவன் அளித்த மாபெரும் கொடை;
1. இன்ப வனம்
2. வாழ்வு மரம்
3. இனிய பழம்
4. அருளுயிர்

18. பாவி மனந்திரும்ப இறைவன் நீண்டகாலத்தைக் கொடுப்பது;
1. பாவி மனம் வருந்தி தம்மிடம் திரும்பி வர
2. பாவத்தின் கனுகனத்தை உணர்ந்து கொள்ள
3. பாவி பாவத்திற்குத் தவம் புரிய
4. இறைவனின் இரக்கத்தில் நம்பிக்கை கொள்ள

19. கடவுள் என்மட்டில் பொறுமையுள்ளவராயிருப்பதால் நான்;
1. பாவிகள் ஈடேற்றம் அடைய வேண்டிக் கொள்வேன்
2. பிறர் மட்டில் பொறுமையாயிருப்பேன்
3. பாவிகளை ஏற்று அன்பு செய்வேன்
4. இறைவனின் இரக்கத்தை உணர்ந்து வாழ்வேன்

20. படைப்பின் வரலாற்றைக் கூறும் பழையஏற்பாட்டு நூல்;
1. யாத்திராகமம்
2. எண்ணாகமம்
3. லேவியராகமம்
4. ஆதியாகமம்

## சுருக்கமான விடை தருக.

1. இறைவன் இசையாசை ஆலயத்தில் அழைத்தபோது அங்கு மறைத்த முகில் எதன் அடையாளமாக இருந்தது?
2. கடவுள் மாறாத் தன்மையுடையவர் என்பதன் பொருள் யாது?
3. பாலைவனத்தில் அதிசயமன்னாவும், பாறையின் நீரும் எவற்றிற்கு முன்னடையாளமாக இருந்தன?
4. ஜெருசலேம் ஆலயத்தைக் கட்டி அபிஷேகம் செய்த அரசன் யார்?
5. இன்றைய உலகில் திருச்சபை என்னும் வத்திக்கான் பொதுச் சங்கஏடு மனிதனின் மாண்பைப் பற்றிக் கூறுவதென்ன?
6. பயணம் செய்யும் திருச்சபை என்பதின் பொருள் என்ன?
7. கிறிஸ்துவை நல்லாயனாக உருவகம் செய்த நற்செய்தியாளன் யார்?
8. திருச்சபை தேவதூதர்களின் திருவிழாக்களை எப்போ கொண்டாடுகின்றது?
9. இறைவனின் பிரசன்னத்தைப் பற்றிக் கூறும் சங்கீதம் எது?
10. சூசை எகிப்து நாட்டிலிருந்தபோது இறைவன் அவர் மேல் எவ்வாறு அக்கறை காட்டினார்?

கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக;

(கடவுளாலேதான், தூய்மையை, திட்டப்படி, புனித அகஸ்தீனார், கிறிஸ்து, உண்மையுள்ளவர், மீட்புக்கு, அக்கறை, மூவொருகடவுள், மோயீசன்)

1. வானகத்திலுள்ள நம் தந்தையாகிய கடவுள் எப்போதுமே.........
2. உலகத்தின் இறுதிநாளில் கடவுள் தம் அளவற்ற.......உலகுக்குக் காட்டுவார்.

2 — 10 வி. வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நாம் வாழ்வதும், இயங்குவதும்..........

4. கடவுள் தம்..........மனிதனது வாழ்வை உருவாக்குகின்றார்.

5. கடவுளது அளவற்ற ஞானத்தால்..........தண்ணீரினின்று மீட்கப்பட்டார்.

6. ..........தம்முள் எல்லையற்ற இன்பத்தில் வாழ்கின்றனர்.

7. ..........மனம் திரும்புதலுக்கு மாதிரிகையாக விளங்குகின்றார்.

8. கடவுள் மனிதர் மேல் கொண்ட..........தேவபராமரிப்பு எனப்படும்.

9. இறைவனை முதன்முதல் தந்தையென்று..........அழைத்தார்.

10. இவ்வுலகில் துன்பங்களின் வழியாக நாம்..........வழிநடத்தப்படுகின்றோம்.

## பகுதி II

1. அ. இறைவனுக்கு தம் மக்கள் மட்டில் அன்புள்ள பராமரிப்பு உண்டென்று காட்ட வேதாகமத்திலிருந்து மூன்று உதாரணங்கள் தருக.

   ஆ. உமது வாழ்வில் இறைவன் அக்கறை கொண்டுள்ளார் என்பதை உணர்ந்த இரு அனுபவங்கள் தருக.

   இ. இறைவனின் பராமரிப்பைப் பற்றிய திருப்பாடல்கள் எவை?

2. அ. 'அன்பே இறைவன்' எனவே உமது வாழ்வில் நீர் எவ்வாறு அன்பைப் பகிர்ந்து வாழ்கின்றீர்?

   ஆ. இன்றைய சமுதாயத்தில் நிலவும் அன்புக்கு மாறான ஊழல்கள் எவை?

   இ. இவற்றை நீக்க இளைஞர் எவ்வழிவகைகளைக் கையாளலாம்?

3. அ. இறைவனின் தனிஇயல்புகளில் சிலவற்றைக் கூறுக.

   ஆ. இவ்வியல்புகளில் நீர் பங்குகொண்டுள்ளீர் என்பதை எவ்வாறு உணருகின்றீர்?

4. அ. பாவிகளை மீட்கவே கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார் என்பதற்கு நற்செய்திச் சான்றுகள் தருக.

   ஆ. இரக்கமற்ற ஊழியன் உவமையினால் கிறிஸ்து நமக்குப் படிப்பிப்பது என்ன?

   இ. உமது பகைவர்களுக்கு நீர் எவ்வாறு மன்னிப்பளித்து நட்புறவு கொள்வீர்?

5. இன்றைய அறிவியல் உலகில் படைப்பைப் பற்றிய திருச்சபையின் போதனைக்கு முரணான அபிப்பிராயங்களைக் கூறுபவர்களுக்கு நீர் கொடுக்கும் பதில் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் III

**மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

1, கடவுள் உலகைப் படைத்தது;

1. படைப்பின் தலைவனாக இருந்து பரிபாலிக்க
2. தமது நன்மைத்தனத்தை மனிதனுக்குப் பகிர்ந்து கொடுக்க
3. தமது படைப்பின் அழகை மனிதன் வியந்து போற்ற
4. மனிதன் தனது அறிவால் உலகைப் புதுப்பிக்க

2. மனிதனிலும் உயர்ந்த நிலையில் படைக்கப்பட்டவர்கள்;

1. தேவதூதர் 2. புனிதர்கள் 3. முனிவர்கள் 4. பக்தர்கள்

3. வேதாகமத்தில் விசுவாசத்தின் முதுபெரும் தந்தையாக விளங்குபவர்;

1. யோசேப்பு 2. மோயீசன் 3. ஆபிரகாம் 4. யாக்கோபு

4. திருமுழுக்கினால் இறைவாக்கு உரைக்கும் பணியை ஏற்றுக்கொண்ட நான்;

1. இறைவாக்கினரைப் பற்றிப் படித்து அறிந்துகொள்வேன்
2. இன்றைய சமுதாயத்தில் என்னை ஒரு தலைவனாகப் பயிற்றுவேன்
3. இறைவழிபாட்டு நிகழ்ச்சியில் ஆர்வத்துடன் பங்குபற்றுவேன்
4. இறைவனின் பிள்ளையாக வாழ்ந்து நற்சான்று பகருவேன்

5. மீட்பின் வரலாறு ஆரம்பிக்கப்படுவது

1. ஆதாம், ஏவாளின் படைப்பிலிருந்து
2. தேவதூதரின் பரிசோதனையிலிருந்து
3. ஆபிரகாமின் அழைப்பிலிருந்து
4. உலகப் படைப்பிலிருந்து

6. இறைவன் குலமுதுவர்களோடு உறவைப் புதுப்பிக்க எடுத்துக்கொண்ட சிறந்தவழி;

1. உடன்படிக்கை 2. பலி நிறைவேற்றுதல்
3. வழிபடுதல் 4. யாத்திரை செய்தல்

7. பத்துக் கற்பனைகள் நமக்குப் படிப்பிப்பவை;

1. ஞாயிறு கடன்திருநாட்களில் பலியில் பங்குபற்றுவது
2. இறைவனுக்குப் பயந்து பலி செலுத்துவது
3. தலைவர்களின் கட்டளைக்குப் பணிந்து நடப்பது
4. நாம் செய்யத் தகுந்தவற்றையும், செய்யத் தகாதவற்றையும் காட்டுவது

8. வேதாகமத்தில் நீதிமான் என்று அழைக்கப்படுபவர்;

1. திருமுழுக்கு அருளப்பர் 2. புனித சூசையப்பர்
2. தாவீது அரசர் 4. யோசுவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கு அருளப்பர் முக்கிய இடம் பெற்றது;
   1. கிறிஸ்துவின் சொந்த உறவினரானபடியால்
   2. கபிரியேல் வானதூதர் அவரைப்பற்றி முன்னுரைத்தபடியால்
   3. சிறுவயதிலேயே தவ வாழ்வை மேற்கொண்டபடியால்
   4. மெசியாவின் வருகைக்குத் தகுந்த ஆயத்தம் செய்தபடியால்

10. இறைவனின் மீட்புத் திட்டத்தில் இறையரசின் அடையாளங்கள்;
   1. கிறிஸ்துவின் மறைந்த வாழ்க்கை
   2. கிறிஸ்துவின் நிறைவான உபவாசம்
   3. கிறிஸ்துவின் அருங்குறிகள், உவமைகள்
   4. கிறிஸ்துவின் உன்னத செபங்கள்

11. 'வளர்ச்சியடைதலே எமது அழைப்பு' என்பதற்குக் கிறிஸ்து கூறிய உவமை;
   1. விளக்கின் உவமை 2. பொற்காசுகளின் உவமை
   3. விதைப்போன் உவமை 4. அநீத காரியஸ்தன் உவமை

12. கிறிஸ்துவின் மறைபொருளில் மரியாள் சிறப்பிடம் பெற்றுள். ஏனெனில்;
   1. மரியாள் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவள்
   2. மரியாள் நற்செய்தியை வாழ்ந்தவள்
   3. மரியாள் மாசில்லாமல் உற்பவித்தவள்
   4. மரியாள் வானதூதனின் வாழ்த்துரை கேட்டவள்

13. மலக்கியாஸ் இறைவாக்கினர் திருமுழுக்கு அருளப்பரைப் பற்றிக் கூறியது;
   1. ''இதோ நான் என் தூதனை உமக்கு முன் அனுப்புகிறேன்.''
   2. ''உன்னதத்திலிருந்து ஆவியானது நம்மேல் பொழியப்படும்.''
   3. ''சமாதானத்தின் தூதுவர் கதறி அழுகின்றனர்.''
   4. ''என் ஊழியனை நான் தேர்ந்துகொண்டேன்.

14. இயேசு உவமைகளின் வழியாக மக்களுக்குப் போதித்தது;
   1. உவமைகள் வழியாகப் பேசுவது யூத மக்களின் இயல்பு
   2. இறையரசின் மறை உண்மைகளை விளங்கவைப்பதற்காக
   3. தான் சிறந்த போதகரென்று மக்களுக்குக் காண்பிக்க
   4. மக்கள் தம் போதனைகளைக் கேட்டுப் பின்பற்ற

15. இஸ்ராயேல் மக்கள் கிறிஸ்துவைக் கடவுளின் மகன் என்று ஏற்றுக்கொள்ளாதது;
   1. அவர் சாதாரண மனிதனாகப் பிறந்ததால்
   2. அவர் நசரேத்தில் எளிமையாக வாழ்ந்ததால்
   3. அவர் யோர்தானில் திருமுழுக்குப் பெற்றதால்
   4. மக்கள் அவரைப் பற்றிக்கொண்டிருந்த மாறுபட்ட கருத்துக்களால்

16. இறைவனின் உன்னத அடையாளமாக விளங்கியவர் கிறிஸ்து. ஏனெனில்;
   1. இறைவன் யாரென்று வெளிப்படுத்தியவர் அவரே
   2. இறைவன் அன்புக்குரியவர் என்று அறிவித்தவர் அவரே
   3. இறைவன் தூய்மையானவர் என்று காட்டியவர் அவரே
   4. இறைவன் எங்கும் நிறைந்தவர் என்று போதித்தவர் அவரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. கிறிஸ்துவின் அருங்குறிகளை விஞ்ஞான ரீதியில் நோக்குபவர்கள்;
1. விண்வெளி ஆய்வாளர்கள் 2. திறனாய்வை மேற்கொள்பவர்கள்
3. விசுவாசக் குறைவுள்ளவர்கள் 4. அறிவாற்றல் கொண்டவர்கள்

18. கிறிஸ்துவின் உயிர்ப்பின் முன் அடையாளமாக விளங்குவது;
1. இறுதி இராவுணவு 2. உருமாற்றம்
3. ஜெருசலேம் பயணம் 4. திருமுழுக்கு

19. கிறிஸ்து தந்தையின் மகன் என வெளிப்படுத்துவது;
1. "இவரே என் பிரியகுமாரன் இவரில் நான் பூரிப்படைகிறேன்."
2. "உன்னதரின் மகன் இவரே"
3. "நீயோ பாலனே உன்னதரின் வாக்குரைப்பவன்"
4. "அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது."

20. "மெசியா வரும்போது ஏழைகளுக்குப் போதிப்பார்" என இறைவாக்குரைத்தவர்;
1. ஆமோஸ் 2. எசேக்கியேல் 3. எரேமியாஸ் 4. இசையாஸ்

## சுருக்கமான விடை தருக.

1. ஆபிரகாமை அழைத்த இறைவன் அவருக்குக் கூறிய ஆசிமொழிகள் எவை?
2. மோயீசன் தலைமையில் இஸ்ராயேல் மக்கள் பெற்ற உன்னதமான உறவு என்ன?
3. பழைய ஏற்பாட்டில் கடைசி நீதிபதியும், முதல் அரசனும் யாவர்?
4. வட அரசில் பணியாற்றிய இறைவாக்கினர்கள் யார்?
5. புதிய ஏற்பாட்டில் பாலைவனத்தில் எழுந்த கூக்குரல் என்ன?
6. மீட்புப்பணியில் மரியாளின் பங்கு என்ன?
7. கிறிஸ்துவின் தெய்வீகத்திற்குரிய அடையாளங்கள் எவை?
8. புதிய ஏற்பாட்டில் எத்தனை நூல்கள் உண்டு?
9. திருமுழுக்கு அருளப்பரின் திருவிழா எப்போ கொண்டாடப்படுகின்றது?
10. தாவீது அரசரைப் பற்றி இரண்டு வசனங்கள் எழுதுக.

## கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.

(உருமாற்றத்தின்போது, இறைத் தன்மையையும், அறிவிலிகள், மறை சாட்சிகள், பிரச்சினைகள், உயிர்ப்பு, இராயப்பர், புனிதத்துவத்தை, விசுவாசம், வன்மையாகக்)

1. ........................................ அடைவதற்கு எல்லோருக்கும் சமமான வாய்ப்பும், சுதந்திரமும் கிடைக்கின்றது.

2. கிறிஸ்துவின் ........................................ வழியாக அவரது மாண்பு புலப்படுகின்றது.

3. இயேசு கடவுளின் மகன் என ........................................ அறிக்கையிட்டார்.

4. கிறிஸ்துவில் ........................................ கொள்பவன் தீர்ப்பிடப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இயேசுவின் ........................................ இராயப்பரும், யாகப்பரும், அருளப்பரும் அவரோடு இருந்தனர்.

6. கிறிஸ்து உண்மையான கடவுள் என்பதற்கு ........................................ பலர் இரத்தம் சிந்தி சான்று பகர்ந்தனர்.

7. கிறிஸ்துவின் ஆள்த்தன்மையில் ........................................ மனிதத்தன்மையும் நிறைவாய் இணைந்திருந்தன.

8. எனது ஆன்மீக வாழ்வில் ........................................ வரும்போது மரியன்னையின் துணையை நாடுவேன்.

9. திருமுழுக்கு அருளப்பர் ஏரோதின் துர்ச்செயல்களை ........................................ கண்டித்தார்.

10. கடவுளை அறியாத மனிதன் இயல்பிலேயே ........................................ என ஞானகம ஆசிரியர் கூறுகின்றார்.

## பகுதி II

1. (அ) பழைய ஏற்பாட்டில் இறைவனின் அடையாளங்களாகிய குலமுதுவர்கள் யாவர்?
   (ஆ) ஆபிரகாம் தமது அழைப்பின் பணியை எவ்வாறு நிறைவேற்றினர்?
   (இ) நீர் இன்று சமுதாயத்தில் ஒரு தலைவனாக அழைக்கப்பட்டால் எவ்வாறு பணியாற்றுவீர்?

2. (அ) மீட்பின் வரலாற்றிலே முக்கியத்துவம் வாய்ந்த இறைவாக்கினர்கள் யார்?
   (ஆ) இவர்கள் எவ்வாறு இறைவனின் அடையாளமாக விளங்கினர்?

3. (அ) திருமுழுக்கு அருளப்பரின் வாழ்க்கையைப் பற்றிப் பத்து வரிக்குக் குறையாமல் எழுதுக?
   (ஆ) அவரின் சீரிய சமுதாயக் கொள்கைகள் இன்றைய உலகுக்கு எவ்வாறு அறைகூவுகின்றன?

4. (அ) இயேசுவின் அருங்குறிகள் இறையரசின் அடையாளமாக இருப்பது எவ்வாறு?
   (ஆ) படைத்தவரின் தெய்வீக வல்லமையைக் காட்ட கிறிஸ்து செய்த அருங்குறிகளில் ஒன்றை எழுதுக.
   (இ) அது வெளிப்படுத்தும் இறைப் பண்புகளைக் குறிப்பிடுக.

5. (அ) உவமைகளால் இறையரசின் உண்மைகள் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதற்கு இரு உதாரணங்கள் தருக.
   (ஆ) உண்மையான செபத்தின் பண்புகளைக் காட்டும் உவமைகள் எவை?
   (இ) ஒரு கிறிஸ்தவனின் செபத்துக்கு இவை எவ்வாறு துணைபுரிகின்றன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் IV

**மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

1. கிறிஸ்தவ சமுதாயத்தைப் புனிதப்படுத்தும் பொறுப்பைக் கொண்டது;
   1. திருச்சபை  2. பக்திச்சபை  3. துறவறசபை  4. யேசுசபை

2. திருச்சபை திருவருட்சாதனங்களை அளிக்கின்றது, ஏனெனில்;
   1. கிறிஸ்தவர்கள் பாவம் கட்டிக்கொள்ளாதிருக்க
   2. கிறிஸ்தவனுக்கு உரிய உரிமைகளைப் பெற்றுக் கொள்ள
   3. நாம் தெய்வீக உயிரைப் பெற்று முழுவளர்ச்சி பெற
   4. குருக்களுக்கும் மக்களுக்கும் இடையே உறவை ஏற்படுத்த

3. திருவருட்சாதனங்களில் செயலாற்றுபவர்;
   1. குருவானவர்  2. கிறிஸ்து  3. மறைஆயர்  4. பீடப்பணியாளர்

4. திருச்சபை நமக்குப் போதிக்கின்ற யாவும்;
   1. திருமறைநூலின் விளக்க உரைகள்  2. திருத்தந்தையின் அறிவுரைகள்
   3. புனிதர்களின் வாழ்க்கை வரலாறு  4. கடவுள் வெளிப்படுத்திய உண்மை

5. பரிசுத்த வேதாகம நூல்கள்;
   1. வேதாகம ஆசிரியர்களால் எழுதப்பட்டவை
   2. பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டவை
   3. ஆதிக்கிறிஸ்தவர்களின் தூண்டுதலால் எழுதப்பட்டவை
   4. அப்போஸ்தலர்களின் ஆர்வத்தினால் எழுதப்பட்டவை

6. வேதாகமத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியான் என்று கூறியவர்;
   1. புனித. சிறில்  2. புனித. அகுஸ்தீன்
   3. புனித. ஜெரோம்  4. புனித. பசில்

7. அன்னையும், ஆசிரியையும் என்ற சுற்றுமடலை எழுதிய பாப்பரசர்;
   1. 13-ம் சிங்கராயர்  2. 12-ம் பத்திநாதர்
   3. 6வது சின்னப்பர்  4. 23-ம் அருளப்பர்

8. திருச்சபையின் மேய்ப்புப்பணி என்பது;
   1. கிறிஸ்துவின் பணி திருச்சபை வழியாகத் தொடர்வது
   2. பிறர்நல சேவைகளில் முழு ஈடுபாடு கொள்வது
   3. ஞான மேய்ப்பர்களுக்கு இயன்ற உதவி செய்வது
   4. மறைபரப்பு நாடுகளில் போதிப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. திருச்சபை சமூக சேவைகளில் ஈடுபடுவது;
   1. பிறரின் பாராட்டுகளைப் பெறுவதற்காக
   2. நாட்டை முன்னேற்றி விருத்தி செய்வதற்காக
   3. இறையரசைப் பரப்புவதற்காக
   4. அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதற்காக

10. ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்க்கையைப் பற்றிக் கூறும் நூல்;
   1. லூக்காஸ் நற்செய்தி 2. அப்போஸ்தலர் பணி
   3. திருவெளிப்பாடு 4. மத்தேயு நற்செய்தி

11. இறைவனின் திட்டத்தை நிறைவேற்ற மக்களை ஊக்குவிப்பது;
   1. அரசாங்கம் 2. ஐக்கியநாடுகள் சபை;
   3. அபிவிருத்திச் சபை 4. திருச்சபை

12. கிறிஸ்து திருச்சபையில் செயலாற்றுகிறார் என்பதன் அடையாளம்;
   1. பாப்பரசர் உலகநாடுகளுக்கு பயணத்தை மேற்கொள்வது
   2. திருச்சபை வளர்ந்து பெருமளவில் பலனளிப்பது
   3. காலத்துக்குக் காலம் பொதுச்சங்கங்கள் நடைபெறுவது
   4. திருச்சபை இடையூறுகளை மேற்கொள்வது

13. ஞானமேய்ப்பர்களை நாம் அன்புடன் மதிக்கவேண்டும். ஏனெனில்;
   1. அவர்கள் வழியாகக் கிறிஸ்து பேசுகிறபடியால்
   2. அவர்கள் நன்மையானதைப் போதிக்கின்றபடியால்
   3. அவர்கள் திருச்சபையின் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதால்
   4. அவர்கள் மேலான ஆன்மீக அறிவுடையவர்களாயிருப்பதால்

14. பரிசுத்த வேதாகமத்தை நாம் விரும்பிப் படிக்க வேண்டும், ஏனென்றால்;
   1. உலகிலுள்ள எல்லா நூல்களிலும் அதி மேலானது
   2. இறைவன் மக்களிடையே செயலாற்றியதை அறிந்து கொள்ளலாம்
   3. நமது ஆன்மீக வாழ்விற்கு அது ஒளியாக இருப்பதால்
   4. அறியாதவர்களுக்கு வேதாகமத்தைப் போதிப்பதற்கு

15. திருச்சபையின் முக்கிய பணிகளிலொன்று;
   1. புதிய ஆலயங்களை நிர்மாணித்தல்
   2. சமூகப்பணிகளை மேற்கொள்ளுதல்
   3. ஒடுக்கப்பட்டோருக்கு உதவுதல்
   4. நற்செய்தியைப் போதித்தல்

16. கிறிஸ்துநாதர் தம் திருச்சபையை ஏற்படுத்தியபோது கூறிய வார்த்தை;
   1. ''என் ஆடுகள் என்னை அறியும் நான் அவர்களை அறிவேன்''
   2. ''இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ''உன் விசுவாசம் தளராதபடி உனக்காக மன்றாடினேன்''

4. ''வானகத்தின் திறவுகோல்களை உனக்குக் கொடுப்பேன்''

17. கிறிஸ்துவின் மறையுடலுக்குத் திருச்சபையை உருவகமாகக் கூறியவர்;

1. சின்னப்பர் 2. அருளப்பர் 3. இராயப்பர் 4. யாகப்பர்

18. இறைமக்கள் என்று அழைக்கப்படுபவர்கள்;

1. பங்குத் தந்தையைத் தலைவராகக் கொண்டவர்கள்
2. கிறிஸ்துவைத் தலைவராகக் கொண்டவர்கள்
3. ஒரே பங்கில் கூட்டாக வாழ்பவர்கள்
4. ஒரே தேவாலயத்தில் வழிபாடு செய்பவர்கள்

19. இவ்வுலகில் இறையரசின் அடையாளமாக விளங்குவது;

1. தேவாலயங்கள் 2. துறவறசபைகள்
3. திருச்சபை 4. வத்திக்கான் நகர்

20. திருவழிபாட்டில் சிறந்த முறையில் பங்குபற்ற;

1. நேரத்துடன் கோவிலுக்குச் செல்லுதல்
2. அழகான ஆடை அணிந்து செல்லுதல்
3. வாசகங்களுக்குக் கவனமாகச் செவிமடுத்தல்
4. புரிந்து, உணர்ந்து செயலாற்றிப் பங்கெடுத்தல்.

## சுருக்க விடை தருக.

1. கல்வாரி உடன்படிக்கைக்கு முன்னடையாளமாக இருந்தது என்ன?
2. உண்மையான திருச்சபையின் இயல்புகள் எவை?
3. திருச்சபை ஏன் மீட்பின் திருவருட்சாதனம் என்று அழைக்கப்படுகின்றது?
4. திருச்சபை ஐக்கியவாரத்தில் நாம் செய்யவேண்டியது என்ன?
5. மறைமாவட்டம் என்றால் என்ன? உமது மறைமாவட்டத்தின் பெயர் என்ன?
6. ஒருமுறை மாத்திரம் பெறக்கூடிய திருவருட்சாதனங்கள் எவை?
7. இலங்கையில் முதல்முதலாக கிறிஸ்தவ விசுவாசத்தைப் பரப்பிய மறைபரப்பாளர்கள் யார்?
8. குடும்பம் திருச்சபையின் ஓர் உயிருள்ள அணு என்பதன் பொருள் என்ன?
9. இலங்கையில் தமிழுக்கும் — மறைக்கும் பணிபுரிந்த மறைத்திரு அடிகளார்கள் யார்?
10. வழிபடும் திருச்சபை எச்செயல்கள் வழியாக இறைவனுக்கு வழிபாடு செய்கின்றது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.

(பொதுநிலையினருக்கு, இராயப்பரால், சுற்றுமடல்களென, திருச்சபைக்கு, உலக முடிவுவரை, அதிகாரத்தைப், முழுநம்பிக்கை, வேதாகமத்தின், மெய்விவாகம், கல்வாரிப்பலி)

1. இறையரசின் மதிப்பீடுகளை விளங்க.............................ஒளி மிகவும் அவசியம்.
2. இஸ்ராயேல் மக்கள்.................................... முன்னடையாளமாக விளங்கினர்
3. திருச்சபையானது இறைவனின் பராமரிப்பிலும், அன்பிலும் .................... வைத்து வாழுகின்றது.
4. ...........................என்னும் திருவருட்சாதனம் மணமக்களைப் புனித ஐக்கியத்தில் இணைக்கிறது.
5. ...................................நாளாந்தம் பலிப்பூசையில் நிறைவேறுகின்றது.
6. கிறிஸ்துநாதர் தம் திருச்சபை..........நீடித்திருக்க வேண்டுமென்று விரும்பினார்.
7. கத்தோலிக்க திருச்சபை மட்டுமே கிறிஸ்துநாதரின்................. பெற்றுள்ளது.
8. படைத்தலைவன் கோர்னேலியுஸ் என்பவர்................திருமுழுக்குப் பெற்றார்.
9. பரிசுத்த ஸ்தானத்திலிருந்து வெளிவரும் திருமுகங்கள் 18-ம் நூற்றாண்டில்தான் ................ ......... என அழைக்கப்பட்டன.
10. திருச்சபையின் அலுவல்களில் பங்குகொள்ள..............................கடமையுண்டு.

## பகுதி II

1. அ. திருச்சபையின் உள்ளியல்பை விளக்கும் உருவகங்கள் எவை?
   ஆ. திருச்சபை ஓர் ஆட்டுமந்தை என்பதிலிருந்து நீர் அறிவதென்ன?
   இ. நல்லாயனாகிய கிறிஸ்துவைப் புகழ்ந்து பாடும் பாடல்களைத் தருக?
2. அ. நீர் வாழும் மறைமாவட்டத்தில் பொதுநிலையினர் ஆற்றும் பணிகள் எவை?
   ஆ. நீர் கிறீஸ்தவ மாணவன் என்ற மட்டில் பங்குத் திருச்சபையின் பணிகளில் எவ்வாறு பங்கெடுப்பீர்?
3. அ. ஆதித்திருச்சபையில் இறைமக்களின் வாழ்வு எவ்வாறு மற்றவர்களுக்குச் சான்று பகர்ந்தது என்பதை விளக்குக.
   ஆ. நீர் உமது பாடசாலையில் எவ்வாறு உமது வாழ்வால் சகமாணவருக்குச் சான்று பகர்வீர்?
4. அ. திருச்சபை மக்களைப் புனிதப்படுத்தும் வழிவகைகள் எவை?
   ஆ. திருவருட்சாதனங்கள் என்றால் என்ன?
   இ. அருட்கருவிகள் சிலவற்றைக் குறிப்பிட்டு அவற்றின் கருத்தையும் எழுதுக
5. அ. திருச்சபையின் திருஆட்சிமுறையை வரிசைப்படுத்துக.
   ஆ. திருச்சபையில் குருக்களின் பணிகளைத் தொகுத்துக் கூறுக.
   இ. உமது பங்கிலுள்ள குருக்கள், துறவியர், திருத்தொண்டர்கள் பற்றி அறிந்து கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் V

## மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

1. முதல் பெற்றோர் தங்கள் சோதனை வேளையில்;
   1. ஒருவர் ஒருவர் மேல் நம்பிக்கை கொண்டார்கள்
   2. கடவுளின் வார்த்தையை மீறிப் பசாசை நம்பினார்கள்
   3. இன்ப - வனத்திலேயே தங்கியிருந்தார்கள்
   4. கடவுளின் நீதியை நன்குணர்ந்தார்கள்

2. ஆதிப் பெற்றோரின் பாவத்திற்கு இறைவன் காட்டிய மேலான இரக்கம்;
   1. அவர்கள் உயிர் வாழ உறைவிடம் அளித்தது
   2. நீடிய ஆயுளைக் கொடுத்தது
   3. இறைவனுக்குப் பலி செலுத்த ஆபேலை அளித்தது
   4. மீட்பரை அனுப்புவதாக வாக்குறுதி அளித்தது

3. மெசியா என்பதன் பொருள்;
   1. அனுப்பப்பட்டவர்  2. அபிஷேகம் செய்யப்பட்டவர்
   3. அழைக்கப்பட்டவர்  4. வாக்களிக்கப்பட்டவர்

4. உலகமீட்பரைப் பற்றி அதிகமாக முன்னறிவித்த இறைவாக்கினர்;
   1. இசையாஸ் 2. யோவேல் 3. மலக்கியாஸ் 4. எசேக்கியேல்

5. திருவருகைக்காலம் நமக்கு நினைவூட்டுவது;
   1. கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வை  2. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை
   3. கிறிஸ்துவின் பாடுகளை  4. கிறிஸ்துவின் பிறப்பை

6. ''வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடிகொண்டார்'' எனக் கூறும் நற்செய்தியாளர்;
   1. லூக்காஸ் 2. அருளப்பர் 3. மத்தேயு 4. மாற்கு

7. கடவுளுடைய திருமகன் மனிதனானது;
   1. அப்போஸ்தலர்களை உருவாக்கி உலகெங்கும் அனுப்ப
   2. உரோமை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற
   3. தம் தந்தையின் அரும்பெரும் திட்டத்தை நிறைவேற்ற
   4. திருச்சபையை ஏற்படுத்திப் பாதுகாக்க

8. கடவுளின் திருமகனுக்குத் தாயான மரியாள்;
   1. யூதப் பெண்ணாக வாழ்ந்தாள்
   2. அமல உற்பவியாகப் பிறந்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தேவாலயத்தில் வளர்க்கப்பட்டாள்
4. அரசர்கள் மரபில் தோன்றினுள்

9. கிறிஸ்து தமது பணியை இவ்வுலகில் தொடர்ந்து செய்ய;
1. அப்போஸ்தலர்களை அனுப்பினுர்
2. திருத்தந்தையர்களை அனுப்பினுர்
3. இறைவாக்கினர்களை அனுப்பினுர்
4. தேவதூதர்களை அனுப்பினுர்

10. திருமுழுக்கு அருளப்பர் தம் சீடர்களை இயேசுவிடம் அனுப்பியது;
1. தாம் கொண்ட சந்தேகங்களைப் போக்க
2. அவர் மெசியா என்பதை அவர்கள் அறிந்து அவரைப் பின்செல்ல
3. தம்மிலும் அவர் மேலானவர் என்பதை எண்பிக்க
4. அவரது அருங்குறிகளை நேரில் பார்க்க

11. கிறிஸ்து மரணம் வரையும் கீழ்ப்படிந்து;
1. மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாக விளங்கினுர்
2. அலகையின் சூழ்ச்சியை முறியடித்தார்
3. விண்ணரசை இவ்வுலகில் நிறுவினுர்
4. பரலோக தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினுர்

12. அன்னைமரி நம் வாழ்வுக்குச் சிறந்த மாதிரிகை ஏனெனில்;
1. இறைவார்த்தையை ஏற்றுக் கடவுளின் சித்தத்திற்குப் பணிந்தாள்
2. கடவுளின் திருமகனைப் பெற்றெடுத்தாள்
3. கற்புள்ள கன்னியாக எப்பொழுதும் வாழ்ந்தாள்
4. தாழ்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்கினுள்

13. ''நீங்களோ என்னை யாரென்று சொல்கின்றீர்கள்'' என்று இயேசு வினவியதற்கு இராயப்பர் அளித்த விடை;
1. நீர் இறைவனின் திருமகனுகிய கிறிஸ்து
2. உலகுக்கு மீட்பளிக்க வந்தவர்
3. நீர் கடவுளின் மெசியா
4. பாவிகளைத் தேடி வந்தவர்

14. வேதாகமத்தில் சூசை காப்பாற்றப்பட்டதிலிருந்து நாம் கற்றுக் கொள்வது;
1. இறைவன் தீமையை நன்மையாக மாற்றுகிறுர்.
2. சூசை எகிப்தில் வாழ இறைவன் விரும்பினுர்
3. சூசை பார்வோனுக்கு உதவி செய்ய இறைவன் விரும்பினுர்
4. பஞ்சத்தில் உணவளிக்க சூசையைத் தேர்ந்தெடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. இன்று இவ்வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று. ஏனெனில்;
  1. இவர்கள் தமக்குள்ளதை ஏழைகளுக்குக் கொடுத்தனர்
  2. இழந்து போனதைத் தேடி மீட்கவே மனுமகன் வந்துள்ளார்
  3. இவர்கள் ஆபிரகாமின் வழித்தோன்றல்கள்
  4. இவர்கள் ஒரே கடவுளை வழிபடுபவர்கள்

16. உலகமுடிவில் கிறிஸ்துவின் மீட்புவேலை முற்றுப்பெற்ற பின்;
  1. உலகை அழித்துத் தீர்ப்பிடுவார்
  2. அனைவரும் அவரின் குரலோசையைக் கேட்பர்
  3. கெட்டவர்களைத் தம்முன்னே அழைப்பார்
  4. புதிய படைப்பைத் தந்தையிடம் ஒப்படைப்பார்

17. பழையஏற்பாட்டின் பாஸ்கா நிகழ்ச்சிகளனைத்தும்;
  1. வரலாற்றில் கொண்டாடப்பட்டு வந்தன
  2. இஸ்ராயேல் மக்களுக்குப் பெருவாழ்வு அளித்தன
  3. கிறிஸ்துவின் பாஸ்காவிற்கு முன்னடையாளமாக இருந்தன
  4. தலைவர்களால் நினைவூட்டப்பட்டு வந்தன

18. இயேசு அனைத்துலகிற்கும் ஆண்டவர். ஏனெனில்
  1. படைப்பைப் புதுப்பித்து ஆட்சி செலுத்துகின்றார்
  2. பாவிகளுக்கு இரக்கம் காட்டி அன்பு செய்கின்றார்
  3. உலகம் முடியும் வரை நம்மோடு இருக்கின்றார்
  4. நற்கருணையில் உயிருள்ள உணவாகின்றார்

19. இயேசு தம் பாடுகள், மரணத்தின் வழியாக;
  1. தமது இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டார்
  2. மனுக்குலம் முழுவதற்கும் மீட்பளித்தார்
  3. தமது பகைவரைத் தோற்கடித்தார்
  4. மானிடத் துன்பங்களுக்கு விடுதலை அளித்தார்

20. இயேசுநாதர் பன்னிருவரை அனுப்பியது;
  1. புதுமைகளால் தமது புகழைப் பரப்ப
  2. பேய்களை ஓட்டும் அதிகாரம் அளிக்க
  3. இறையரசைப்பற்றிய செய்தியை அறிவிக்க
  4. மேலதிகமான சீடரைச் சேர்க்க

## சுருக்கமான விடை தருக.

1. கிறிஸ்மஸ் பண்டிகை நாட்களில் முக்கியமாக நாம் சிந்திக்க வேண்டியது என்ன?
2. எப்பொழுதுச் சங்கம் இயேசு கடவுளும், மனிதனும் என்ற உண்மையை மறைக் கோட்பாடாக வெளியிட்டது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இயேசுவை மக்கள் எப்பெயர்களால் அழைத்தார்கள்?

4. கிறிஸ்துவின் பாஸ்கா என்பது யாது?

5. பாஸ்காத் திருவிழிப்பன்று குருவானவர் பாஸ்காத் திரியில் குறிக்கும் அவ்வாண்டின் எண் எதனைக் குறிக்கின்றது?

6. உயிர்த்த கிறிஸ்துவின் பிரசன்னத்தை நாம் எவற்றின் வழியாக உணருகின்றோம்?

7. மனிதனின் முக்கியமான ஏழு தீயநாட்டங்கள் எவை?

8. மரியாள் இன்று நமக்கு எவ்வாறு இறைவனின் அடையாளமாக விளங்குகின்றாள்?

9. விசுவாசப் பிரமாணத்தின் நாலாம் சத்தியம் என்ன?

10. இயேசுவின் வாழ்விலிருந்து நீர் பின்பற்றக்கூடிய பண்புகள் எவை?

## கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.

(மறைபொருள், இறையரசைப்பற்றி, திருமுழுக்கு, இரக்கம், இதயசிந்தனைகள், பிறந்தநாள் விழா, பாவிகளை, மரியாள், கிறிஸ்து, மீட்பரைப்)

1. உலகெங்கும் மகிழ்வுடன் கொண்டாடப்படும் மாபெரும்..........கிறிஸ்மஸ் விழாவாகும்.

2. கடவுள் பாவிகளான மனிதர்கள் மேல்..........காட்டாவிட்டால் எவனும் விண்ணகம் சேரமுடியாது.

3. ''மனந்திரும்புங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கிவிட்டது'' என்று.......... இயேசு எடுத்தியம்பினார்.

4. மனிதனுடைய..........இளமை முதல் தீமையின் மீதே நாட்டம் கொண்டுள்ளது

5. கடவுளுடைய திருமகன் மனிதனானதும் நாம் முழுவதும் விளங்கிக்கொள்ள முடியாத..........

6. இயேசு..........பெற்ற பின்னர் பாலைவனத்தில் நாற்பதுநாள் உபவாசமிருந்தார்

7. ..........நாட்டு மக்களுக்கும் எக்காலமும் ஆசிரியராக விளங்குகின்றார்

8. காணாமற் போன ஆட்டைத் தேடிச் செல்லும் இடையனைப் போல் கிறிஸ்து எல்லா..........நாடிச் சென்றார்.

9. குலமுதுவர்களும் இறைவாக்கினரும்..........பற்றிய கருத்துக்களை உலகுக்கு அறிவித்தார்கள்.

10. ..........கடவுளின் தாயாக இருப்பதால் சம்மனசுகள், மனிதர் அனைவரிலும் மேலானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி II

1. அ. ஜென்ம பாவத்தினால் விளைந்த தீமைகள் எவை?

   ஆ. இத்தீமைகளில் இருந்து கிறிஸ்து எவ்வாறு நமக்கு விடுதலை அளித்தார்?

   இ. விரக்தியுற்றிருக்கும் உம் உடன் மாணவனுக்கு உயிர்த்த கிறிஸ்துவின் மகிழ்ச்சியை எவ்வாறு எடுத்துக் காட்டுவீர்?

2. அ. இயேசு தலைசிறந்த வழிகாட்டியும், ஒப்பற்ற தலைவரும் என்பதை அவரது வாழ்விலிருந்து எடுத்துக் காட்டுக.

   ஆ. உமது தலைவராகிய கிறிஸ்துவைப் பின்பற்றி ஆளுமை நிறைந்த இளைஞனாக எவ்விதம் வாழுவீர் என்பதைக் குறிப்பிடுக.

3. அ. இயேசு ஏன் போதகப் பணியைச் செய்தார்?

   ஆ. அவரது முக்கிய போதனைகள் யாவை?

   இ. அவரது போதனையைப் பிறர் அறிய என்ன முயற்சிகளில் ஈடுபடுவாய்?

4. அ. இயேசுவிடம் காணப்பட்ட எப்பண்புகள் மக்களை ஈர்த்தன?

   ஆ. இயேசு பகைவரைச் சந்தித்த விதம் யாது?

5. அ. திருச்சபையில் கிறிஸ்துவின் அன்பிற்காகத் தங்களை அர்ப்பணிப்பவர்கள் ஆற்றும் பணிகளை தொகுத்து எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினுப்பத்திரம் VI

**மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

1. திருமுழுக்கின் புதியவாழ்வில் நாம் பெற்றுக்கொள்வது;
   1. புதிய பெயர்
   2. ஞானப் பெற்ருேர்
   3. அருளுயிர்
   4. இறையரசு

2. திருமுழுக்கினுல் நாம் கடவுளின் ஆலயமாவது;
   1. நமது பாவங்கள் கழுவப்பட்டதனுல்
   2. மூவொரு கடவுள் நம்மில் வாழுகின்றபடியால்
   3. திருவருட்சாதனங்கள் ஆலயத்தில் அளிக்கப்படுவதால்
   4. நாம் தூய்மையடைந்து வாழ்வதனுல்

3. கிறிஸ்து உயிர்த்தபொழுது நமக்களித்த பாஸ்காக் கொடை;
   1. பச்சாத்தாபம் என்னும் திருவருட்சாதனம்
   2. நோயில்பூசுதல் என்னும் திருவருட்சாதனம்
   3. குருத்துவம் என்னும் திருவருட்சாதனம்
   4. திருமுழுக்கு என்னும் திருவருட்சாதனம்

4. ஒரு பாவி உண்மையாக மனம் வருந்தும்போது;
   1. அவன் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்கின்ருன்
   2. அவன் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது
   3. அயலவருடன் மீண்டும் சமாதானமாகிருன்
   4. அவனது உள்ளம் ஆறுதலடைகின்றது

5. நாம் இறைவனுக்குப் பொது ஆராதனை செலுத்த வேண்டும். ஏனெனில்;
   1. பொது ஆராதனையை மக்கள் விரும்புகின்றபடியால்
   2. பொது ஆராதனை மேலான வழிபாடாக இருக்கின்றபடியால்
   3. இறைவன் படைப்பின் தலைவனுக இருக்கின்றபடியால்
   4. நாம் சமுதாயத்தில் இணைந்து வாழுகின்றபடியால்

6. விக்கிரக ஆராதனை என்பது
   1. பிறசமய மக்களின் வழிபாட்டு முறை
   2. படைப்புப் பொருட்களைக் கடவுளாக நினைத்து வணங்குவது
   3. சிலைகளை ஏற்படுத்தி வழிபடுவது
   4. கோவில் திருப்பொருட்களை அவசங்கை செய்வது

7. கடவுளின் திருப்பெயரை நாம் போற்றவேண்டும். ஏனெனில்
   1. அவர் எல்லாவற்றையும் அறிபவராகையால்
   2. அவர் மேலான நாமத்தைக் கொண்டிருப்பதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அவர் அளவில்லாப் பரிசுத்தராகையால்
4. அவர் மீட்பரை அனுப்பியவராகையால்

8. பாவச்சோதனையினின்று விலகுவதற்குச் சிறந்த வழி

1. எப்போதும் சுறுசுறுப்புடன் வேலை செய்தல்
2. சோம்பல் அகற்றி விழிப்புடன் இருத்தல்
3. நண்பர்களுடன் அடிக்கடி உரையாடல்
4. பாவத்திற்கு ஏதுவானவைகளை விலக்கி நடத்தல்

9. கிறிஸ்தவர்களாகிய நமக்குப் பத்துக்கற்பனைகள்

1. விண்ணரசின் வழியைத் தெளிவாகக் காட்டுகின்றன
2. மோயீசனின் நன்மைத்தனத்தைத் வெளிப்படுத்துகின்றன
3. பாவம் கட்டிக்கொள்ளாதிருக்க வழி செய்கின்றன
4. அயலவருடன் சமாதானமாய் இருக்க உதவுகின்றன

10. ஒரு கிறிஸ்தவனுக்கு ஞாயிறுவாரம் மகிழ்ச்சிக்குரியது. ஏனெனில்

1. உல்லாசப் பொழுதுபோக்குகளில் செலவழிப்பதால்
2. ஞானக் காரியங்களில் ஆர்வமுடன் ஈடுபடுவதால்
3. கிறிஸ்துவின் உயிர்ப்பின் புதுப்படைப்பை நினைவுகூர்வதால்
4. கடினமான வேலையிலிருந்து ஓய்வு பெறுவதால்

11. கிறிஸ்தவ விசுவாச வாழ்வு என்பது

1. பக்திக்கடுத்த காரியங்களில் ஆர்வம் காட்டுவது
2. இயேசுவை ஏற்று அவருக்குத் தன்னைக் கையளிப்பது
3. துன்பதுரிதங்களில் பொறுமையாக இருப்பது
4. தேவையானவற்றையடைய விடாப்பிடியாய்ச் செபிப்பது

12. நம் விசுவாசம் தளர்ச்சியடைவதற்குக் காரணம்

1. தற்கால விஞ்ஞான பாடங்களைப் படிப்பது
2. கிறிஸ்துவின் மதிப்பீடுகளுக்கு வாழ்வில் முக்கியத்துவம் அளிக்காதது
3. பிறமதத்தவர்களோடு கலந்து கொள்வது
4. ஒழுக்கக் கேடான திரைப்படங்களைப் பார்ப்பது

13. நாம் பெற்றுக்கொண்ட விசுவாசத்தை உறுதிப்படுத்துவது

1. நம்பிக்கை 2. திடம் 3. தேவபயம் 4. பக்தி

14. இறைவனை அன்பு செய்கின்றோம் என்பதற்கு அடையாளம்

1. கோவிலுக்குச் சென்று வழிபடுதல்
2. நேர்த்திகளை நிறைவேற்றல்
3. திவ்விய நற்கருணை உட்கொள்ளுதல்
4. பிறரன்பைப் பேணுதல்

4—10 வி. வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. இறையன்பிற்காகத் தங்களை முழுதும் கையளித்தவர்கள்
1. மறைத் தொண்டர்கள் 2. திருச்சபையின் புனிதர்கள்
3. நற்செய்திப் பணியாளர்கள் 4. மறைநூல் அறிஞர்கள்

16. கிறிஸ்தவ குடும்பங்கள் இறைவனில் ஒன்றாகச் செபிப்பதால்
1. தேவையான நன்மைகளைப் பெற்றுக்கொள்வர்
2. அயலாருக்கு நன்முன்மாதிரிகை காண்பிப்பர்
3. அன்பைப் பகிர்ந்து ஒருங்கிணைந்து வாழ்வர்
4. வாழ்வின் பிரச்சனைகளை விடுவித்துக் கொள்வர்

17. பச்சாத்தாபத்தைப் பயனுள்ள முறையில் பெற அவசியமானது
1. இறைவனின் அன்பை நினைத்து மனம் வருந்துதல்
2. பாவத்தைச் சரியாக வெளிப்படுத்துதல்
3. உறுதியான தீர்மானங்களை எடுத்தல்
4. திருச்சிலுவையைப் பார்த்துச் செபித்தல்

18. முடிவில்லா வாழ்விலும் நம்மில் நிலைத்திருக்கும் கொடை;
1. விசுவாசம் 2. நம்பிக்கை 3. பொறுமை 4. பரம அன்பு

19. தபக்காலம் நமக்கு;
1. கிறிஸ்துவின் பாடுகளை நினைவூட்டுகின்றது
2. புதியவாழ்வுக்கு மனமாற்றம் அடைய வழிவகுக்கின்றது
3. உபவாச தபமுயற்சிகளை மேற்கொள்ள உதவுகின்றது
4. பாஸ்குக் கடமைகளை நிறைவேற்ற ஊக்குவிக்கின்றது.

20. நாம் எல்லோருக்காகவும் செபிக்க வேண்டுமென்று இறைவன் விரும்புகின்றார். ஏனெனில்;
1. இறைவன் எல்லோரையும் அன்பு செய்கின்றபடியால்
2. செபிக்கிறவர்களுக்காக மற்றவர்களும் செபிப்பார்கள் என்றபடியால்
3. எல்லோரும் பாவத்தை வெறுக்கின்றபடியால்
4. எல்லோரும் ஒருவரை ஒருவர் அன்பு செய்கின்றபடியால்

## சுருக்கமான விடை தருக

1. திருமுழுக்கின் அவசியத்தைப் பற்றிக் கிறிஸ்து யாருக்கு விளக்கமாகக் கூறினார்?
2. திருமுழுக்கினால் நாம் பெற்றுக்கொள்ளும் உரிமைகள் எவை?
3. விபூதிப் புதனன்று குரு நம் நெற்றியில் சாம்பலைப் பூசிக் கூறும் வார்த்தை என்ன?
4. இலங்கையில் அனுசரிக்கப்படும் மாமிசத் தவிர்ப்பு, உபவாசநாட்கள் எவை?
5. பத்துக்கற்பனைகளுள் முதல் மூன்று கற்பனைகளும் நமக்கு அறிவுறுத்துவது என்ன?
6. திருப்பலியின் இருபெரும் பிரிவுகள் எவை?
7. விசுவாசத்திற்காக மறைசாட்சியான ஒரு புனிதரின் பெயர் எழுதுக.
8. இலங்கையில் அனுசரிக்கப்படும் கடன்திருநாட்கள் எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. குருட்டுப்பக்தி அல்லது மூடப்பக்தி என்றால் என்ன?
10. கிறிஸ்தவ வாழ்வுக்குப் புனிதர்களின் வணக்கம் எவ்வழிகளில் பயனளிக்கும்?

## கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக

(விண்ணகச் செல்வங்களே, ஆராதனை, மரியாள், அருளின்றி, 50-ம் சங்கீதம், புதுப்பிறப்பு, பாஸ்குத் திருநாள், மறையுரையை, கிறிஸ்து, திருவருட்சாதனத்தையும்

1. திருமுழுக்குப் பெறுவதற்குமுன் மற்ற எந்த .......... பெறக்கூடாது.
2. பாஸ்காத் திருவிழிப்பு வழிபாட்டு வாசகங்கள் .......... வாழ்வின் கருத்தை எடுத்துக் கூறுகின்றன.
3. கடவுளைத் தவிர மற்றெவருக்கும் .......... செலுத்தக் கூடாது
4. எல்லாத் திருநாட்களிலும் பழமையானதும், சிறந்ததுமாயிருப்பது..........
5. திருப்பலி வழிபாட்டில் குரு அளிக்கும் .......... நாம் கவனமாகக் கேட்கவேண்டும்
6. நமது நம்பிக்கை நிறைவேறும் என்பதற்குப் பொறுப்புடையவர்..........
7. கடவுளுடைய .......... நாம் ஒன்றையும் விசுவசிக்க முடியாது.
8. .......... விசுவாச வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றாள்.
9. கடவுள் நமக்கு வாக்களித்தவைகளுள் முக்கியமானவை ..........
10. மனம் வருந்தும் பாவி செபிக்க வேண்டிய சங்கீதம் ..........

## பகுதி II

1. அ. திருமுழுக்கினால் நாம் பெற்றுக்கொண்ட கடவுளைச் சார்ந்த புண்ணியங்கள் எவை?
   ஆ. இவற்றில் நீர் வளர்ந்து கிறிஸ்தவ வாழ்வில் முதிர்ச்சி பெற எவ்வாறு செயற்படுவீர்?
2. அ. கிறிஸ்து தம் வாழ்வில் செபித்த இரு சந்தர்ப்பங்கள் தருக.
   ஆ. உண்மையான செபத்தின் பண்புகள் எவை?
   இ. நாட்டை ஆள்வோருக்காக எவ்வாறு செபிப்பீர்?
3. அ. புதுவாழ்வுக்கு மனமாற்றம் அவசியம் என்பதை இயேசு எவ்வாறு கூறியிருக்கின்றார்?
   ஆ. பாவசங்கீர்த்தனம் அவசியம் இல்லை என்று கூறும் இளைஞனுக்கு நீர் அளிக்கும் பதில் என்ன?
4. அ. மூன்றாம் கற்பனையை எழுதுக.
   ஆ. ஞாயிறு திருப்பலியில் நீர் எவ்வாறு செயலாற்றிப் பங்கெடுப்பீர்?
   இ. வானொலி, தொலைக்காட்சியில் பலிபூசையைக் கேட்டுத் திருப்பலிக் கடமையை நிறைவேற்றலாமா?
5. அ. திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பிக்கும் சந்தர்ப்பங்களெவை?
   ஆ. பரந்து வாழும் குடியேற்ற புதிய கிறீஸ்தவ சமுதாயத்தின் விசுவாசத்தை வளர்ப்பதற்கு ஏதுவான வழிவகைகள் எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் VII

**மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

1. மனித வளர்ச்சி தடைப்படுவதற்கு அடிப்படைக் காரணம்;
   1. இயற்கைச் செல்வங்களும், விஞ்ஞான ஆராய்ச்சிகளும்
   2. புதிய கண்டுபிடிப்புக்களும், அணுப்பரிசோதனைகளும்
   3. தன்னலவிருப்பும், குறுகிய மனப்பான்மையும்
   4. நாடுகளின் இணைப்பும், தொடர்புச் சாதனங்களும்

2. ஒருவன் இறையரசை அடைய வேண்டுமானால்;
   1. சமூக விருத்திக்காக உழைக்க வேண்டும்
   2. கிறிஸ்துவின் கொள்கை அடிப்படையில் வாழவேண்டும்
   3. தானதருமங்கள் செய்ய வேண்டும்
   4. பக்திச் சபைகளில் பணிபுரிய வேண்டும்

3. முழுமனிதனின் விடுதலைக்காக உழைப்பவர்கள்;
   1. திருச்சபைப் பணியாளர்கள் 2. அரசியல்வாதிகள்
   3. அறிவியல் நிபுணர்கள் 4. சமூகநல சேவையாளர்கள்

4. நாம் மற்ற மனிதர்களோடு கூடிச் சமூகமாக வாழ்வதினால்;
   1. நம்மில் உள்ள திறமைகளை வளர்த்துக்கொள்ள முடியும்
   2. எதிரிகளின் தாக்குதலினின்று தப்பி வாழ முடியும்
   3. தொழில் வாய்ப்புகள் பெற முடியும்
   4. எல்லோரும் நண்பர்களாக வாழமுடியும்

5. இறைவனிடம் சலமோன் அரசன் கேட்ட வரம்;
   1. திடம் 2. ஞானம் 3. செல்வம் 4. வீரம்

6. ஒருவன் தன் மனச்சான்றின் தீர்வுக்கு எதிராக நடக்கும்போது;
   1. உள்ளத்தில் அமைதியற்று வாழ்கின்றான்
   2. கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்கின்றான்
   3. பிறரின் நன்மையில் வெறுப்புக் கொள்கின்றான்
   4. சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்கின்றான்

7. சுத்தகருத்தோடு வேலை செய்தல் என்பது;
   1. இறைவனின் மகிமைக்காகச் செய்தல்
   2. பிறரின் புகழ்ச்சிக்காகச் செய்தல்
   3. மன அமைதிக்காகச் செய்தல்
   4. உள்ள மகிழ்ச்சிக்காகச் செய்தல்

8. பரிசுத்த ஆவியைப் பெற்ற அப்போஸ்தலர்கள்;
   1. அச்சமின்றித் துணிவுடன் வாழ்ந்தார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஆளுநர்களுக்கு அறிவுரை அளித்தார்கள்
3. விசுவாசத்திற்காகத் தங்கள் உயிரையே அர்ப்பணித்தார்கள்
4. துன்புறுத்தப்பட்டோருக்கு ஆறுதல் அளித்தார்கள்

9. பரிசுத்த ஆவியின் வருகையைப் பற்றி முன்னுரைத்த இறைவாக்கு

1. யோவேல் ஆகமம்
2. சக்கரியாஸ்
3. மக்கபேயர்
4. மலக்கியாஸ்

10. பரிசுத்த ஆவியின் நற்செய்தி என்று அழைக்கப்படுவது;

1. திருவெளிப்பாடு
2. அப்போஸ்தலர்பணி
3. லூக்காஸ் நற்செய்தி
4. மத்தேயு நற்செய்தி

11. உறுதிப்பூசுதல் என்ற திருவருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்ட நான்;

1. எக்காரியத்திலும் துணிவுடன் செயற்படுவேன்
2. கல்வியில் ஆர்வம் கொண்டு முன்னேறுவேன்
3. பொறுப்புடன் அப்போஸ்தலிக்க சேவையில் ஈடுபடுவேன்
4. துன்பங்களைப் பொறுமையோடு சகித்துக் கொள்வேன்

12. கிறிஸ்தவன் சலுகைகளை அனுபவித்து பொறுப்புக்களை உதறித் தள்ளும்போது;

1. சமூகப் பிளவுகளையும், சீர்கேடுகளையும் உருவாக்குகின்றான்
2. ஆடம்பர வாழ்க்கைக்கு வழிவகுக்கின்றான்
3. குறுகிய மனப்பான்மையை வளர்க்கின்றான்
4. மற்றவர்களின் வாழ்வுக்கு இடறலாயிருக்கின்றான்

13. உலகில் கடவுளின் அடையாளமான கிறிஸ்தவனின் கடமை;

1. உலகைப் பாவத்திலிருந்து விடுவித்தல்
2. சமூக வளர்ச்சிக்காக உழைத்தல்
3. நீதிக்காகப் போராடுதல்
4. திருச்சபையின் மீட்புச் செயலில் பங்குகொண்டு பணிபுரிதல்

14. திருச்சபையின் பணி வளர்ச்சியடைவது;

1. மறைபரப்பாளரின் முயற்சியினால்
2. பரிசுத்த ஆவியின் செயலாற்றலால்
3. பரிசுத்த பாப்பரசரின் வழிநடத்துதலினால்
4. இறைமக்களின் செபத்தினால்

15. இயற்கை வளங்கள் மட்டில் கிறிஸ்தவனின் பொறுப்பு;

1. வளங்களைப் பெருக்கி நிதிகளைத் திரட்டுதல்
2. தங்கள் உறவினர்க்குப் பங்கீடு செய்தல்
3. அனைவர்க்கும் உரியதென்று பகிர்ந்து வாழ்தல்
4. உதவி செய்பவர்களுக்கு வெகுமதியாக அளித்தல் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. நம் உடலையும், உயிரையும் புனிதமாக வைத்திருக்க வேண்டும். ஏனென்றால்;

1. நாம் சுகபலத்தோடு வாழ்வதற்காக
2. பிறருக்குச் சேவை செய்வதற்காக
3. மிகுந்த அழகைப் பெறுவதற்காக
4. இறைவன் மகிமையுடன் அதனை உயிர்த்தெழச் செய்வதற்காக

17. இறைவன் மனிதனுக்கு அளித்த மிக உயர்ந்த மதிப்புள்ள நன்கொடைகள்;

1. உடலின் சக்திகள் 2. அறிவின் சக்திகள்
3. இயற்கைச் சக்திகள் 4. அணுவின் சக்திகள்

18. கிறிஸ்தவனின் பெந்தக்கோஸ்து நாள்;

1. பரிசுத்த ஆவியின் திருநாள் 2. உறுதிப்பூசுதல் பெற்ற நாள்
3. புதுவாழ்வு இயக்கத்தில் சேர்ந்தநாள் 4. திருமுழுக்குப்பெற்றநாள்

19. இன்றைய திருச்சபையின் மறுமலர்ச்சிக்குக் காரணமாயிருந்தது;

1. 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கம்
2. உலக இயக்க ஆற்றல்கள்
3. நாடுகளிடையே உள்ள நேச தேச உறவு
4. கிறிஸ்தவ மக்களின் விழிப்புணர்ச்சி

20. ''யார் கடவுளுடைய பிள்ளைகளாயிருக்கின்றார்களோ அவர்களுடைய உள்ளங்களில்'';

1. மகிழ்ச்சி நிறைந்திருக்கிறது 2. துன்பம் நீங்குகிறது
3. அமைதி நிலவுகிறது 4. பரிசுத்தஆவி குடிகொள்கின்றார்

## சுருக்கமான விடை தருக

1. இறையரசின் இரு மதிப்பீடுகளை எழுதுக?
2. திருச்சபையின் ஆயர்களின் திருப்பணி என்ன?
3. சமூக சேவைக்கும், அப்போஸ்தலிக்க சேவைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
4. மக்கள் முன்னேற்றம் என்ற சுற்றுமடலை எழுதிய திருத்தந்தை யார்?
5. மனச்சான்றுக்கு வழிகாட்டக்கூடியவைகள் எவை?
6. கிறிஸ்து அலகையால் சோதிக்கப்பட்டதிலிருந்து அவர் நமக்குக் காட்டும் மாதிரிகை யாது?
7. பரிசுத்தஆவியின் வருகையில் பின்வரும் அடையாளங்கள் எவற்றைக் குறிக்கின்றன
   1. வலுத்த காற்று 2. நெருப்பு 3. நாவுகள்
8. உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனத்தை நிறைவேற்றுவது யார்? திருத்தைலம் பூசும்போது ஆயர் உச்சரிக்கும் வார்த்தை என்ன?
9. பரிசுத்த ஆவியின் கொடைகளையும், (பலன்களையும்) கனிகளையும் குறிப்பிடுக?
10. திருச்சபையில் பரிசுத்த ஆவியின் திருவிழா எப்போ கொண்டாடப்படுகின்றது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக

(நிறைவாக்குகின்றது, பரிசுத்தஆவியின், உன்னத அடையாளமாக, புனித, சின்னப்பர், பரிசுத்த ஆவியை, நற்செய்திப் போதக, திருச்சபைத்தலைவர்களிலும், பிறப்பு, குருக்கள், கொடிய பாவமாகும்)

1. பெந்தேக்கோஸ்து தினம் பரிசுத்த அன்னையாம் திருச்சபையின்.....நாளாகும்.
2. மறையாயரின் மூவித அதிகாரங்களில்.......... பங்கெடுக்கின்றனர்.
3. ஒருவன் தன் சொந்த உயிரை மனது பொருந்தி மாய்த்துக்கொள்வது மிகக்....
4. அப்போஸ்தலர்களின் பணிகளின் அடித்தளமாக விளங்கிய ஏழ்மை, தூய்மை, கீழ்ப்படிவு இன்றைய..........பிரதிபலிக்கின்றன.
5. பரிசுத்த பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பரின் செயல்முறைகள்.....நோக்கத்தையே எடுத்துக் காட்டுகின்றன.
6. ..........அருளால் நாம் ஒரு சமூகமாக இணைக்கப்படவும், மீட்படையவும் முயற்சிக்கின்றோம்.
7. உலக மீட்பராகிய இயேசுக்கிறிஸ்துவின் .......... திருச்சபை திகழ்கின்றது.
8. ''நீங்கள் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் கடவுளுடைய மகிமைக்காகச் செய்யுங்கள்'' என்று .......... கூறுகிறார்.
9. மறைஆயர் உறுதிப்பூசுதல் பெறுவோர் மீது கைகளை வைத்து......அனுப்பும்படி மன்றாடுகின்றார்.
10. உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனம் திருமுழுக்கு என்னும் திருவருட்சாதனத்தை..........

## பகுதி II

1. அ. திருச்சபையில் புதிய சமுதாயம் பிறந்தது எப்போ?
   ஆ. பரிசுத்த ஆவியின் வருகையினால் அப்போஸ்தலர்கள் எவ்வாறு புதுவாழ்வைப் பெற்றனர்?
   இ. பரிசுத்தஆவி புதியவாழ்வுக்கு உம்மை எவ்வாறு வழிநடத்திச் செல்கின்றார்?
2. அ. நம் உயிரையும், உடல் நலத்தையும் பற்றி நாம் ஏன் அதிக அக்கறை கொள்ள வேண்டும்?
   ஆ. இன்றைய இளைஞரின் ஆளுமை வளர்ச்சிக்கு உல்லாசப் பொழுதுபோக்குகள் துணைபுரிகின்றனவா என மதிப்பீடு செய்க.
   இ. வாழ்க்கையில் மனமுடைந்து தற்கொலை செய்யக் கருத்தாயிருக்கும் நீர் அறிந்த நண்பனுக்கு எவ்வாறு ஆறுதல் அளிப்பீர்?
3. அ. படைப்பைப் புனிதப்படுத்துதல் என்றால் என்ன?
   ஆ. சமுதாயத்தின் தேவைகளில் கிறிஸ்தவன் என்றமட்டில் உமக்குள்ள கடமைகள் யாவை?
4. இன்றைய சமுதாய வாழ்வின் நோக்கங்களுக்கு ''கடவுளின் அரசையே முதலில் தேடுங்கள்'' என்ற கிறிஸ்துவின் திருமொழி எவ்வாறு சவாலாக அமைகின்றது?
5. உலகைப் புதுப்பித்துப் புனிதப்படுத்தும் பரிசுத்தஆவிக்கு ஒரு செபவழிபாடு தயாரிக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் VIII

**மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

1. அப்போஸ்தலர்கள் நோயில்பூசுதலைக் கொடுத்தார்கள் என்பதற்கு ஆதாரமாயிருப்பது;
   1. அப்போஸ்தலரான யாகப்பரின் கூற்று
   2. மரபு வழிவந்த பாரம்பரியம்
   3. சீடர்கள் பின்பற்றிய செயல்முறை
   4. கிறிஸ்துநாதர் கூறிய படிப்பினை

2. நோயில்பூசுதல் பெறுகின்றவன்;
   1. உடலைத் தூய்மையாக வைத்திருக்கவேண்டும்
   2. தன் பாவங்களுக்காக மனம் வருந்தவேண்டும்
   3. குருவை வரவேற்க ஆயத்தமாயிருக்கவேண்டும்
   4. மனத்திடனை இழந்துவிடாதிருக்க வேண்டும்

3. மறைசாட்சிகள் கிறிஸ்துவுக்காகச் சிந்திய இரத்தம்;
   1. மக்கள் அனைவரையும் மனம்திருப்பியது
   2. பிறமத அரசர்களைத் திருச்சபையில் இணைத்தது
   3. ஆதிக்கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தியது
   4. திருச்சபைத் தலைவர்களைத் திடப்படுத்தியது

4. இளைஞருக்கு மாதிரிகையான புனித. அக்னேசின் வாழ்வின் மேலான பண்பு;
   1. வீரத்துவமான மரணம்
   2. தியாகம் நிறைந்த வாழ்வு
   3. அதிசயமான ஆன்மீக ஆற்றல்
   4. தூய்மையான பேரழகு

5. கிறிஸ்தவ அர்ப்பணம் என்பது;
   1. காணிக்கைகளைத் தவறாது ஒப்புக்கொடுப்பது
   2. நேர்த்திகளைக் குறைவின்றிச் செலுத்துவது
   3. அதிசயமான ஆன்மீக ஆற்றல்
   4. தூய்மையான பேரழகு


5. கிறிஸ்தவ அர்ப்பணம் என்பது;
   1. காணிக்கைகளைத் தவறாது ஒப்புக் கொடுப்பது
   2. நேர்த்திகளைக் குறைவின்றிச் செலுத்துவது

   3. தவஒழுங்குகளை அனுசரிப்பது
   4. மற்றவர்களுக்காகத் தன்னைக் கையளிப்பது

6. நற்செய்தித் தூதுவர்களுக்குப் பாதுகாவலராக விளங்கும் புனிதை;
   1. புனித. அக்னேஸ் அம்மாள்
   2. புனித. சின்னத்திரேசம்மாள்
   3. புனித. மொனிக்கம்மாள்
   4. புனித. நீற்றம்மாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. புனித. வின்சென்டிபோல் சபையினர் ஆற்றும் பணிகள்;

1. சிறுவர்களுக்கு மறைக்கல்வி கற்பித்தல்
2. குருத்துவக் கல்லூரிகளைக் கட்டி எழுப்புதல்
3. ஏழைகள், நோயாளருக்குப் பணிபுரிதல்
4. உயரிய கல்லூரிகளில் படிப்பித்தல்

8. புனிதர்களின் சமுதிதப் பிரயோசனம் என்றால்;

1. எல்லாக்கால இனமக்களும் கிறிஸ்துவில் ஒன்றிணைதல்
2. விண்ணுலகில் புனிதர்களின் ஐக்கியம்
3. கடவுளின் மகிமைக்கான உழைப்பின் பயன்
4. இறைமக்களின் துன்பத்தின் பேறுபலன்

9. மனிதன் மற்றவர்களோடு சேர்ந்து வாழும் இயல்புடையவன் என்று கூறும் வேதாகம வார்த்தை;

1. "ஒருவர் ஒருவருக்கு அன்பு காட்டுங்கள்"
2. "ஒவ்வொருவரும் தன்னலத்தை நாடாது பிறர்நலத்தை நாட வேண்டும்"
3. "உலகம் முடியும் மட்டும் உங்களோடு இருப்பேன்"
4. "மனிதன் தனிமையாக இருப்பது நன்றன்று"

10. ஒரு சமுதாயம் ஒழுங்காக இயங்குவதற்கு உறுப்பினர்கள்;

1. சட்டதிட்டங்களுக்குப் பணிந்து நடக்க வேண்டும்
2. தங்கள் அலுவல்களில் கருத்தாயிருக்க வேண்டும்
3. தங்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்
4. ஒழுங்குவிதிகளைத் திறனாய்வு செய்யவேண்டும்

11. பெற்றோர், பெரியோரை மதித்துவாழ வேண்டும், ஏனெனில்;

1. அவர்கள் நம்மை அன்பு செய்பவர்கள்
2. தேவையானவற்றைக் கொடுத்து உதவுபவர்கள்
3. அவர்கள் நம்மை நல்வழியில் நடத்துபவர்கள்
4. அவர்கள் இறைவனின் பிரதிநிதிகள்

12. நாட்டுத்தலைவர்கள் அதிகாரத்தை;

1. ஆளுநரிடம் இருந்து பெறுகின்றனர்
2. இறைவனிடம் இருந்து பெறுகின்றனர்
3. வம்சாவழியாகப் பெறுகின்றனர்
4. குடிமக்களிடமிருந்து பெறுகின்றனர்

13. தம்பதிகள் மெய்விவாகம் என்னும் திருவருட்சாதனத்தைப் பெறும்போது;

1. அருள்நிலையில் இருத்தல் வேண்டும்
2. திருமண ஆயத்தங்களோடு இருத்தல் வேண்டும்
3. சாட்சிகளோடு இருத்தல் வேண்டும்
4. ஆலயத்தில் சமூகமாக இருத்தல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. திருமணத்தைத் திருவருட்சாதனமாக உயர்த்தியவர்;

1. மணமக்கள் 2. கிறிஸ்து 3. பாப்பரசர் 4. குருவானவர்

15. கத்தோலிக்க திருமணம் பயனுள்ளதாயிருக்க;

1. போதியபணம், வாழ்க்கைவசதி வேண்டும்
2. பலபண்புகள் இணைந்த விவாகப் பொருத்தம் வேண்டும்
3. உயிருள்ள விசுவாசமும் உண்மையான அன்பும் வேண்டும்
4. உடல்நலமும் பேரழகும் வேண்டும்

16. நாம் அயலாரின் உடலையும், உயிரையும் மதிக்க வேண்டும். ஏனெனில்;

1. பல ஆற்றல்கள் திறமைகளைக் கொண்டிருப்பதால்
2. அயலார் நம்மை மதிக்கின்றவர்களாயிருப்பதால்
3. மற்றவர்களுக்கு நன்மைசெய்பவர்களாய் இருப்பதால்
4. கடவுளின் முன் மிக்க மதிப்புக்குரியவர்களாயிருப்பதால்

17. நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைப்பது நமது கடமை. ஏனெனில்

1. நாம் நாட்டின் குடிமக்களாயிருப்பதால்
2. கடவுளின் படைப்பில் நாம் பங்கு பெறுவதால்
3. நாம் அரசினருக்கு வரி செலுத்துவதால்
4. நமது வருங்கால வாழ்வை வளப்படுத்த விரும்புவதால்

18. கிறிஸ்தவ உழைப்பாளிகளுக்கு வழிகாட்டியாக விளங்கும் புனிதர்;

1. புனித. இராயப்பர்
2. புனித. சூசையப்பர்
3. புனித. அந்தோனியார்
4. புனித. யூதாததேயு

19. உலக நன்மைகளை இறைவன் நமக்குத் தருவது;

1. நாம் விடாமுயற்சியுடன் கேட்கின்றபடியால்
2. நாம் வலுவற்றவர்களாக இருக்கின்றபடியால்
3. நமது ஆன்ம நலனுக்குப் பயனளிக்கின்றபடியால்
4. நன்மைகள் எல்லோருக்கும் பொதுவாக இருக்கின்றபடியால்

20. சமுதாயத்தில் வாழும் நான்;

1. சமூக நீதி, நன்மைக்காக உழைப்பேன்
2. அயலவருடன் போட்டியிட்டு முன்னேறுவேன்
3. சமூக வைபவங்களில் கலந்துகொள்வேன்
4. பெரியோர்களை வரவேற்றுக் கௌரவிப்பேன்

## சுருக்கமான விடை தருக

1. நோயாளிகளின் அப்போஸ்தலத்துவம் என்றால் என்ன?
2. துறவிகள் கடைப்பிடித்து வாழும் நற்செய்தி அறிவுரைகள் எவை?
3. இலங்கையிலிருக்கும் காட்சித்தியான துறவறசபைகள் எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. புனித. சின்னத்திரேசம்மாள் எவ்வாறு சிறியவழிகளால் இறைவனை அன்பு செய்தாள்?
5. அன்பின் கீழ்ப்படிதலுக்குச் சிறந்த மாதிரிகையாக விளங்கியவர் யார்?
6. விசுவாசப்பரப்புதல் சபை என்றால் என்ன?
7. இன்றைய குடும்பங்களில் சகோதர அன்பு குறைபடுவதற்கான காரணங்கள் இரண்டு தருக.
8. இன்றைய இளைஞர்மட்டில் பெற்றோருக்குரிய கடமைகள் மூன்று தருக.
9. அன்னை திரேசாளின் அன்புப் பணிகள் எவை?
10. உமது வீட்டிலிருக்கும் வயோதிபர் மட்டில் உமக்கு இருக்கும் கடமைகள் எவை?

## கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக

(விண்ணரசில், இளைஞருக்கு, உழைப்பு, மறைசாட்சிகள், கீழ்ப்படிந்திருங்கள், குடும்பம், புகலிடம், சகோதரரும், புனித. வின்சென்ற், திருவருட்சாதனத்தை)

1. ..........நமக்கு இம்மைக்கும், மறுமைக்கும் நன்மை பயக்கின்றது.
2. உடன்படிக்கை செய்யும் திருமணத் தம்பதிகள் மெய்விவாகம் என்னும்.......... நிறைவேற்றுகின்றனர்.
3. கிறிஸ்துநாதர் நமது..........நண்பருமானார்.
4. பிரான்ஸ் நாட்டிலே டாக்ஸ் என்னும் நகரிலே..........பிறந்து வளர்ந்தார்.
5. "நீங்கள் குழந்தைகளாக மாறாவிடில் .......... நுழையமாட்டீர்கள்" என்று இயேசு கூறினார்.
6. புனித. ஞானப்பிரகாசியார்..........பாதுகாவலராக விளங்குகின்றார்.
7. திருச்சபையின் தொடக்ககாலத்தில் எண்ணற்ற..........விசுவாசத்துக்காக இரத்தம் சிந்தி மரித்தனர்.
8. "பிள்ளைகளே எல்லாவிதத்திலும் பெற்றோருக்கு.........." இது ஆண்டவருக்கு உகந்ததென்கிறார் புனித. சின்னப்பர்.
9. இவ்வுலகில் மூவொரு கடவுளின் அன்பைப் பிரதிபலிப்பது..........
10. அகதிகளுக்குப்..........கொடுப்பது ஏழு இரக்கச் செயல்களில் ஒன்று.

## பகுதி II

1. அ. கிறிஸ்துவின் சீடனாக இருப்பதற்குரிய தகுதிபற்றி புனித லூக்காஸ் நற்செய்தியில் கூறியிருப்பதென்ன?

   ஆ. திருமுழுக்கு அழைப்பை நிறைவாக வாழத் துறவிகள் அழைக்கப்படுகின்றார்கள் என்பதை இன்றைய திருச்சபையின் கருத்துக்களிலிருந்து எடுத்துக் காட்டுக.

   இ. நீர் ஒரு குருவாக அல்லது துறவியாக வர அழைக்கப்படுவதாக உணர்ந்தால் என்ன செய்வீர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அ. நாலாம் கற்பனையைத் தருக.

ஆ. பாடசாலையில் உமது ஆசிரியரை நீர் எவ்வாறு மதித்து நடப்பீர்?

3. அ. சரியான முறையில் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள நேர்மையான மனச்சான்று அவசியம் என்பதை விளக்குக.

ஆ. கிறிஸ்துவின் அழைப்பிற்கேற்ப அப்போஸ்தலர்கள் தங்கள் பொறுப்புக்களை எவ்வாறு ஏற்றுக்கொண்டார்கள்?

இ. உமது குடும்பத்தில் உமக்குள்ள பொறுப்புக்கள் எவை? அதை எவ்வாறு நிறைவேற்றுவீர்?

4. அ. மெய்விவாகம் என்னும் திருவருட்சாதனத்தால் திருமணத் தம்பதிகள் ஏற்கும் பொறுப்புக்கள் எவை?

ஆ. கலப்புத் திருமணம் பற்றிய திருச்சபையின் படிப்பினை என்ன?

இ. இன்றைய கிறிஸ்தவ குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் எவை?

5. அ. ''பூமியைக் கீழ்ப்படுத்துங்கள்'' என்ற இறைவனின் வார்த்தையினால் நாம் பெறும் அழைப்பு என்ன?

ஆ. உழைப்பு நமது அழைப்பாகும் என்பது இன்றைய இளைஞருக்கு எவ்வாறு அறைகூவலாக இருக்கின்றது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் IX

## மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

1. நமக்கு நித்திய ஈடேற்றம் முக்கியமானதென்பதற்கு கிறிஸ்து கூறியது;
   1. முடிவில்லா வாழ்வென்பது கிறிஸ்துவை அறிதலாகும்
   2. விண்ணுலகில் செல்வம் சேர்த்து வையுங்கள்
   3. கடவுளுடைய அரசையும், அவருடைய நீதியையும் முதலில் தேடுங்கள்.
   4. என் தந்தையின் விருப்பப்படி நடப்பவன் விண்ணரசு சேருவான்

2. இவ்வுலகில் நாம் செய்கின்ற யாவும் எந்த ஒரு வகையிலாவது;
   1. நமது சமுதாய வளர்ச்சிக்கு உதவ வேண்டும்
   2. நமது ஆன்ம ஈடேற்றத்துக்கு உதவ வேண்டும்
   3. நமது உடல் நல வளர்ச்சிக்கு உதவ வேண்டும்
   4. நமது அறிவு விருத்திக்கு உதவ வேண்டும்

3. கிறிஸ்தவ வாழ்வுக்கு இன்றியமையாத பண்புகள்;
   1. பரித்தியாகம், சுயஒறுத்தல்
   2. காணிக்கை கொடுத்தல், நேர்த்தி செய்தல்
   3. தருமம் செய்தல், நவநாள் செய்தல்
   4. யாத்திரை செல்லல், சிலுவைப்பாதை செய்தல்

4. திருவருட்சாதனங்களைப் பெற ஒருவனைத் தூண்டுவது;
   1. பொதுநலனுக்காகச் செய்யும் சேவை
   2. பங்குக் குருவுக்குச் செய்யும் மேலான உதவி
   3. பக்திச் சபையாரின் சிறந்த கடமை
   4. ஆன்மாவைச் சார்ந்த இரக்கச் செயல்கள்

5. நாம் கற்புள்ளவர்களாக இருப்பதற்கு;
   1. அழகான உடைகளை அணியவேண்டும்
   2. உடல் தூய்மை உடையவர்களாக இருக்க வேண்டும்
   3. தன்னடக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்
   4. எல்லோருடனும் அன்புடன் பழக வேண்டும்

6. கிறிஸ்து தம் குருத்துவத்தின் முழு அதிகாரத்தையும் அளித்தது;
   1. தம்மைப் பின்சென்றவர்களுக்கு
   2. தனது மேலான நண்பர்களுக்கு
   3. தமக்குப் பணி புரிந்தவர்களுக்கு
   4. தமது அப்போஸ்தலர்களுக்கு

7. திருச்சபையின் பணிக்கு அழைக்கப்பட்டோர் தேவை என்பதற்கு கிறிஸ்து கூறியது
   1. ''பணி பெறவல்ல பணிபுரியவே வந்தேன்''
   2. ''அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ''அஞ்சாதே இன்று முதல் நீ மனிதர்களைப் பிடிப்பவனுவாய்''
4. ''எந்த வேலைக்காரனும் இருதலைவர்களுக்கு ஊழியம் செய்யமுடியாது''

8. துறவறி சபையில் சேரவிரும்பும் ஒருவர்;

1. தேவஅழைத்தல் உள்ளவர்
2. ஓர் உயர்ந்த பதவியில் உள்ளவர்
3. உயர்தரகல்வித் தகைமை உள்ளவர்
4. உற்சாகமான போக்கு உள்ளவர்.

9. பொருட்களை வைத்துக்கொள்ள உரிமையுடையவர்கள்;

1. செல்வந்தர்கள்
2. அரசியல்வாதிகள்
3. சகல மனிதரும்
4. பொருளாளர்கள்

10. பொருட்களைச் சம்பாதிப்பதற்குரிய சிறந்த வழி;

1. முதலுக்கு அதிக வட்டி வாங்குதல்
2. அதிகலாபமீட்டும் வியாபாரங்கள்
3. பண்டமாற்றுச் செய்தல்
4. நேர்மையான உழைப்பு

11. பாடசாலைப் பொதுப் பொருட்களைச் சகமாணவன் சேதப்படுத்துவதைக் கண்டால்,

1. எனக்கென்னவென்று பேசாதிருப்பேன்
2. அவரைத் தடுத்துத் தகுந்த அறிவுரை கூறுவேன்
3. வகுப்பாசிரியருக்கு எடுத்துரைப்பேன்
4. தொந்தரவுக்கு உட்படாமல் தப்பித்துக் கொள்வேன்

12. நாம் மற்றவர்களின் பொருட்களைப் பயன்படுத்துவதாய் இருந்தால்;

1. தேவையான நன்மைக்குப் பயன்படுத்த வேண்டும்
2. நமது பொருட்களைப் போல பாவிக்க வேண்டும்
3. நமக்குச் சொந்தமென்று வைத்திருக்க வேண்டும்
4. விரும்பியவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும்

13. இன்றைய சமுதாயத்தில் ஊழல்கள் பெருகிவரக் காரணம்;

1 மக்கள் தொகை அதிகமாக பெருகுவது
2 நாட்டு மக்களுக்குப் போதிய உணவு இல்லாதது
3 ஏழாம், பத்தாம் கற்பனைகளின் படிப்பினையை அலட்சியம் செய்வது
4 வேலை இன்மை அதிகரித்து வருவது

14. பொய்யை விலக்கி உண்மை பேசுங்கள் ஏனென்ருல்;

1 நாம் எல்லோராலும் மதிக்கப்படுவோம்
2 உண்மை நமக்கு உயர்வளிக்கும்
3. எட்டாம் கற்பனை நமக்குக் கற்பிக்கிறது
4. இறைவன் உண்மையுள்ளவராக இருக்கின்ருர்

15. மனிதனுக்கு மிகவும் விலையேறப் பெற்ற நன்மதிப்பு எதுவென்ருல்;

1. இறைவன் அவரைப் பற்றிக் கொண்டிருக்கும் மதிப்பு
2. நண்பர்கள் அவரைப் பற்றிக் கொண்டிருக்கும் மதிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பதவியிலுள்ளோர் அவரைப் பற்றிக் கொண்டிருக்கும் மதிப்பு
4. உற்ருர், உறவினர் அவரைப் பற்றிக் கொண்டிருக்கும் மதிப்பு

16. நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டுமானுல்,
1. கண்ணுல் கண்டதை உள்ளவாறு கூற வேண்டும்
2. நமது சொல், செயல் நம் எண்ணங்களுக்கு ஒத்திருக்க வேண்டும்
3. காதால் கேட்டதைக் கேட்டபடி பேசவேண்டும்
4. உண்மையான பேச்சுக்களுக்குச் செவிசாய்க்க வேண்டும்

17. ''என்வீட்டில் எவனும் மற்றவனைத் தவருகப் பேசக்கூடாது'' என்று எழுதியவர்;
1. புனித. யாகப்பர் 2. புனித. இராயப்பர்
3. புனித. அகஸ்தீன் 4. புனித. யோண்பொஸ்கோ

18. தக்க காரணமின்றிப் பிறரைத் தவருக எண்ணுவது;
1. மனச்சஞ்சலம் 2. மனவிரக்தி
3. வீண்பகை 4. வீண் தீர்மானம்

19. மறையுடலோடு நாம் இணைக்கப்பட்டோம் என்பதற்கு கிறிஸ்து கூறிய உருவகம்;
1. திராட்சைச் செடியும் கொடியும் 2. ஆயனும், மந்தையும்
3. விளக்கும், ஒளியும் 4. மாவும், புளிக்காரமும்

20. திருப்பலியின் முன்குறியாக அப்பம், இரசம் ஒப்புக்கொடுத்தவர்;
1. ஆபிரகாம் 2. மெல்கிசெதேக் 3. ஈசாக் 4. நோவா

## சுருக்கமான விடை தருக.

1. 'இடறல் பாவம்' என்ருல் என்ன?
2. குருத்துவம் என்னும் திருவருட்சாதனத்தால் பெறும் அருள் என்ன?
3. தியாக்கோன்மாரின் (திருத்தொண்டரின்) பணிகள் எவை?
4. இலங்கையிலுள்ள அப்போஸ்தலிக்க துறவறசபைகள் சிலவற்றைக் கூறுக.
5. சொத்துரிமை பற்றிய திருத்தந்தையின் சுற்றுமடல்கள் எவை?
6. உண்மை பேசவேண்டும் என்பதுபற்றிய வேதாகம வார்த்தைகள் எவை?
7. சகோதரனைத் தீர்ப்பிடுவது பற்றிக் கிறிஸ்து கூறியது என்ன?
8. மறைஉடலின் ஆன்மா பர்சுத்தஆவி என்பதன் பொருளென்ன?
9. நற்கருணை எவ்வாறு பலியும், விருந்துமாக இருக்கிறது?
10. வத்திக்கான் சங்க மறுமலர்ச்சிக்குப் பின் திருவழிபாட்டில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள் எவை?

## கிறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.

(திருவுளத்திற்கு, ஏழைகளுக்கு, திருச்சபையும், துறவிகள், நற்புகழ், புறணி, உறுதிப் பாட்டிற்கும், கிறிஸ்துநாதர், கடவுளைக், அக்கறையுடன்)

1. பிறருடைய ஆன்ம ஈடேற்றத்தை நாம்..........தேட வேண்டும்.
2. ''தூய உள்ளத்தோர் பேறுபெற்றேர் ஏனெனில் அவர்கள்........காண்பர்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மறைஆயரின் திருநிலைப்படுத்தலினால்.........அவருக்கு குருத்துவத்தின் மேலான முழு அதிகாரத்தையும் அளிக்கின்றார்.

4. நம்முடைய பொருட்களைக் கூட கடவுளுடைய.......ஏற்ப பயன்படுத்த வேண்டும்

5. ''நீ நிறைவு பெற விரும்பினால் போய் உன் உடைமைகளை விற்று.......கொடு''

6. .........அளவற்ற திரவியத்தைக் காட்டிலும் அதிகம் நல்லது.

7. காரணமின்றி ஒருவரின் மறைவான குற்றங்களைப் பிறருக்கு வெளிப்படுத்துவது .........எனப்படும்.

8. உண்மை உடைமை மக்களுக்குள் நம்பிக்கைக்கும்......அடித்தளமாக அமைகின்றது.

9. திருவழிபாட்டின் செயல்கள் குருவாகிய கிறிஸ்துவும், அவரது உடலாகிய .........சேர்ந்து செய்கின்றது.

10. .........திருச்சபைக்கு மட்டுமல்ல உலகிற்கும் மிகவும் தேவைப்படுகின்றார்கள்.

## பகுதி II

1. அ. மனிதனின் முழு விடுதலைக்காக கிறிஸ்து இவ்வுலகில் மனிதனாக வந்து செய்த மீட்புச் செயல்கள் எவை?

   ஆ. நீர் இன்றைய சூழ்நிலையில் எவ்வாறு பிறரின் உயிரையும், உடலையும் மதித்து ஐந்தாம் கற்பனையை அனுசரிப்பீர்?

2. அ. நாம் நேர்மையாகப் பொருள் சம்பாதிக்கக் கூடிய வழிவகைகள் மூன்று கூறுக?

   ஆ. பிறர் உடைமைகளுக்கு எதிராக இன்று செய்யப்படும் பாவங்கள் எவை?

   இ. படிப்பு முடிந்து நீர் என்ன தொழில் செய்யப் போகின்றீர் என்று உறுதி செய்யும்போது என்ன கருத்துக்களை மனதில் கொள்வீர்?

3. அ. கற்புடைமை என்றால் என்ன?

   ஆ. நீர் கற்பைக் காப்பாற்றக் கூடிய வழிவகைகள் எவை?

   இ. இன்றைய இளைஞரின் உள்ளங்களில் தூய்மை அற்றுப்போகும் சூழ்நிலைகளை ஆராய்க.

4. அ. நாம் ஏன் உண்மையுள்ளவர்களாய் விளங்க வேண்டும்?

   ஆ. உண்மையுடைமையால் வரும் நன்மைகளையும், பொய்மையினால் வரும் தீமைகளையும் குறிப்பிடுக.

   இ. பரீட்சையில் பார்த்தெழுதும் பழக்கமுள்ள மாணவனுக்கு நீர் என்ன அறிவுரை கூறுவீர்?

5. அ. திருச்சபை கிறீஸ்துவின் மறைஉடல் என்று ஏன் சொல்லப்படுகின்றது?

   ஆ. உறுப்பினர்களாகிய நீங்கள் மறைஉடல் மட்டில் கொள்ளவேண்டியகடமைகள் எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினப்பத்திரம் X

**மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

1. சிலுவையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட அதே பலிதான்;
   1. திருப்பாடுகளின் காட்சி
   2. பெரிய வெள்ளிக்கிழமைச்சடங்கு
   3. இன்றைய திருப்பலிப்பூசை
   4. திருச்சிலுவை ஆராதனை

2. எல்லாப் பலிகளிலும் நிறைவான பலியாகவிருப்பது;
   1. தகனப்பலி
   2. மிருகபலி
   3. பாவப்பரிகாரப்பலி
   4. திருப்பலிப்பூசை

3. நற்கருணை விருந்தில் நாம் கிறிஸ்துவின் உடலை உட்கொள்வதால்;
   1. நாமும் ஒருவரோடொருவர் ஒன்றுபடுகின்றோம்
   2. நாம் குருவோடு இணைக்கப்படுகின்றோம்
   3. நாம் இறைமக்களாக அழைக்கப்படுகின்றோம்
   4. நாம் பக்தியோடு செபிக்க வேண்டப்படுகின்றோம்

4. திருப்பலியில் நான் முழுமையாகப் பங்குபற்றுவதற்கு;
   1. பூசை நேரம் முழுவதும் கோவிலில் இருப்பேன்
   2. முழுவழிபாடுகளிலும் கலந்து நற்கருணை உட்கொள்வேன்
   3. பாடகர் குழுவுடன் சேர்ந்து பாடிச் செபிப்பேன்
   4. குருவின் மறையுரை அறிவித்தல்களைக் கேட்பேன்

5. தேவாலயத்தில் நற்கருணை வைக்கப்பட்டிருப்பதின் அடையாளமாக இருப்பது;
   1. மலர்ச்செண்டு
   2. அறையப்பட்ட சிலுவை
   3. ஒளிவிளக்கு
   4. அழகான பீடம்

6. கிறிஸ்துநாதரில் இறப்பவர்களுக்கு மரணமானது;
   1. துயரம் நிறைந்த வாழ்வின் இழப்பாகவுள்ளது
   2. தாங்கமுடியாத கவலைக்கிடமாகவுள்ளது
   3. மிகவும் அச்சத்திற்கும் பயத்திற்கும் உரியது
   4. விண்ணகப் பேரின்ப வீட்டின் வாயிலாகவுள்ளது

7. கிறிஸ்து தமது சிலுவை மரணத்தினால்;
   1. எம்மை நரகத்தினின்று காப்பாற்றினார்
   2. முடிவில்லாப் பெருவாழ்வைப் பெற்றுத்தந்தார்
   3. இறைவாக்குகளை முழுமையாக நிறைவேற்றினார்
   4. சாவு நிச்சயம் என்பதை உறுதிப்படுத்தினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கிறிஸ்தவன் மரணத்தைப் பற்றி அறியவேண்டிய உண்மை;
1. மரணம் எப்போ வரும் என்பது நமக்குத் தெரியாது
2. பாவத்தின் விளைவே மரணமாகும்
3. எல்லாருக்கும் மரணம் மாத்திரமே பொது உரிமையாகும்
4. வாழ்வைச் சீராக்க மரணத்தைப் பற்றிய எண்ணம் அவசியம்

9. விண்ணரசு சேர்பவன் யாரென்பதை உணர்த்த கிறிஸ்து கூறியது;
1. போலித்தீர்க்கதரிசிகளை நம்பாதவர்கள்
2. மேலான ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர்கள்
3. வானகத் தந்தையின் விருப்பப்படி நடப்பவர்கள்
4. நோன்பிருந்து ஏழைகட்குப் பிச்சையிடுபவர்கள்

10. இவ்வுலகை நீத்த நம் மறையுடலின் உறுப்பினர்கள்;
1. சமுதீதப் பிரயோசனத்தில் இணைந்துள்ளவர்கள்
2. நமது செப உதவியை வேண்டி நிற்பவர்கள்
3. உறவினரின் பற்றுப்பாசத்திலிருந்து விடுபட்டவர்கள்
4. உருவமற்றவர்களாக அலைந்து திரிபவர்கள்

11. ஐஸ்வரியவான் உவமையிலிருந்து நாம் அறிவது;
1. இறைவன் செல்வந்தரை விரும்பமாட்டார்
2. பணக்காரர், ஏழைகள் என்றுமே உலகிலிருப்பார்கள்
3. ஏழைகள் பேறுபெற்றவர்களாய் மதிக்கப்படுவார்கள்
4. நமது வாழ்வின் வெற்றி முடிவில்லா வாழ்வாகும்

12. கிறிஸ்து மீண்டும் வருவார் என்பதற்குரிய இறைவார்த்தை;
1. நாடு நாட்டையும் அரசு அரசையும் எதிர்த்தெழும்
2. மனுமகன் மிகுந்த வல்லமை மாட்சியுடன் வருவார்
3. இறுதிவரை நிலைத்து நிற்பவன் மீட்புப் பெறுவான்
4. விண்ணும், மண்ணும் ஒழியும் என் வார்த்தைகளோ ஒழியா

13. பொதுத்தீர்ப்பு எவ்வாறு நடக்குமென்று கிறிஸ்து காட்டிய உருவகம்;
1. மதியீனமும், விவேகமுமுள்ள பத்துக் கன்னியர்
2. தோன்றி மறையும் மின்னல்
3. கிளைகள் தளிர்விடும் அத்திமரம்
4. வெள்ளாடும் செம்மறியாடும்

14. இயேசு ஜெருசலேம் நகரின் அழிவை முன்னேக்கிக் கண்ணீர்விட்டார். ஏனென்றால்;
1. தமது நாட்டுப்பற்றை வெளிக்காட்ட
2. தமது அன்புக்குரியவர்கள் அழிவில் அகப்படப்போவதால்
3. இறைவன் அதைச் சந்திக்க வந்த காலத்தை உணராதபடியால்
4. பாரம்பரியப் பெருமை கொண்ட நகர் பாழாகப் போவதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. இறுதிநாளில் இறைவன் நமக்குத் தீர்ப்பளிப்பார்;

1. நமது கிறிஸ்தவ வாழ்வு பிறருக்களித்த நற்கனிகளால்
2. நாம் ஒப்புக்கொடுத்த திருப்பலியின் எண்ணிக்கையால்
3. நாம் செய்து கொண்ட நவநாள் பலன்களால்
4. நாம் விரும்பியவர்களுக்குச் செய்த உதவிகளின் செல்வாக்கால்

16. புதிய படைப்பில் நாம் காணும் அரசு;

1. புனிதர்களின் அரசு
2. மூவொரு கடவுளின் அரசு
3. கத்தோலிக்க அரசு
4. கட்சிசார்பற்ற அரசு

17. நாட்டை ஆள்வோரின் கடமை;

1. தமது நிலைக்குப் பாதுகாப்பைத் தேடுதல்
2. பிறநாடுகளின் செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளுதல்
3. காலத்திற்கேற்ற சட்டங்களை இயற்றுதல்
4. சமுதாயத்தின் பொதுநலனுக்காக உழைத்தல்

18. நான் இலங்கைக் குடிமகனாக வாழ்வதனால்;

1. வெளிநாடுகளுக்குச் சென்று அதிக பணம் சம்பாதிப்பேன்
2. உற்பத்திச்சாலைகளை நிறுவ உதவி செய்வேன்
3. நாட்டின் நன்மைக்காக ஆற்றல்களைப் பயன்படுத்துவேன்
4. நமது உறவினர் சுற்றத்தார் வாழ வழிவகுப்பேன்

19. காணப்படும் இவ்வுலகம் இறுதிநாளில்;

1. இயற்கை வழியாக மாற்றமடையும்
2. கிறிஸ்து வழியாக உருமாற்றம் அடையும்
3. மனித உழைப்பால் புதுப்பிக்கப்படும்
4. விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியால் உயர்வடையும்

20. இன, மொழி, மத வேறுபாட்டினால் எவரையும் குறைந்தவர்களாகக் கருதாது வாழ்தல்;

1. அடிப்படை மனித உரிமைகளை மதித்து நடக்க உதவும்
2. சமுதாயத்தில் ஒற்றுமையைப் பேணுவதற்கு வழிவகுக்கும்
3. பொதுக்கிறிஸ்தவ சகோதரத்துவத்துக்குச் சான்று பகர அடிகோலும்
4. சோஷலிச சமுதாயத்தை உருவாக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுருக்கமான விடை தருக.

1. சிலுவைப்பலிக்கும் பூசைப்பலிக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?
2. நற்கருணை வாழ்வளிக்கும் அப்பம் என்பது பற்றி விரிவாகக் கூறும் நற்செய்தி எது?
3. நற்கருணையைக் குறிக்கும் சில அடையாளங்கள் தருக.
4. நற்கருணை வாழ்வு என்பதன் பொருள் என்ன?
5. கிறிஸ்துநாதர் மீண்டும் வருவாரென்று நாம் திருப்பலியில் எவ்வாறு நினைவு கூருகின்றோம்?
6. இறைபணியாண்டின் இறுதியில் உயிர்த்தாண்டவரின் மாட்சிமையைக் கொண்டாடும் பெருவிழா எது?
7. வேதாகம நூல்களின் இறுதிவார்த்தையாக நாம் எதிர்பார்ப்பதும் செபிப்பதும் என்ன?
8. இயேசுநாதர் கடைசித் தீர்ப்பைப் பற்றிக் கூறும் உவமைகள் எவை?
9. கிறிஸ்தவனுக்கு அரசியலிலும் பொறுப்புண்டு என்பதற்குக் கிறிஸ்து கூறியது என்ன?
10. உருமாறிய உலகை கிறிஸ்து தந்தையிடம் ஒப்படைப்பார் என்பதை புனித. சின்னப்பர் எவ்வாறு கூறுகிறார்?

## கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.

(கிறிஸ்தவனின், நாடுகளை, அடையாளமாக, நாழிகையும், விருந்திற்கு, பற்றுறுதி, விண்ணகத்தில், அருள், பிள்ளைகளின், மகிமையால்)

1. பரிசுத்த நற்கருணை கடவுளுடைய .......... குடும்பப் பந்தியாயிருக்கிறது.
2. நற்கருணை பெறுவதற்கு ஒருவன் .......... நிலையிலிருக்க வேண்டும்.
3. புனித. தோமஸ்மூர் இறைவனிலே .......... உள்ளவராக வாழ்ந்து மரித்தார்.
4. கடவுளை அதிகமாக அன்பு செய்தவர்கள் .......... கடவுளின் அன்பை அதிகமாக அடைவார்கள்.
5. விழிப்பாயிருங்கள் ஏனெனில் நாளும் .......... உங்களுக்குத் தெரியாது.
6. பெரிய வெள்ளிக்கிழமைத் திருவழிபாட்டில் ..........ஆள்வோருக்காகச் சிறப்பாகச் செபிக்கின்றோம்.
7. கிறிஸ்துவின் மீட்பை உலகிற்கு வழங்குவது .......... கடமையாகும்.
8. உலகை முன்னேற்ற உழைக்கும் கிறிஸ்தவன் கிறிஸ்துவின் உயிருள்ள.......... திகழ்வான்.
9. நாம் அனைவரும் புதிய படைப்பில் கடவுளின் .......... நிரப்பப்படுவோம்.
10. நற்கருணை விருந்து விண்ணக .......... முன்னடையாளமாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி II

1. அ. கிறிஸ்துநாதர் எவ்வாறு நற்கருணையை ஏற்படுத்தினார்?

   ஆ. திருச்சபை தனது வழிபாடுகளில் நற்கருணைநாதரை எவ்வழிவகைகளால் மகிமைப்படுத்துகிறது?

   இ. நீர் நற்கருணைச் சந்திப்புச் செய்யும்போது எவ்வாறு செபிப்பீர் என்று எழுதுக.

2. அ. கிறிஸ்துவில் மரணிப்போர் இறந்தாலும் வாழ்வார் என்பதன் பொருள் என்ன?

   ஆ. இறந்தவர்களின் ஆன்மசாந்திக்காக நாம் செய்யும் பக்திமுயற்சிகள் எவை?

3. அ. மத்தேயு நற்செய்தியில் இறுதிக்காலத்தைப்பற்றிக் கூறப்பட்டிருப்பதென்ன?

   ஆ. விழிப்பாயிருங்கள் என்னும் கிறிஸ்துவின் வார்த்தை உமது வாழ்வுக்கு எவ்வாறு அறைகூவலாக அமைகின்றது?

4. அ. கிறிஸ்தவன் என்ற முறையில் புதிய உலகம் படைக்க நீர் செய்யக்கூடியவைகள் எவை?

   ஆ. இறுதிநாளில் காணக்கூடிய உலகை எவ்வழிகளில் கிறிஸ்து மாற்றியமைப்பார்?

   இ. இன்று உலகில் காணப்படும் பொது ஐக்கியத்துக்கான அடையாளங்கள் எழுதுக.

5. அ. உடன்படிக்கை மூலம் உருவாக்கப்படவேண்டிய சமுதாயத்தின் கிறிஸ்தவப் பண்புகள் எவை?

   ஆ. குடிமக்கள் நாட்டுக்காகச் செய்யவேண்டிய கடமைகள் எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை

## டிசம்பர் 1979

### இடைக்காலப் பாடத்திட்டம்

## கிறிஸ்தவம் றோமன் கத்தோலிக்கம்

(1 மணி)

கவனிக்க: I. எல்லா வினாக்களுக்கும் விடைதர முயல்க.

II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1) (2) (3) (4) என இலக்கம் இடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதுவதனைத் தெரிவுசெய்க.

III. விடைத்தாளில் நீர் தெரிந்த விடைக்கு ஒத்திருக்கும் கூட்டில் புள்ளடியைப் "×" பென்சிலால் இடுக.

IV. விடைத்தாளின் பிற்பக்கத்திலே மேலதிக அறிவுறுத்தல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைக் கவனமாக அவதானிக்குக.

1. இறைவனின் மீட்புத்திட்டம் பற்றி நாம் அறிந்து கொண்டது;

   1. ஆபிரகாமின் மூலமாக  2. மோசேஸ் மூலமாக
   3. கிறிஸ்துநாதர் மூலமாக  4. இராயப்பர் மூலமாக

2. கடவுள் மனிதன் மேல் அக்கறை கொள்ளக் காரணம்;

   1. உலகை முன்னேற்றும் பொறுப்பு அவனுக்குள்ளதால்
   2. மனிதர் மேல் வைத்த அளவில்லா அன்பினால்
   3. மனிதர் கடவுள் மேல் நம்பிக்கை வைத்துள்ளதால்
   4. மனித மீட்பின் மூலம் கடவுளுக்கு மகிமை ஏற்படுவதால்

3. குறிக்கப்பட்ட காலம் வந்துவிட்டது, கடவுளுடைய இராச்சியம் அண்மையில் இருக்கிறது என்று சொன்னவர்;

   1. கிறிஸ்துநாதர் 2. ஸ்நாபக அருளப்பர் 3. இராயப்பர் 4. சின்னப்பர்

4. இறைமகன் மனிதனானது;

   1. தீயோரை நிர்மூலமாக்க
   2. இறைமக்களுக்கு இறைத்தந்தையை அறிமுகப்படுத்த
   3. அருங்குறிகள் மூலம் இறைத்தன்மையைக் காட்ட
   4. மனிதனுக்கு மீட்பைப் பெற்றுக்கொடுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஆலயத்தில் காலை, மதியம், மாலை மூவேளை மணி ஒலிப்பது;

1. உண்மைக் கிறிஸ்தவர்களுக்கு திரிகாலச் செபம் சொல்ல நினைவூட்டும்படியாக
2. இறைமகன் நமக்காக மனிதனானார் என்பதை நினைவுகூரும்படியாக
3. தினமும் மூவேளை கடவுளை வணங்கவேண்டியதை நினைவூட்டும்படியாக
4. விசுவாசிகளின் மத்தியில் தேவ அன்னையின் பக்தியை அதிகரிக்கும்படியாக

6. ஞாயிற்றுக்கிழமையைப் பகிரங்க இறைவணக்கத் தினமாகக் கருதுவது;

1. உலகில் அனேக இடங்களில் ஞாயிறு ஓய்வு தினமாதலால்
2. ஞாயிறு, வாரத்தின் முதல் நாளாதலால்
3. ஞாயிறு ஓய்வு நாளாகச் சபாத் கருத மக்களுக்கு இலகுவாதலால்
4. ஒரு ஞாயிறு தினத்தில் கிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்ததால்

7. கிறிஸ்துநாதர் திரும்பவும் இவ்வுலகத்திற்கு வருவது;

1. மகிமையுடன் இவ்வுலகை ஆளுவதற்கு
2. தன்னால் மீட்கப்பட்ட படைப்பை இறைத் தந்தையிடம் ஒப்படைப்பதற்கு
3. அரசனுக்குரிய அதிகாரத்துடன் முழு உலகையும் ஆளுவதற்கு
4. பசாசின் வல்லமையை முற்றாக முறியடிப்பதற்கு

8. கிறிஸ்து இறைத் தந்தை மூலம் பரிசுத்தஆவியை அனுப்பியது;

1. அவர்களின் பயந்த சுபாவத்தைப் போக்குவதற்கு
2. உலகினரின் அவப் பேச்சுக்களினால் மனம் சோர்வடையாமல் ஆறுதல் பெறுவதற்கு
3. துன்பதுயரங்களை ஏற்றுக்கொண்டு பொறுமையுடன் இருப்பதற்கு
4. உண்மை விசுவாசத்தில் உறுதிப்படுவதற்கு

9. ஆதிப் பெற்றோர் பாவம் செய்ததினால்;

1. கடவுளின் விசேஷ கொடைகளை இழந்தனர்
2. அறிவையும், சிந்திக்கும் ஆற்றலையும் சரிவரப் பயன்படுத்த முடியாத நிலைக்குள்ளாகினர்
3. மரணத்தை உரிமையாக்கிக் கொண்டனர்
4. கடவுளுடன் ஒன்றித்து வாழும் உரிமையை இழந்தனர்

10. நாம் புனிதர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும். ஏனெனில்;

1. அவர்கள் அன்பினால் கடவுளின் நட்பை அடைந்துள்ளார்கள்
2. அவர்கள் முழுமூச்சுடன் கடவுளின் அரசுக்காகச் சேவை செய்துள்ளார்கள்
3. அவர்கள் அருங்குறிகள் புதுமைகள் செய்தார்கள்
4. விண்ணரசில் உயர்வான கெளரவம் அடைந்துள்ளார்கள்

11. நற்பிரஜைகள் என்ற முறையில் எம் கடமை;

1. அரசின் சட்டதிட்டங்களுக்கு அமைய நடத்தல்
2. அதிகாரிகளுக்கு மரியாதையும்; கெளரவமும் செலுத்துதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. முடிந்தளவு சக்தியைப் பயன்படுத்தி வேலை செய்தல்
4. சிறந்ததோர் வாழ்க்கை வாழ ஒருவருக்கொருவர் உதவி செய்தல்

12. அயலவரின் மீட்பைப் பற்றி நாம் அக்கறை கொள்ள வேண்டும். ஏனெனில்;

1. அவர்களுக்கு மீட்புக் கிட்டாவிட்டால் எம் மகிழ்ச்சி குறையும்
2. எல்லோரும் மீட்புப் பெற உழைப்பது ஒரு கிறிஸ்தவனின் கடமை
3. அவ்வாறு செய்யும்படி திருச்சபை நமக்குக் கற்பிக்கின்றது
4. அயலவரினல் எமக்குக் கிட்டும் உதவிகளுக்கு நன்றி செலுத்துவதாக இது அமைகிறது

13. நாம் எப்போதும் பாவத்தைத் தவிர்த்து நடக்க வேண்டும். ஏனெனில்;

1. சாவானபாவத்தோடு இறந்தால் நித்திய தண்டனைக்கு ஆளாவோம்
2. பாவம் எம் உள்ளத்தின் சமாதானத்தை இழக்கச் செய்கின்றது
3. இறைமக்களாக வாழ பாவம் இடையூறாக இருக்கின்றது
4. பாவத்தினல் உலகில் மரணம் நுழைந்தது.

14. நீ விருந்து நடத்தும்போது ஏழைகள், ஊனர்கள், முடவர், குருடர் ஆகியோரைக் கூப்பிடு. ஏனெனில்;

1. உன் உதவி முக்கியமாக அவர்களுக்கே தேவைப்படுகின்றது
2. இவர்களுக்குச் செய்வது எனக்கே கடவுளுக்கே செய்வதாகும்
3. நீதிமான்கள் உயிர்த்தெழும்போது உனக்குக் கைம்மாறு கிடைக்கும்
4. இதனல் நீங்கள் என் சீடராய் இருப்பீர்கள்

15. கிறிஸ்துவைக் காட்டிக் கொடுக்கும் முறைபற்றி யூதாஸ் ஆலோசனை நடத்தியது;

1. பிலாத்துடனும், ஏரோதுடனும்
2. பரிசேயர்களுடனும், இலிகதருடனும்
3. தலைமைக் குருக்களுடனும், காவல் தலைவர்களுடனும்
4. உரோமை வீரர்களுடனும், சேனதிபதியுடனும்

16. "இவர் சூசையின் மகனல்லவா"? கிறிஸ்துவை ப்பற்றி இந்தவசனம் கூறப்பட்டது;

1. மக்களுடன் ஆடம்பரமாக ஜெருசலேம் நகரத்தினுள் நுழையும்போது
2. செபக்கூட்டத்தில் இசையாஸ் இறைவாக்கினரின் ஏட்டுச்சுருளை வாசித்தபின்
3. பிறந்த எட்டாம்நாள் ஜெருசலேம் தேவாலயத்தில் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்டபோது
4. பன்னிரண்டு வயதில் ஜெருசலேம் தேவாலயத்தில் போதகர்களுடன் அவர்கள் சொல்வதைக் கேட்டும், அவர்களை வினவிக் கொண்டுமிருக்கும்போது

17. எல்லாச் சமூகங்களிலும் மிகப் பெரிய, வியத்தகு சமூகம்;

1. புனிதர்களுடைய சமூநீதப் பிரயோசனம்
2. திருச்சபை
3. ஐக்கிய நாடுகள் சபை
4. மானிடரின் சமூக வாழ்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. எமக்குப் பெற்றோர்கள் கிடைத்திருப்பது;

1. சமூக நியதியாதலால்
2. கடவுள் நம்மேல் வைத்த அன்பினுல்
3. மோயீசனின் சட்டத்தினுல்
4. மேற்காணப்படும் எல்லாக் காரணங்களாலும்

19. "தன்னை உயர்த்துகிற எவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவனே உயர்த்தப் பெறுவான்" இது குறிப்பிடப்பட்டிருப்பது;

1. பரிசேயனும் ஆயக்காரனும் என்ற உவமையில்
2. என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது என்ற மரியாவின் பாடலில் மஞ்ஞிபிகாத்
3. திருமண விருந்துக்கு அழைத்த உவமையில்
4. ஊதாரிப்பிள்ளையின் உவமையில்

20. மண்ணுலகில் செல்வம் சேர்த்து வைக்கவேண்டாம். ஏனெனில்:

1. பூச்சியும், துருவும் அழித்துவிடும்
2. கள்வர் அதைத் திருடுவர்
3. எம் செல்வம் எங்குள்ளதோ அங்கே உள்ளமும் இருக்கும்
4. மேற் காணப்படும் எல்லாக் காரணங்களாலும்

21. மக்கள் ஒருவருக்கொருவர் உண்மையோடும், நம்பக்கூடியவர்களுமாய் இருந்தால் தான் மன நிறைவோடு ஒன்ருய் கூடி வாழலாம். இதை நாம் அறிவது

1. 4-ம் கற்பனை மூலம்
2. 6-ம் கற்பனை மூலம்
3. 8-ம் கற்பனை மூலம்
4. 10-ம் கற்பனை மூலம்

22. நாம் தெய்வீக உயிரைப் பெற்று, அதை முழு அளவிற்கு அடையும் வண்ணம் திருச்சபை நமக்கு;

1. ஞாயிறு கடன்திருநாளைப் பற்றி அறிவுறுத்துகிறது
2. அருளடையாளங்களை தேவதிரவிய அனுமானங்களை வழங்குகின்றது
3. இறைவாக்குகளைப் படிப்பிக்கின்றது
4. கற்பனைகளைத் தருகின்றது

23. "நீங்கள் போய் அந்தக் குள்ளநரியிடம் இதை அறிவியுங்கள். இன்றும் நாளையும் பேய்களை ஓட்டுகின்றேன். நோய்களைக் குணமாக்குகின்றேன். மூன்ரும் நாள் முடிவடைவேன்" இதில் குள்ளநரி என்று குறிப்பிடப்படுபவர் யாரெனில்;

1. பிலாத்து
2. ஏரோது
3. கைப்பாஸ்
4. யூதாஸ்

24. "அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ மிகக் குறைவு" இதனுல் விளங்கிக் கொள்வது யாதெனில்;

1. தேசிய அபிவிருத்திப்பணியில் பங்குபற்றுவோர் மிகக் குறைவு என்பது
2. யூதமரபின்படி முதற் பலனைக் கோவிலுக்குக் கொண்டுவருவோர் தொகை குறைவு என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நற்செய்தியைப் பரப்ப ஆட்கள் குறைவு என்பது
4. திருச்சபையின் தாபரிப்புக்கு உதவுவோர் குறைவு என்பது

25. ''ஆண்டவரே பாவியெனை விட்டு அகலும்'' இராயப்பர் இப்படிக் கூறக் காரணம்;
1. கிறிஸ்துவின் பரிசுத்த தனத்துக்கு முன் நிற்கத் தான் தகுதியற்றவன் என எண்ணியதால்
2. அதிகமான மீன்கள் பிடிபட்ட அருங்குறியின் நிமித்தம் அவர் அதிர்ச்சியடைந்ததால்
3. கிறிஸ்து அழைத்தால் அதன்படி எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் போக வேண்டிவரும் என்று எண்ணியதால்
4. அவரை விட நல்லோர் அவர்கள் மத்தியில் இருந்ததினால்

26. கிறிஸ்து ஐயாயிரம் பேருக்கு உணவளித்த அருங்குறியால் நாம் விளங்கிக்கொள்வது யாதெனில்;
1. இறையரசைப் பரப்பும் பணியில் ஈடுபட்டிருப்போர் இலௌகீக விடயங்கள் பற்றிக் கவலை கொள்ளலாகாது
2. நாம் கேட்பதைக் கிறிஸ்து எமக்குத் தருவார்
3. மனிதன் உணவினால் மட்டும் உயிர் வாழ்வதில்லை
4. நாம் எதைச் செய்தாலும், உணவு பானம் இவைகளில் கவனம் செலுத்த வேண்டும்

27. மனம் திரும்பியவருக்கேற்ற செயல்களாவன;
1. உள்ளவன் இல்லாதவனுடன் பகிர்ந்து கொள்வது
2. குறிக்கப்பட்ட தொகைக்கு மேல் வரி அறவிடாமல் இருப்பது
3. கிடைக்கும் சம்பளமே போதுமென்றிருப்பது
4. மேற்குறிப்பிட்ட எல்லாவற்றையுமே கடைப்பிடிப்பது

28. கடவுளின் அன்பும், இரக்கமும் சிறந்த முறையில் வெளிப்பட்டது;
1. புனித கன்னிமரியாளில் 2. மோயீசனில்
3. புனித அன்னம்மாளில் 4. கிறிஸ்துநாதரில்

29. இறைவனில் நம்பிக்கையுடன் காத்திருக்கும் ஒருவர்;
1. தன் அத்தியாவசிய தேவைகளுக்காகத் தைரியமாகவும், விடாமுயற்சியாகவும் செபிப்பார்
2. துன்ப, துரிதங்களைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வார்
3. இறையரசுக்காகத் தன் முழுச் சக்தியையும் பயன்படுத்திப் பணியாற்றுவார்
4. மேற்காணும் யாவற்றையும் செய்வார்

30. நாம் ஞாயிறு பூசைக்குச் செல்வது;
1. வாரத்திற்கு ஒருமுறை அப்படிச் செல்வதால் மனதிற்கு ஓர் ஆறுதல் ஏற்படும் என்பதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அப்படிச் செல்வதால் சாவானபாவத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்பதால்
3. பங்கு மக்கள் அங்கு ஒன்று கூடும்போது சகோதர மனப்பான்மை ஏற்படும் என்பதால்
4. இறைகுடும்பமாக ஒன்றுசேர்ந்து இறைத்தந்தைக்கு வணக்கம் செலுத்துவது எம் மேலான கடமையாதலால்

31. நாம் கடவுளின் திருப்பெயருக்கு மரியாதை செலுத்த வேண்டும். ஏனெனில்;

1. அப்படிச் செய்யும்படி நாம் பணிக்கப்பட்டிருக்கின்றோம்
2. மோயீசனின் சட்டத்தில் அப்படிக் கூறப்பட்டிருக்கிறது
3. கடவுள் அளவற்ற வகையில் பரிசுத்தராய் இருக்கிறார்
4. எம் தேவைகளைப் பெற்றுக்கொள்ள நாம் அவரின் திருநாமத்துக்கு மரியாதை செலுத்த வேண்டும்

32. தினம் நற்கருணை பெறத் தகுதியுடையோர்;

1. குருக்கள்
2. அருள்நிலையில் இருப்போர்
3. 12 வயதுக்கு உட்பட்டோர்
4. துறவறத்தோர்

33. நோயில் பூசுதல் என்னும் அருளடையாளத்தை அளிக்க குருவானவரை நேரகாலத்துடனேயே அழைக்கக் காரணம்;

1. சிலவேளைகளில் குருவானவர் பங்கில் இல்லாமற் போகலாம் என்பதால்
2. நோயாளி நல்ல புத்தி சுயாதீனத்துடன் இருக்கும்போதே இதைப் பெற்றுக் கொள்ள வழி செய்ய வேண்டும் என்பதால்
3. நோயாளியின் உறவினர்க்கு இடைஞ்சல்கள் ஏற்படாதிருக்க வேண்டும் என்பதால்
4. கடைசி நேரத்தில் செய்யக்கூடிய மற்றும் சடங்காசாரங்களுக்கு வசதி செய்து கொள்ள வேண்டும் என்பதால்

34. "நீ உன் வீட்டிற்குத் திரும்பிப் போ. கடவுள் உனக்குச் செய்ததெல்லாம் தெரியப்படுத்து" என்று கிறிஸ்து கூறியது;

1. பெரும்பாட்டினால் வருந்திய பெண்ணுக்கு
2. பத்துத் தொழுநோயாளிகளில் ஒருவனுக்கு
3. கெரசேனர் நாட்டில் பேய் பிடித்த மனிதனுக்கு
4. தன்னைப் பின்செல்ல விரும்பிய இளைஞனுக்கு

35. கிறிஸ்துவுக்கு மெசியா என்ற பெயர் வரக் காரணம்;

1. அவர் தாவீது குலத்தைச் சார்ந்தவராதலால்
2. அபிஷேகம் செய்யப்பட்டவர் என்று அறிமுகப்படுத்தப்பட்டதால்
3. ஏழையாகப் பிறந்ததால்
4. மறைந்த ஓர் இறைத் தன்மையுடன் இருந்ததால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. கெட்ட பாவசங்கீர்த்தனம் செய்யும் ஒருவர்;

1. சாவான பாவங்களை ஒளிக்கின்றார்
2. குறிக்கப்பட்ட அபராதத்தை நிறைவேற்றாமல் இருக்கிறார்
3. உண்மையான மனஸ்தாபப்படாமல் இருக்கிறார்
4. மேற்காணும் யாவும் செய்கின்றார்

37. "வானகத்துக்கு எதிராகவும் உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன்" இப்படிக் கூறியவர்;

1. கிறிஸ்துவை மறுதலித்த இராயப்பர்
2. கிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்
3. தந்தையிடம் திரும்பிவந்த ஊதாரிமகன்
4. தான் செய்த தவறுகளை ஏற்றுக்கொண்ட சக்கேயு

38. அளவற்ற இன்பத்தில் வாழும் பரிசுத்த திரித்துவம் பற்றிக் கற்றிருக்கும் நாம்;

1. எங்கள் குடும்பங்களில் எடுத்துக்காட்டான அன்பினதும், ஒற்றுமையினதும் வாழ்வைக் கடைப்பிடிக்க வேண்டும்
2. பரிசுத்த திரித்துவத்தின் மறைபொருளைக் கண்டுபிடிக்க முழு முயற்சி எடுக்க வேண்டும்
3. மூவரினதும் விசேட செயல்கள் பற்றி விளங்கிக் கொள்ள வேண்டும்
4. எந்த முக்கிய வேலையைத் தொடங்குமுன்பும் பரிசுத்த திரித்துவத்தை நினைவுகூர வேண்டும்

39. கிறிஸ்து மனுவுருவானபோது மோயீசனுடனும், எலியாசுடனும் உரையாடியது;

1. பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் ஒன்றிணைப்பது பற்றி
2. தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் நற்செய்தியை ஏற்றுக்கொள்ளாத காரணம் பற்றி
3. ஜெருசலேமில் நிறைவேறப் போகின்ற அவருடைய இறுதிப்பயணம் பற்றி
4. திருச்சபையை நிறுவும் முறை பற்றி

40. இறைவனின் பிள்ளைகளாகிய எங்களின் முக்கிய பணி;

1. எதிர்கால வாழ்விற்குத் தயார்படுத்தல்
2. இறை அரசின் உண்மை மதிப்பீடுகளை வளர்த்தல்
3. தேசிய சேவையில் எம்மால் முடிந்ததைச் செய்தல்
4. தேவதுரோகிகளை வாய் மூடச் செய்தல்

## பகுதி II

## ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுது

1. அ. பொதுநலம் இதன் மட்டில் அரசாங்கம் எப்படிச் செயலாற்றுகிறது?
ஆ. இனப்பிரச்சனைகளால் நாட்டின் பொதுநலத்திற்கு ஏற்படும் தீங்குகள் எவை?
இ. எம் நாட்டு மக்களால் இறைத்திட்டம் நிறைவேற நல்லோர் என்ன செய்யலாம் என்பதை விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அ. கத்தோலிக்க மெய்விவாகம் பயனுள்ளதாய் அமைய மணமக்களில் இருக்க வேண்டிய முக்கிய நோக்கங்கள் எவை?

ஆ. மெய்விவாகம் எனும் திருவருட்சாதனத்தில் கணவன், மனைவி ஆகியோர் ஏற்றுக்கொள்ளும் பொறுப்புக்கள் யாவை?

இ. இளைஞர் என்ற முறையில் நீர் உம்முடைய எதிர்கால வாழ்வுக்கு எப்படி ஆயத்தமாவீர் என்பதை விளக்குக.

3. அ. பிறர் உடைமை மட்டில் எம் கடமை என்ன?

ஆ. உம்முடைய அயலவர்களில், உம்மால் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவர்கள் யாவர்?

இ. அயலவர்களின் நலனுக்காக உம்மால் செய்யக்கூடிய உடலைச் சார்ந்த மூன்று இரக்கச் செயல்களை விபரமாகத் தருக.

4. அ. கிறிஸ்துநாதர் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளத் தம்மை எப்படி ஆயத்தப் படுத்தினார் என்பதை விளக்கி, அதிலிருந்து நீர் கற்றுக்கொள்ளும் படிப்பினைகள் மூன்று தருக.

ஆ. பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள கிறிஸ்து அப்போஸ்தலரை அழைத்த சம்பவத்தைச் சுருக்கமாக எழுதி அதனால் நீர் கற்கக்கூடிய படிப்பினைகள் மூன்றுதருக

5. அ. மனிதன் ஏன் செபம் செய்ய வேண்டும்?

ஆ. செபத்தைப்பற்றி எப்போதும் இருக்கவேண்டிய மனநிலை என்ன?

இ. நீர் எதிர்பார்த்த ஒன்று கிட்டாவிட்டால், இறை சித்தத்துக்கு அமைந்து நடக்க அருள் வேண்டி ஓர் செபம் எழுதுக.

6. அ. கிறிஸ்துநாதர் மனிதகுலத்துக்கு கடவுளின் அரசை அறிவித்த விதத்தை விளக்குக.

ஆ. இன்றைய நவீன உபகரணங்களினதும், கண்டுபிடிப்புக்களினதும் துணையுடன் இறை அரசைப் பரப்ப உம்மால் செய்யக்கூடியவற்றை விபரமாக எழுதுக.

இ. இன்று நீர் காணக்கூடிய இறையரசின் அடையாளங்களில் இரண்டை விபரமாகத் தருக.

7. அ. இன்று கடவுள் எவ்விதமாகத் தம்மை எமக்கு வெளிப்படுத்துகிறார்?

ஆ. இப்படி வெவ்வேறு விதமாக அவர் ஏன் தம்மை எமக்கு வெளிப்படுத்த வேண்டும்?

இ. இன்றைய உலக மக்கள் யாவரும் ஒரே மனிதகுலம் என்ற முறையில் ஒன்றுபட்டால் இந்த வெளிப்படுத்தலால் நாம் அடையும் பலன் என்ன?

8. அ. கிறிஸ்தவ வாழ்வு வாழ இளமையிலிருந்தே பயிலும் நீர், கிறிஸ்துவின் இளமைப்பருவ வாழ்விலிருந்து கற்கக்கூடிய படிப்பினைகளை விபரிக்க.

ஆ. தம் அழைப்பைச் சரியான முறையில் உணர்ந்து ஏற்றுக்கொண்டு, அதன்படி இறை அரசைக் கட்டி எழுப்புவதில் முன்நின்ற இலங்கையர் மூவரின் பெயர்களை எழுதி, அவர்கள் ஆற்றிய முக்கிய பணிகள் ஒவ்வொன்று எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணப் பரீட்சை

## டிசம்பர் 1980

## இடைக்காலப் பாடத்திட்டம்

# கிறிஸ்தவம் றோமன் கத்தோலிக்கம்

ஒரு மணி

**கவனிக்க:**

I. எல்லா வினுக்களுக்கும் விடை தருக.

II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினுக்கள் ஒவ்வொன்றுக்கும் (1) (2) (3) (4) என்று இலக்கம் இடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதுவதனைத் தெரிவு செய்க.

III. விடைத்தாளில் நீர் தெரிந்த விடைக்கு ஒத்திருக்கும் கூட்டில் புள்ளடியைப் ''×'' பென்சிலால் இடுக.

IV. விடைத்தாளின் பிறபக்கத்திலே மேலதிக அறிவுறுத்தல்கள் தரப்பட்டுள் ளன. அவற்றைக் கவனமாக அவதானிக்க.

1. ஞானஸ்நானத்தின் வழியாக நமக்குத் திறந்துவைக்கப்பட்டிருக்கும் ஞானச் செல் வங்களாவன;

1. சத்திய விசுவாசம் 2. தெய்வீக உயிரில் பங்கு
3. திருச்சபையில் அங்கத்துவம் 4. மேற்கூறியவை யாவும்

2. அப்படியன்று அருளப்பன் என அவரை அழைக்க வேண்டும்; இப்படியாகக் கூறப் பட்டது;

1. சக்கரியாஸ் அவர்களினுல் 2. எலிசபேத்தம்மாளினுல்
3. மரியாளினுல் 4. சூசைப்பபரால்

3. கடவுள் இருக்கிறுர் என்பதை ஏற்றுக்கொள்ளாதோர்;

1. அஞ்ஞானிகள் 2. விஞ்ஞானிகள்
3. தத்துவ ஞானிகள் 4. பரிணுமவாதிகள்

4. மனிதர் மட்டில் இறைவனின் அன்பு முழுமையாக வெளிப்படுவது;

1. படைப்புக்கள் மூலம் 2. புனிதர்கள் மூலம்
3. இயேசுவின் மூலம் 4. திருக்குடும்பத்தின் மூலம்

5. மனிதர் நன்மையானவற்றைச் செய்வது;

1. ஆள்வோரின் சட்டங்களுக்கமைய
2. விசுவாசத்தின் வழிநடத்துதலுக்கமைய
3. இயற்கைச் சட்டங்களுக்கு அமைய
4. மனச்சான்றுக்கு அமைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. எம்வாழ்வின் முக்கிய தேவையென இயேசு குறிப்பிட்டது;

1. தேவைப்படும் அளவுக்கு மட்டும் அவசியமானவற்றைத் தேடிக்கொள்வதாகும்.
2. பிதாவின் அரசைத் தேடுவதாகும்
3. எப்போதும் தன் வார்த்தைக்கு செவி மடுப்பதாகும்
4. தனக்குக் குற்றம் செய்தோரை மன்னிப்பதாகும்

7. இறைவன் பாவிகள் மட்டில் பொறுமையாயிருக்கக் காரணம்;

1. அவர்களது பாவங்களின் கனுகனத்தை உலகினர் நன்முறையில் விளங்கிக் கொள்வதற்காக
2. பொறுமை சிறந்ததோர் இறைபண்பு என்பதை மனிதன் சிறப்பானமுறையில் விளங்கிக் கொள்வதற்காக
3. இறைத்திட்டத்தில் அவசரத் தீர்மானங்கள் இல்லை என்பதைக் காட்டுவதற்காக
4. பாவி தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட போதிய கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்பதால்

8. குருவே நாம் இங்கே இருப்பது எத்துணை நன்று. உமக்கொன்றும், மோயீசனுக்கொன்றும், எலியாசுக்கொன்றுமாக கூடாரம் மூன்று அமைப்போம். இப்படியாக;

1. கிறிஸ்து மறுவுரு பெறும்போது இராயப்பர் கூறினர்
2. ஏராளமான மீன்கள் பிடிபட்டபோது அருளப்பர் கூறினர்
3. விண்ணேற்றத்தின்போது இராயப்பர் கூறினர்
4. பரிசுத்த ஆவியின் வருகையின்போது மத்தேயு கூறினர்

9. ஆதிப்பெற்றோர் கனமான பாவம் செய்தபோதிலும் இறைவன்;

1. அவர்கள் மேல் இரக்கம் கொண்டார்
2. அவர்களின் சுதந்திரத்தை முற்றாகப் பறித்துவிடவில்லை
3. மேலும் தன் பிள்ளைகளாகவே ஏற்றுக்கொண்டார்
4. கடுந்துன்பங்களுக்கு அவர்களை ஆளாக்கவில்லை

10. பாவசங்கீர்த்தனத்தில் நம் பாவங்களைக் குருவிடம் வெளிப்படுத்துகின்றோம். ஏனென்றால்;

1. அதனால் நம் பணிவும், மனஸ்தாபமும் வெளிப்படுகின்றது
2. பாவ மன்னிப்பளிக்க எம் பாவங்கள் குருவுக்குத் தெரிந்திருக்க வேண்டும்
3. அதே பாவங்களை நாம் திரும்பச் செய்யாதிருக்க வேண்டுமென்பதால்
4. ஒளிப்படுத்தாத ஓர் பாவத்துக்கும் மன்னிப்படைய முடியாதென்பதால்

11. ஆண்டவரே, இப்போது உம் அடியானை அமைதியாகப் போகவிடும். ஏனென்றால் உமது வாக்கு நிறைவேறிற்று. இதில் அடியானுகக் கருதப்படுபவர்;

1. சக்கரியாஸ் 2. சூசையப்பர் 3. சிமியோன் 4. இராயப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. மரியாள் மாசின்றி உற்பவித்தாள் என்ற விசுவாச உண்மை பிரகடனப்படுத்தப் பட்டது;
   1. ஒன்பதாம் பத்திநாதர் பாப்பரசரால் 1854ல்
   2. பதினைந்தாம் ஆசீர்வாதப்பர் பாப்பரசரால் 1914ல்
   3. பன்னிரண்டாம் பத்திநாதர் பாப்பரசரால் 1938ல்
   4. இருப்த்திமூன்றும் பாப்பரசரால் 1963ல்

13. நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார். கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கிறார் என்று மக்கள் கடவுளை மகிமைப்படுத்தியது:
   1. கிறிஸ்துவை ஆரவாரத்துடன் ஜெருசலேம் மக்கள் வரவேற்றபோது
   2. கிறிஸ்து ஐயாயிரம் பேருக்கு உணவளித்தபோது
   3. கிறிஸ்து நயிம் ஊர்க் கைம்பெண்ணின் மகனை உயிர்ப்பித்தபோது
   4. ஜயிரசின் மகளை உயிர்ப்பித்தபோது

14. இயேசு திமிர்வாதக்காரனைக் குணமாக்கியபோது உன் பாவங்கள் மன்னிக்கப் பட்டன எனக் கூறக் காரணம்;
   1. அந்நாட்களில் குருக்களுக்குப் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் இல்லை என்பதைக்காட்ட
   2. மனுமகனுக்குப் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் உண்டு என்பதைக்காட்ட
   3. திமிர்வாதநோய் குணமாவதற்குப் பாவமன்னிப்புப் பெறவேண்டும் என் பதைக் காட்ட
   4. பாவிகள் கடும் நோய்களுக்கு ஆளாவதால் மக்கள் பாவம் செய்யாதிருக்கும் படி அறிவுறுத்துவதற்காக

15. தாம் போகவிருந்த ஊர்களுக்கு எழுபத்திரண்டு சீடர்களை அனுப்பி, அவர்களுக்கு இயேசு கூறியதாவது;
   1. அறுவடையைச் சேகரியுங்கள்
   2. கிடைப்பதை உண்டும் குடித்தும் இருங்கள்
   3. கடவுளின் அரசு உங்களை நெருங்கியுள்ளதென மக்களுக்கு அறிவியுங்கள்
   4. காலில் ஒட்டிய தூசியை உதறிவிட்டுத் திரும்பி வாருங்கள்

16. உள்ளபடியே இவர் நீதிமான்தான் இவ்வசனம் கூறப்பட்டது;
   1. வலதுபக்கக் கள்வனால்
   2. இரவில் இயேசுவைச் சந்தித்த நிக்கோதேமுசினால்
   3. சிலுவையடியில் நின்ற நூற்றுவர் தலைவனால்
   4. ஸ்நாபக அருளப்பரினால்

17. எப்போதும் நற்கருணை பெறக்கூடியவர்கள்;
   1. தினம் பூசைக்குச் செல்வோராவர்
   2. எப்போதும் பாவசங்கீர்த்தனம் செய்வோராகும்
   3. நல்ல கருத்தோடு அருள்நிலையில் இருப்பவர்களாகும்
   4. ஆன்மீக இரக்கச் செயல்கள் செய்வோராகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. நாம் சமுதாயத் தோரணையில் கடவுளுக்குப் பொதுஆராதனையும், பகிரங்க ஆராதனையும் செலுத்த வேண்டும். ஏனெனில்;
1. குடும்பம், நாடு, திருச்சபை ஆகிய சமுதாயங்கள் கடவுளிடமிருந்து வந்தவை
2. அநேகர் ஒன்றுகூடினால் சிறப்பான விதத்தில் ஆராதனை செலுத்தலாம்
3. அதனால் சமுதாயத்துக்கு இறைஆசீர் கிட்டும்
4. பொது ஆராதனையை இறைவன் மிகவும் விரும்புகின்றார்

19. ஞாயிறு பூசைகளில் நாம் பிரசங்கம் கேட்க வேண்டும். ஏனெனில்;
1. அதனால் பங்குப் பணிகளைப் பற்றி நாம் அதிகமாகத் தெரிந்துகொள்ளலாம்
2. அதைக் கேட்பது பலிப்பூசையின் ஓர் பகுதியெனக் கருதப்படுகிறது
3. திருச்சபைக் கட்டளைகள் அவ்வாறு பணிக்கின்றன
4. அதனால் நாம் விசுவாச உண்மைகளை நன்கு அறிந்துகொண்டு, அதற்கேற்ற முறையில் ஞான இன்பத்துடன் வாழமுடியும்

20. நம்பிக்கை என்னும் தேவகொடையை நாம் பெற்றுக்கொள்வது;
1. முதற்சற்பிரசாதம் பெறும்போது கிறிஸ்துவின் மூலம்
2. ஞானஸ்நானம் பெறும்போது பரிசுத்ததிரித்துவத்தின் மூலம்
3. உறுதிப்பூசுதலில் பரிசுத்தஆவியின் மூலம்
4. பாவசங்கீர்த்தனத்தில் குருவின் மூலம்

21. மனிதர் எல்லோரும் உங்களைப் புகழும்போது உங்களுக்கு ஐயோ கேடு. ஏனெனில்
1. பிறகு அவர்கள் அழுது புலம்புவார்கள்
2. நீங்கள் அகங்காரப்பட்டு அழிவீர்கள்
3. அவர்கள் பசாசினால் ஏமாற்றப்பட்டவர்களாவர்
4. அவர்களுடைய முன்னோரும், போலித் தீர்க்கதரிசிகளும் அவ்வாறே செய்தனர்

22. நாங்கள் செய்யவேண்டியதென்ன என்று படைவீரர் கேட்டதற்கு ஸ்நாபக அருளப்பர் அளித்த பதில்;
1. இரண்டு அங்கி வைத்திருப்பவன் இல்லாதவனோடு பகிர்ந்துகொள்ளட்டும்
2. குறிக்கப்பட்ட தொகைக்கு மேல் கேட்கவேண்டாம்
3. கிடைக்கும் சம்பளமே போதுமென்றிருங்கள்
4. மற்றவர்களின் குற்றங்கள் பற்றிப் பேசவேண்டாம்

23. அப்போஸ்தலர் பன்னிருவரைத் தெரிந்தெடுத்த தினத்துக்கு முந்தின இரவு இயேசு
1. நற்கருணையை ஏற்படுத்தினார்
2. ஜெத்சமெனித் தோட்டத்தில் செபித்தார்
3. அவர்களின் திறமைகளை ஆராய்ந்தார்
4. ஓர் மலையில் ஏறி இரவு முழுவதும் செபத்தில் ஆழ்ந்திருந்தார்

24. இயேசு, வரவிருக்கும் இறையரசின் நற்செய்தியை அறிவித்து;
1. திருச்சபையை ஸ்தாபிக்கும் ஆரம்ப வேலைகளை மேற்கொண்டார்
2. புதிய உடன்படிக்கையில் குறிப்பிட்ட பணிகளைச் செய்து முடித்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பழைய உடன்படிக்கையை நிறைவு செய்தார்
4. யூதமக்களுக்கு மீட்பின் வழியை விளக்கினார்

25. இறைவனின் பிள்ளையாக வாழ எமக்கு அத்தியாவசியமானது;
1. இறைவனின் கட்டளைகளை நன்றாகத் தெரிந்துகொள்வது
2. இறைவனின் வரப்பிரசாதத்தைப் பெற்றுக்கொள்வது
3. இறைபுகழ் பாடுவது
4. இறைவனின் சேவையில் நுழைவது

26. ஒளியின் மக்களைவிட இவ்வுலகின் மக்கள் தம் போன்றவர்களிடத்தில் மிக்க விவேகமுள்ளவர்கள் என்பதைக் காட்ட இயேசு கூறிய உவமை;
1. அறிவற்ற செல்வனின் உவமை
2. நீதியற்ற கண்காணிப்பாளனின் உவமை
3. பணக்காரனும் இலாசரும் உவமை
4. ஊதாரி மைந்தனின் உவமை

27. எட்டாம் கற்பனைக்கிணங்க சமாதானத்துடனும், ஆனந்தத்துடனும் வாழமுடிவது
1. மற்றவர்களைப் பற்றியும் அக்கறைப்படுவதன் மூலம்
2. ஒருவர் ஒருவரில் நம்பிக்கை வைப்பதன் மூலம்
3. மற்றவர்களின் குறைகளைப் பற்றிப் பேசாமல் இருப்பதின் மூலம்
4. தங்களிடம் உள்ளதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம்

28. பணம் தேடுவதும் சொத்துச் சேகரிப்பதும்;
1. மனிதனின் அடிப்படை உரிமையாகும்
2. பொதுநல கோட்பாடுகளின்படி அமைய வேண்டும்
3. நம் வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகக் கருதக்கூடாது
4. வாழ்வை வெற்றிகரமாய் அமைத்துக் கொள்வதற்கு வழியாகும்

29. உன்னை ஒருவன் மணவிருந்துக்கு அழைக்கும்போது;
1. அதனால் உனக்குக் கிட்டும் கௌரவத்துக்கு நன்றி கூறு
2. அவ்விடத்துக்குப் பொருத்தமான ஓர் சொற்பொழிவாற்று
3. முதலிடத்தில் அமராதே
4. உனக்குக் கிடைத்த அழைப்பைப் பற்றி ஒருவரிடமும் கூறாதே

30. சட்டரீதியான கிறிஸ்தவ திருமணத்துக்கு இருக்கவேண்டிய தகுதிகள்;
1. வாழ்வதற்குப் போதிய பொருளாதார வசதி
2. இருபக்க உறவினரினதும் சம்மதம்
3. இருவரும் கத்தோலிக்க மதத்தினராய் இருத்தல்
4. விவாகத்துக்கான ஆயத்த வகுப்புகளில் பங்குபற்றி அறிவு பெறுதல்

31. இயேசு இளமைப் பருவத்தில் மூன்று நாட்கள் கோவிலில் தங்கி இருந்தது;
1. வேதபாரகருக்கு இறைக்கோட்பாடுகளையும், சட்டத்தையும் விளக்கிக் கொடுப்பதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பெற்றோருக்குப் பிள்ளைகள் மட்டில் உள்ள பொறுப்பை உணர்த்துவதற்காக
3. பிள்ளைகளின் சுதந்திரம் மதிக்கப்படவேண்டும் என்பதை ஞாபகப்படுத்துவதற்காக
4. தந்தையின் சித்தத்துக்கமையச் செயலாற்ற வேண்டும் என்பதைக் காட்டுவதற்காக

32. கிறிஸ்துவின் படிப்பினைக்கிணங்க, தன் தலைவனின் விருப்பத்தை அறிந்திருந்தும் முன்னேற்பாடு செய்யாமலும் அல்லது விருப்பத்தின்படி நடவாமலும் இருந்த ஊழியன்.......

1. சேவையிலிருந்து நீக்கப்படுவான்
2. நன்றாய் அடிபடுவான்
3. சமூகத்தால் வெறுக்கப்படுவான்
4. வார்த்தைகளால் சொல்ல முடியாதளவு அவமானப்படுவான்

33. துறவற வார்த்தைப்பாடுகளுக்கிணங்க வாழ்வதென்பது;

1. தான் முழுமையடைய முயற்சிக்கும் ஓர் வழியாகும்
2. உலகக் கவலைகளிலிருந்து தப்புவதற்கு ஒரு வழியாகும்
3. ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் சமூக சேவையாற்றுவதாகச் செய்துகொள்ளும் ஓர் ஒப்புதலாகும்
4. வாழ்வை உல்லாச வாழ்வாக்குவதற்கான வழியாகும்

34. என் விசுவாசத்திற்காகவோ, தூய்மைக்காகவோ கற்பு போராட நேரிடின்;

1. குருவின் ஆலோசனைக்கிணங்க நடந்துகொள்வேன்
2. பரிசுத்தஆவி என்னைக் காப்பாற்றுவார் என நம்புவேன்
3. கிறிஸ்தவன் ஒருநாளும் பின்வாங்கமாட்டான் என்பதை எண்ணத்திற் கொள்வேன்
4. தோல்வியடையக்கூடும் எனத் தெரிய வந்தால் போராட்டத்தைத் தவிர்ப்பேன்

35. புனிதத் தன்மையை மதியாது செய்யப்படும் அவச் செயல் என்பது;

1. புனித இடங்களில் நல்லொழுக்கமற்ற முறையில் நடந்து கொள்வதாகும்
2. சாவான பாவத்துடன் செபிப்பதாகும்
3. தகுதியற்ற விதத்தில் அருளடையாளங்களைப் பெறுவதாகும்
4. தேவாலயத்தில் பற்பல வியாபாரங்கள் நடத்துவதாகும்

36. நாம் பரிசுத்தர்களை மன்றாடுகின்றோம் ஏனெனில்;

1. அவர்கள் பெயரால் நாம் ஞானஸ்நானம் பெற்றுள்ளோம்
2. எம் கோவில்கள் அவர்கள் பெயரால் அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளன
3. அவர்கள் இறைவன் முன் எம் மத்தியஸ்தராய் இருக்கின்றனர்
4. மன்றாடாவிட்டால் எம் ஊர்களுக்கு ஆபத்துக்கள் ஏற்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. கடைசிநாளில், மனுமகன் தம் மகிமைப் பிரதாபத்தோடு வருவது;
1. பசாசின் வல்லமையை முறியடிக்க
2. அவர் திரும்ப வருவார் என்ற இறைவாக்கு நிறைவேறுவதற்காக
3. சீவியரையும், மரித்தோரையும் நடுத்தீர்ப்பதற்காக
4. மேற்கூறிய யாவற்றையும் நிறைவேற்றுவதற்காக

38. திருச்சபை கிறிஸ்துவின் மறைஉடல். அதன் அவயவங்கள்;
1. சகல புனிதர்கள்
2. அகில உலக மேற்றிராணிமார்களின் பொதுச்சங்கம்
3. பாப்பானவரும் கருதினால்மார்களும்
4. விசுவாசிகள் அனைவரும்

39. அரசில் பதவி வகிக்கும் ஓர் கிறிஸ்தவன்;
1. தன் சுயநலத்தைவிட பொதுநலம் கருதவேண்டும்
2. தன் உரிமைகள் மட்டில் எப்போதும் விழிப்புள்ளவனாய் இருத்தல் வேண்டும்
3. சட்டதிட்டங்களைத் துல்லியமாய்க் கடைப்பிடிக்க வேண்டும்
4. பதவியின் தன்மைக்கேற்ற விதத்தில் வாழவேண்டும்

40. ..........ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார் இயேசு வாசித்த இந்த இறைவாக்கு ஏட்டுச் சுருள்;
1. ஸ்நாபக அருளப்பருடையது 2. இசையாசுடையது
3. ஜெரேமியாசுடையது 4. சிமியோனுடையது

## பகுதி II

1. அ. நாம் ஏன் இறைவனில் விசுவாசம் வைக்க வேண்டும்?
ஆ. இன்று கத்தோலிக்க சிறுவர் சிறுமியரின் உண்மை விசுவாசத்திற்கெதிராகச் செயற்படும் சமூக சக்திகள் நான்கு குறிப்பிடுக.
இ. மேற்குறிப்பிட்ட சக்திகளில் ஒன்றைத் தெரிந்தெடுத்து, கிறிஸ்தவப் பிள்ளைகள் அச்சக்தியை வெல்வதற்கு எப்படிச் செயலாற்ற முடியுமென்பதை விளக்குக.

2. அ. உமது கிறிஸ்தவ அழைப்பில், உமக்குள்ள பொறுப்புக்களில் நான்கைத் தருக.
ஆ. இவ்வழைத்தலைச் சரியான முறையில் நிறைவேற்ற, காய்க்காத அத்திமரத்தின் உவமைமூலம் கற்றுக்கொள்ளக் கூடியவை நான்கு எழுதுக.
இ. படிப்பில் கவனம் செலுத்தாது மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிக்கும் உம் நண்பருக்கு நல்வழிகாட்ட என்ன அறிவுரை கூறுவீர்?

3. அ. பரிசுத்த திரித்துவத்தைப் பற்றி நம் திருமறை கற்பிப்பது என்ன என்பதை விபரிக்க.
ஆ. இவ்வுலகில் பரிசுத்த திரித்துவத்தின் அடையாளமாகக் கருதக்கூடியது எது? அதற்கான காரணங்களும் தருக.
இ. பரிசுத்த திரித்துவத்தின் மூலம், உம் வாழ்வுக்கு வழிகாட்டக்கூடியவை நான்கு தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அ. இராயப்பர் வெளியே போய் மனம் வெதும்பி அழுதார். இராயப்பர் மனம் வெதும்பி அழுவதற்குக் காரணமாக இருந்த சம்பவத்தை லூக்கா நற்செய்தியில் காணப்படுவதுபோல் எழுதுக.

ஆ. தாங்கள் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டதைக் கீழ்க் காண்பவர்கள் எப்படிக் காட்டினர்?

1. எகிப்தில் யோசேப்பின் சகோதரர் 2. தாவீது அரசர்

3. நினிவே நகர மக்கள் 4. சக்கேயு

இ. ஒருவரின் பாவசங்கீர்த்தனம் பயனற்றுப்போகக் கூடியதற்கான முக்கிய காரணங்கள் நான்கு தருக.

5. அ. கடைசி இராவுணவின்போது இயேசு தம் அப்போஸ்தலருக்கு எந்த அதிகாரத்தைக் கொடுத்தார் என்பதை எழுதி, அதன்மட்டில் அவர்களைப் பின்தொடர்ந்து வருவோர்க்குள்ள இன்றைய பொறுப்புக்களையும் விளக்குக.

ஆ. திவ்விய நன்மையில் கிறிஸ்துநாதர் என்ன செயலாற்றுகிறார்?

இ. நற்கருணை பெறுவதினால் கிறிஸ்துவுக்குச் சமானமாகும் உம் மூலம் கிறிஸ்து இன்று நற்செய்தியை மக்களுக்கு அறிவிக்கிறார். இக்கருத்துக்குப் பத்து வரிகளுக்கு மேற்படாத விதத்தில் சிறு விளக்கமொன்று தருக.

6. அ. ஒருவனது மனச்சான்று பாவப்பழக்கத்தால் இருளடைந்து போயிருப்பின் ஒரு காரியத்தை நேர்மையாகச் சரியாக முடிவு செய்ய அவன் என்ன செய்ய வேண்டும்?

ஆ. ஐந்தாம் கற்பனையின்படி உம் உயிரையும், உடலையும் பொறுத்தமட்டில் உமக்குள்ள பொறுப்புக்கள் இவ்விரண்டு எழுதுக?

இ. இன்று அநேக இளைஞரின் நல்லொழுக்கம் குன்றக் காரணமானவை நான்கு எழுதி, கிறிஸ்தவன் என்ற முறையில் அவற்றை நிவர்த்தி செய்ய என்ன செய்யலாம் என்பதையும் தருக.

7. அ. நம் அயலாரின் ஆன்ம ஈடேற்றத்தைப் பொறுத்த அளவில் பலர் பாவங்கள் கட்டிக்கொள்ளக் காரணம் என்ன.

ஆ. ஆன்மாவைச் சார்ந்த நான்கு இரக்கச் செயல்கள் எழுதுக.

இ. நீர் ஓர் பாடசாலை மாணவன் என்ற முறையில் மேற்கூறிய ஓர் ஆன்மாவைச் சார்ந்த செயலை, நிறைவேற்றும் முறையை விளக்குக.

8. அ. காணப்படும் இவ்வுலகின் மாற்றம் என்பதினால் நீர் என்ன கருதுகின்றீர்?

ஆ. இம்மாற்றம்பற்றி சிந்திக்குமுகமாக நாம் அடிக்கடி செபிக்கும் ஓர் செபம் அல்லது கீர்த்தனையை எழுதுக.

இ. இன்று நம் நாட்டில் நடைபெறும் பலவித அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் இறைப்போதகம் படிப்படியாக நிறைவு பெறும் விதத்தை விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் 1 விடைகள்

1. மிகச்சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1 — 3 | 6 — 3 | 11 — 3 | 16 — 2 |
| 2 — 3 | 7 — 4 | 12 — 1 | 17 — 3 |
| 3 — 2 | 8 — 2 | 13— 2 | 18 — 1 |
| 4 — 1 | 9 — 1 | 14 — 4 | 19 — 4 |
| 5 — 1 | 10 — 4 | 15 — 4 | 20 — 1 |

2. சுருக்கமான விடை தருக:

1. விசுவாசம், நம்பிக்கை, பரமஅன்பு
2. திருமுழுக்கு நம்மைக் கடவுளின் பிள்ளையாக்கி, திருச்சபையுடன் இணைக்கின்றது. இதனால் நாம் அவரது ஞானச் செல்வங்களைப் பெறத் தகுதியுடையவர்களாகின்றோம். திருமுழுக்குப் பெற்றாலன்றி ஏனைய திருவருட்சாதனங்களைப் பெறமுடியாதாகையால் இது நுழைவாயிலாக அமைகின்றது.
3. சங்கத் திருவுரையாகமம்
4. பரிசுத்த ஆவியின் திருவிழாவுக்கு அடுத்த ஞாயிறு மூவொரு கடவுளின் பெருவிழா கொண்டாடப்படுகின்றது.
5. வேதாகமம் செபப்புத்தகங்கள், மறைக்கல்வி நூல்கள், புனிதர்களின் சரிதை, கத்தோலிக்க வெளியீடுகள்.
6. படைப்பு, மனிதர், திருச்சபை, வேதாகமம், நிகழ்ச்சிகள், காலத்தின் அறிகுறிகள், வாழ்வின் உண்மைகள், கிறிஸ்தவ சான்று வாழ்வு என்பன வழியாகத் தம்மை வெளிப்படுத்தி வருகின்றார்.
7. குரு — குருவோடு சேர்ந்து பலி ஒப்புக்கொடுத்தல்
   அரசன் — இறைவனின் அன்பின் அரசைப் பரப்புதல்
   இறைவாக்குரைஞன் — இறைவார்த்தையை எடுத்துரைத்தல்
8. 1. ஒரு கடவுள் மூன்று ஆட்கள் 2. இரண்டாம் ஆள் சிலுவை வழியாக நம்மை மீட்டார்.
9. கிறிஸ்துவின் உயிர்ப்பினால் மீட்கப்பட்ட மனிதனும், உலகமும், இறையரசுக்காக உருமாற்றம் அடைந்து புதுப்படைப்பாகும் நிலை.
10. பெற்றோர் சகோதரரின் அன்பு, பராமரிப்பு, பாதுகாப்பு, மனமகிழ்ச்சி, உதவி, நட்பு, நம்பிக்கை இவற்றால் இறைவனின் அன்பைக் குடும்பத்தில் அனுபவிக்கலாம்.

3. கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.

| | |
|---|---|
| 1. திருச்சபையிடம் | 2. தீர்ப்பளிப்பார் |
| 3. கிறிஸ்து | 4. பெந்தக்கோஸ்து |
| 5. மீட்பளிக்கின்றன | 6. இறையரசு |
| 7. யாத்திராகமம் | 8. உவமைகள் |
| 9. நன்றி | 10. விசுவாசம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி II

1\. அ. திருமுழுக்கின்போது விசுவாசம் என்னும் கொடையைப் பெற்றுக்கொண்டேன்.

ஆ. ஆழமற்ற விசுவாசம், உலக மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம், நவீன இயக்காற்றல் சக்திகள், உலக மயமாக்கல், மறையறிவு குறைவு, உலகப்போக்கான சமூகத் தொடர்புச் சாதனங்கள் என்பன.

இ. — அடிக்கடி செபம் செய்தல்
— வேதாகமத்தை வாசித்தல், சிந்தித்தல், வாழ்தல்
— குருக்கள், பெரியோர், பெற்றேர் இவர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடத்தல்
— திருப்பலியில் பங்கு கொள்ளல்
— திருவருட்சாதனங்களைப் பெறல்
— நல்ல நண்பர்களின் சகவாசம்
— மறைக்கல்வியை அதிகம் கற்றல்
— கத்தோலிக்க பத்திரிகைகள், புனிதர்களின் வரலாறு இவற்றைப் படித்தல்
— திருச்சபையின் படிப்பினைகளுக்கு விழிப்புணர்வு

2\. அ. காலத்தில் மனிதனுனர். உடல், உள, ஆன்ம வளர்ச்சி பெற்ருர். தன் காலம் முழுவதிலும் இறையரசு பரம்ப உழைத்தார். மனுக்குல மீட்புக்காகத் தம்மையே பலியாக்கினுர். தம் வாழ்வின் காலத்தைப் பிதாவின் விருப்பத்தை நிறைவாகச் செய்வதிலே செலவிட்டார்.

ஆ. — இறைவன் எம்மைப் படைத்து இவ்வுலகில் வாழக் காலத்தைக் கொடுத்த தன் முக்கிய நோக்கமும் இலட்சியமும் இறையரசைத் தேடுவதே.
— எமது இவ்வுலக வாழ்விலே விண்ணரசுக்கு எம்மைத் தயார் செய்யவே இறைவன் காலத்தைத் தந்துள்ளார்.
— காலத்தைத் தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டும். உடல், உள ஆன்ம வளர்ச்சியடைய நன்ருகப் படிக்க வேண்டும். காலத்திலே நிறைவான வளர்ச்சி பெற உழைக்க வேண்டும். இறையரசுக்கு ஏற்ற வழிவகைகளைத் தேட ஊக்கம் கொள்ள வேண்டும். காலத்தை வீணே செலவிடுவதால் எமது கிறிஸ்தவ வாழ்வின் உயர்ந்த நோக்கமே தவறுகின்றது.

இ. — பெற்ருர் சகோதரர் மட்டிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவேன்
— நண்பர்களுடன் இறையனுபவங்களைப் பகிர்வேன், புத்திமதி கூறுவேன்.
— துன்பப்பட்டவர்களுக்கு என்னுலான உதவி செய்வேன்
— வேதாகமம், நல்ல நூல்களை வாசித்து மறையறிவையும், பொது அறிவையும் வளர்ப்பேன்
— பாடங்களை நன்ருகப் படிப்பேன்
— பாடம் தெரியாத மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பேன்
— நண்பர்களுடன் சேர்ந்து உடற்பயிற்சி விளையாட்டுகளில் பங்கு கொள்வேன்
— பங்குப் பணிகள், செபவழிபாடுகள், கிறிஸ்தவ இளைஞர் இயக்கங்களில் பங்கு கொள்வேன்.

3\. அ. — படைப்பு வழியாகவும், குலமுதுவர்கள், இறைவாக்கினர், அப்போஸ்தலர், வழியாகவும் ஈற்றில் கிறிஸ்துவில் நிறைவாகவும் வெளிப்படுத்தினுர். இன்றும் தொடர்ந்து தம்மை பலவழிகளில் வெளிப்படுத்தி வருகின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. — இறைவன் எமது நாளாந்த வாழ்வில் — வாழ்வின் உண்மைகள் வீடு, பாட சாலை, திருச்சபை, நாடு இவற்றின் சம்பவங்களின் வழியாக

— எமது வாழ்வின் பிரச்சனைகள், இன்ப, துன்பங்கள் வழியாக தம்மை எமக்கு வெளிப்படுத்தி வருகின்றார். இந்த அடையாளங்களின் வழியாக நாம் இறைவனைத் தந்தையாகப் பராமரிக்கும் வல்லமையுள்ள ஆண்டவராக, கிறிஸ்துவை நம் மீட்பராக, எம்மோடு வாழும் ஓர் ஆளாக உணர்ந்து உறவு கொண்டு செபத்தில் அவரோடு உரையாடி வாழ்ந்து பதிலளிப்பேன்.

4. அ. விதைப்பவன் உவமை, நல்லவிதையும் களையும், கடுகுவிதை, புளிப்பு மாவு, புதையலும் முத்துக்களும், வலை.

ஆ. திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டின் கடைசி ஞாயிறாகிய கிறிஸ்து அரசர் பெருவிழாவுக்கு முன்வரும் ஞாயிறு மறைபரப்பு விழா கொண்டாடப்படுகின்றது.

இ. இறையரசை மனித உள்ளங்களிலே பரப்ப உமது அன்பு மகனை இவ்வுலகுக்கு அனுப்பிய அன்பான இறைவா, உம்மை எல்லோருக்கும் அறிவிக்கவும், உமது இறையரசின் வழியை மக்களுக்குக் காட்டும் உன்னத பணியை ஏற்க நம் இளைஞரின் உள்ளங்களைத் தூண்டியருளும். அவர்கள் தங்கள் அர்ப்பண வாழ்வால் உமது மாதிரிகையாக விளங்கவும், மறையைப் பரப்பவும் ஆர்வத்துடன் ஈடுபட உமது ஆவியின் வழியாகத் துணைபுரியும்.

5. அ. தம் ஒரே பேறான மகனின் வழியாக நாம் வாழ்வு பெறும் பொருட்டு கடவுள் அவரை உலகிற்கு அனுப்பியதன் வழியாகத் தமது அன்பை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆ. 1. ''நான் உங்களிடம் அன்பு கூர்ந்ததுபோல் நீங்களும் ஒருவர் ஒருவரிடம் அன்பு கூரவேண்டும் என்பதே எனது கட்டளை'' ( அரு 15 : 12 )

2. ''உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள், உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள்'' ( மத் 5 : 44 )

3. ''என் கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிப்பவனே எனக்கு அன்பு காட்டுகின்றவன்''

4. ''நான் உங்களுக்கு அன்பு செய்தது போல் நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள்''

5. ''ஒருவன் எனக்கு அன்பு செய்தால் என் வார்த்தையைக் கேட்பான். என் தந்தையும் அவன் மேல் அன்பு கூர்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் II விடைகள்

1. மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1 — 4 | 6 — 2 | 11 — 1 | 16 — 2 |
| 2 — 2 | 7 — 2 | 12 — 4 | 17 — 4 |
| 3 — 1 | 8 — 3 | 13 — 1 | 18 — 1 |
| 4 — 3 | 9 — 4 | 14 — 3 | 19 — 2 |
| 5 — 1 | 10 — 2 | 15 — 2 | 20 — 4 |

2. சுருக்கமான விடை தருக:

1. இறைவனின் பிரசன்னத்திற்கு அடையாளமாக இருந்தது.
2. கடவுள் எப்போதும் மாறாது ஒரே நிலையில் இருக்கிறார். அவரிடம் மாற்றம் எதுவும் இல்லை.
3. திருமுழுக்கு நற்கருணைக்கு முன்னடையாளமாக இருந்தது.
4. சலமோன் அரசன்.
5. — "உலகிலுள்ள யாவும் மனிதனையே தம் மையமாகவும், சிகரமாகவும் கொண்டுள்ளன"
   — "மனிதன் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டவன். தன்னைப் படைத்தவரை அறியவும் அவரை அன்பு செய்யவும் அவனால் இயலும். கடவுளின் மாட்சிக்காக மண்ணிலுள்ள அனைத்தையும் அவன் ஆளவும், பயன்படுத்தவும் அவை யாவற்றின் தலைவனாகக் கடவுள் அவனை ஆக்கினார்"
   ( வத். சங் 11 இன்றைய உலகில் திருச்சபை எண். 11 )
6. திருச்சபை இவ்வுலகின் நிலையாமையை எடுத்துக்கூறி விண்ணரசை அடைவதே தன் நோக்கமாகக் கொண்டுள்ளதால் இறைமக்கள் விண்ணகத்தை நோக்கிப் பயணம் செய்பவர்களாக இருக்கின்றனர். இதனால் பயணம் செய்யும் திருச்சபை என அழைக்கப்படுகிறது.
7. புனித. அருளப்பர்.
8. புரட்டாசி மாதம் 29-ம் திகதி அதிதூதர்களான கபிரியேல், இறப்பாயேல், மிக்கேல் ஆகியவர்களின் பெருவிழா.
   ஐப்பசி 2-ம் திகதி காவல் தேவதூதர்களின் பெருவிழா
9. சங்கீதம் 138.
10. எகிப்திய வியாபாரிகளின் கையினின்று மீட்டு புத்திபாரின் சிறையினின்று விடுவித்து பார்வோன் அரசனின் உயர் அதிகாரியாக உயர்த்தினார். பஞ்சகாலத்தில் மக்களுக்கு உணவளித்து மக்களின் செல்வாக்கைப் பெற்றுப் புகழுடன் வாழுமளவிற்கு இறைவன் அவர்மேல் அக்கறை காட்டினார்.

3. கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக;

| | |
|---|---|
| 1. உண்மையுள்ளவர் | 2. தூய்மையை |
| 3. கடவுளாலேதான் | 4. திட்டப்படி |
| 5. மோயீசன் | 6. மூவொரு கடவுள் |
| 7. அகஸ்தினார் | 8. அக்கறை |
| 9. கிறிஸ்து | 10. மீட்புக்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி II

1. அ. — நேர்வானவையும் அவரது குடும்பத்தாரையும் இறைவன் பெருவெள்ளத்திலிருந்து காப்பாற்றியது.
- எகிப்தில் சூசையைப் பராமரித்தது
- இஸ்ராயேலரை இறைவன் வாக்களிக்கப்பட்ட நாடு சேர்க்கும்வரை செய்த வியத்தகு செயல்கள்
- குழந்தை இயேசுவின் மேல் காட்டிய அக்கறை
- இயேசு அப்பங்களைப் பலுகச் செய்து மக்களுக்கு உணவளித்தது

ஆ. மாணவர்களின் பதில்

இ. இறைவன் நமது வானகத் தந்தை.......
கடவுள் நமக்குத் துணையுண்டு.

2. அ. — பாடசாலையிலும், வீட்டிலும் எல்லோருடனும் அன்புடன் நடந்து என்னாலான உதவிகளைச் செய்கின்றேன்
- எனக்குத் தீங்கு செய்தவர்களை மன்னித்து ஏற்றுக்கொள்கின்றேன்
- எனது பேச்சினால், செயலினால் மற்றவர்களுக்கு உதவுவதன் வழியாக அன்பைப் பகிர்ந்து வாழ்கின்றேன்

ஆ. — பகை, வன்மம், பழிவாங்கல், தன்னலப்பற்று, பேராசை, அநீதி, பிறரின் நற்பெயரைக் கெடுத்தல், பொறாமை, போட்டிமனப்பான்மை, இன,மொழி மத உண்மைகளுக்கு மாறான சக்திகள்

இ. — எல்லோரையும் சகோதரராக அன்பு செய்தல்
- பகைவரை மன்னித்து ஏற்றுக்கொள்ளுதல்
- பகிர்ந்து வாழ்தல்
- பிறரைப்பற்றி நல்லெண்ணம் கொள்ளல்
- பிறரது நலனில் அக்கறை கொள்ளல்
- நீதி, நேர்மையோடு நடத்தல் என்பன.

3. அ. இறைவனின் எல்லையற்ற அன்பு, தூய்மை, நீதி, உண்மைத்தனம், இரக்கம், பரிவு, அளவற்ற ஞானம், வல்லமை.

ஆ. நாம் மற்றவர்களை அன்பு செய்து, உண்மையுள்ளவர்களாக வாழ்ந்து இரக்கம் காண்பித்து தூய்மையான மனத்தினராக அறிவு ஆற்றல் படைத்தவர்களாக உண்மை, நீதி முதலிய நற்பண்புகளைக் கடைப்பிடித்து வாழும்போது நாம் இறைவனின் மேற்கூறிய பண்புகளில் பங்கு கொள்கின்றோம். ஏனெனில் நாம் இறைவனின் சாயலாகவும், பாவனையாகவும் படைக்கப்பட்டுள்ளோம்.

4. அ. — ''மருத்துவன் நோய் அற்றவர்களுக்கன்று, நோயுற்றவற்கே தேவை'' (லூக் 5 : 31) என்ற கூற்றால் தாம் பாவிகளையே மீட்க வந்தார் என்பதைக் காட்டுகின்றார்.
- ''பாவிப் பெண்ணுக்கு மன்னிப்பு உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன... சமாதானமாய்ப் போ'' (லூக் 7 : 48 – 50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– திமிர்வாதக்காரனுக்கு மன்னிப்பு – ''உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன'' (லூக் 5 : 53)

– சக்கேயு வீட்டில் இயேசு – ''இழந்து போனதைத் தேடி மீட்கவே மனுமகன் வந்துள்ளார்'' (லூக் 19 : 10)

– ''மனந்திரும்பும் ஒரு பாவியைக் குறித்துக் கடவுளுடைய தூதரிடையே மகிழ்ச்சியுண்டாகும்'' (லூக் 15 : 10)

– ''மனந்திரும்பத் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்து வானகத்தில் உண்டாகும் மகிழ்ச்சியை விட மனந்திரும்பும் ஒரு பாவியைக் குறித்து மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும்'' (லூக் 15 : 7)

ஆ. நாம் எமக்குத் துன்பம் செய்பவர்களைப் பழிவாங்காது மன்னித்தால் மட்டுமே இறைவன் எம்மையும் மன்னிப்பார் என்பதைக் காட்டுகின்றது.

இ. அவர்கள் செய்த துன்பங்களை மறந்து உறவாடி அவர்களது தேவைகளில் உதவி, பகைமையை மறந்து நட்புறவு கொள்வேன்.

5. அறிவியலாளர் (விஞ்ஞானிகள்) தமது ஆழ்ந்த அறிவு ஆராய்ச்சியின்படி மனிதன், உலகம், படைப்புயிர்கள் அனைத்தின் வளர்ச்சியைப் பலரும் பற்பல விதமாகக் கூறுகின்றனர். ஆனால் திருச்சபை இறைவனே உலகையும், மனிதரையும் அனைத்துயிர்களையும் படைத்தார் என்று வேதாகமத்தின் வழியாகப் படிப்பிக்கின்றது. வேதாகமம் வேத உண்மைகளைப் போதிக்கவே எழுதப்பட்டது. அறிவியல் வளர்ச்சியைப்பற்றிக் கூறவல்ல. இரண்டும் தத்தம் தனிமுறையில் நமக்கு முழுமுதல் அறிவைத் தந்து உதவி செய்கின்றன. இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானதல்ல. வேதாகம ஆசிரியரின் நோக்கு இறையியல் சம்பந்தமானது. விஞ்ஞானிகளின் நோக்கு அறிவியல் சம்பந்தப்பட்டது. எனவே, திருச்சபை படிப்பினைப்படி கிறிஸ்தவ விசுவாசத்தைப் பெற்ற நாம் வேதாகம ஆசிரியர் என்ன நோக்கோடு படைப்பின் வரலாற்றை எழுதினாரோ அதை நாம் அறிந்து விசுவசிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் III விடைகள்

1. மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1 — 2 | 6 — 1 | 11 — 2 | 16 — 1 |
| 2 — 1 | 7 — 4 | 12 — 2 | 17 — 3 |
| 3 — 3 | 8 — 2 | 13 — 1 | 18 — 2 |
| 4 — 4 | 9 — 4 | 14 — 2 | 19 — 1 |
| 5 — 3 | 10 — 3 | 15 — 4 | 20 — 4 |

2. சுருக்கமான விடை தருக:

1. ''நாம் உன்னைப் பெருங்குடியாகப் பெருகச் செய்து உன்னையும் ஆசிர்வதித்து உன் பெயரையும் மேன்மைப்படுத்துவோம். பூமியிலுள்ள இனமெல்லாம் உன் வழியாய் ஆசிர்வதிக்கப்படும்''
2. மோயீசன் வழியாக இஸ்ராயேல் மக்கள் இறையரசுக்குரியவர்களாக விசேட அழைப்பைப் பெற்றூர்கள். நீங்கள் நமது வாக்கைக் கேட்டு அனுசரிப்பீர்களாகில், எல்லா மக்களிலும் நீங்களே நமது உடைமையாய் இருப்பீர்கள். அன்றியும் நீங்கள் நமக்கு இராஜரீக ஆசாரியக் கூட்டமும், பரிசுத்த சனமுமாய் இருப்பீர்கள். இதுவே இஸ்ராயேல் மக்கள் பெற்ற உன்னத உறவாகும். (யாத். 19 : 5 - 6)
3. கடைசி நீதிபதி — சாமுவேல்
   முதல் அரசன் — சவுல்
4. எலியாஸ், எலிசேயுஸ், ஆமோஸ், ஓசே, என்போர் வடஅரசில் இறைவாக்கினராகப் பணிபுரிந்தனர்.
5. ''ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள் அவர் தம் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள். பள்ளத்தாக்குகளெல்லாம் நிரவப்படுக. மலை, குன்றுகளும் தாழ்த்தப்படுக. கோணலானவை நேராகவும், கரடு முரடானவை சமவழிகளாகவும் ஆக்கப்படுக. மனிதரெல்லாம் கடவுளின் மீட்பைக் காண்பர்'' என பாலைவனத்தில் அருளப்பரின் குரல் ஒலித்தது.
6. கன்னிமரியாள் திருச்சபையில் எமக்கு முன்னோடியாக, விசுவாசிகளின் அன்னையாக, உடன் இரட்சகியாக, நமக்காகப் பரிந்து பேசுபவளாக இன்று திருச்சபையில் வாழும் மரியாளாக இருக்கின்றாள். செபிப்பதற்கு எம்மை அழைக்கின்றாள், துன்புறுவோருக்கு ஆறுதலும் அறியாமையில் இருப்பவர்களுக்கு வழிகாட்டியுமாக விளங்குகிறாள்.
7. கிறிஸ்துவின் அருங்குறிகள், உருமாற்றம்., உத்தானம்
8. 27 நூல்கள். நற்செய்தி நூல்கள் 4, அப்போஸ்தலர்பணி 1, திருமுகங்கள் 21, திருவெளிப்பாடு 1.
9. திருமுழுக்கு அருளப்பரின் திருப்பிறப்பு — ஆனிமாதம் 24-ந் திகதி.
   திருமுழுக்கு அருளப்பர் மறைசாட்சியான விழா — ஆவணிமாதம் 29-ந் திகதி
10. இஸ்ராயேல் மக்களது இரண்டாவது அரசரும், ஜெருசலேமைப் பரிசுத்த நகராக்கி ஆண்ட வீரமுள்ள அரசருமாவர்.
   இவரது கோத்திரத்திலேயே திருக்குடும்பத்தில் வாழ்ந்த மூவரும் பிறந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.

1. புனிதத்துவத்தை
2. உயிர்ப்பு
3. இராயப்பர்
4. விசுவாசம்
5. உருமாற்றத்தின்போது
6. மறைசாட்சிகள்
7. இறைத்தன்மையும்
8. பிரச்சனைகள்
9. வன்மையாகக்
10. அறிவிலிகள்

## பகுதி II

1. அ. ஆபிரகாம், ஈசாக் யாக்கோபு

ஆ. – ஆபிரகாம் தம் விசுவாசத்தினதும், அறிவினதும் வழியாக மக்களுக்கு உண்மையையும், நீதியையும் படிப்பித்தார்.
– வாழ்வை வளப்படுத்தினார், பண்புள்ள இனமாக மாற்றினார்.
– ஒரே உண்மைக் கடவுள் என்ற எண்ணத்தை ஊட்டினார்.
– விசுவாசத்தை ஆழமாக்கி, பகைவர்களின் துன்புறுத்தல்களிலிருந்து பாது காத்தார். மக்களின் நல்வாழ்வுக்காகத் தம்மையே அர்ப்பணித்தார்.

இ. – எல்லோரும் என்னை ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் நற்பண்புகளுடன் வாழ்வேன்.
– உண்மை, நீதி, சமத்துவம், சகோதரத்துவம் இவற்றின் அடிப்படையில் எல்லோரையும் நடத்துவேன்.
– மக்களின் வளர்ச்சி, சமுதாயப் பொதுநலன், அவர்களின் முழுவிடுதலைக் காகச் சேவை செய்வேன்.
– சமுதாயத்தில் தாழ்ந்தநிலையில் உள்ளவர்களின் நல்வாழ்வுக்காக உழைப் பேன்.

2. அ. இசையாஸ், எரேமியாஸ், எசக்கியேல், மலக்கியாஸ், யோவேல், எலியாஸ், எலிசேயுஸ், ஆமோஸ், ஓசே.

ஆ. – இறைவன் சார்பில் மக்களுடன் பேசி இறைவனின் செய்தியை அளித்தனர்.
– தம் முன்மாதிரிகையான வாழ்வால் எடுத்துக்காட்டாக விளங்கினர்.
– உடன்படிக்கையை அடிக்கடி நினைவுபடுத்தி இறைவன்பால் மக்களை இட்டுச் சென்றனர்.
– பொய்த்தெய்வ வழிபாட்டை விட்டு இறைவன் பக்கம் திரும்பும்படி மக்க ளைத் தூண்டினர்.
– பத்துக்கற்பனைகளின்படி வாழப் புத்தி புகட்டினர்.
– மனிதரில் நம்பிக்கை வைக்காது இறைவனிலேயே முழுநம்பிக்கை கொள் ளும்படி மக்களை ஏவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அ. புத்தகத்தில் உள்ளதைப் படிக்கவும்.

ஆ. — அன்பினால் எல்லோரையும் சகோதரர்களாக ஏற்று, பகிர்ந்து வாழ்ந்து சமுதாயத்தில் அமைதி நிலவச் செய்தல்.
— கடவுளில் விசுவாசம் கொண்டு தூய்மையாக வாழ்ந்து இறைவனில் நம்பிக்கை கொண்டு திருப்தியாக வாழ்தல்.
— ஏற்றத்தாழ்வுகளை அகற்றி, நீதியுடனும், உண்மையுடனும் வாழ்ந்து சிரிய சமுதாயத்தை உருவாக்கல்.
— மனிதாபிமானத்தை மதித்து உண்மையை எடுத்துக்கூறி, மற்றவர்களுக்கு மீட்பின் நற்செய்தியைப் போதித்து உளமாற்றம் ஏற்படுத்தல்.

4. அ. — அருங்குறிகள் என்பது மனித புத்திக்கும், வல்லமைக்கும் அப்பாற்பட்டவை. மனித சக்தியால் செய்ய முடியாதன. இறைவனின் செயல்கள். கிறிஸ்து வழியாக ஆற்றப்பட்ட அருங்குறிகள் இறைவனின் அடையாளங்களாகவிருந்து அவரது செய்தியை எமக்குத் தருகின்றன. எனவே, கிறிஸ்துவை ஏற்று விசுவசிப்போருக்குக் கிறிஸ்துவின் அருங்குறிகள் இறைவனின் செய்தியான இறையரசையே குறித்து நிற்கின்றன.

ஆ. — புயலை அடக்குதல் (லூக் 8 : 22 — 25)
— குருடனுக்குப் பார்வை கொடுத்தது (மத் 8 : 21 — 26)
— புத்தகத்தில் குறித்துள்ளவற்றில் ஒன்றை எழுதுக.

இ. — உறுதியான விசுவாசம்
— இறைவனின் வல்லமையில் நம்பிக்கை கொள்ளல்
— இறையருளோடு கூடிய மனத்திடம்

5. அ. கடுகுமணி (லூக் 13 : 18 — 19): திருச்சபை இறையரசானது நாளாவட்டத்தில் பெரிய சாதனமாக மாறி மக்களனைவரையும் தன்னகத்துள் கொள்ளக்கூடிய இடமாக மாறும்.
நல்ல ஆயன் (லூக் 15 : 1 — 7): இறையரசின் வழியில் ஆன்மாக்கள் வழி நடத்தப்பட இறைவன் அக்கறையுடன் பராமரிக்கின்றார் என்பதை இந்த உவமை விளக்குகின்றது. இதைப்போல விரும்பிய உவமைகள்.

ஆ. — தாழ்மையான செபம் — பரிசேயனும் ஆயக்காரனும் (லூக் 18; 9 — 14)
— விடாமுயற்சியுடன் செபம் — நள்ளிரவில் நண்பன் (லூக் 11 : 5 — 8)
— மனந்தளராமல் செபித்தல் — பொல்லாத நடுவனும், கைம்பெண்ணும் (லூக் 18 : 1 — 8)

இ. ஒரு கிறிஸ்தவன் இறைவன் முன் தன்னைத் தாழ்த்தி அவரை விசுவசித்து, நம்பிக்கை கொண்டு, இறைவனுக்குப் பணிந்த மனத்தோடு விடாப்பிடியாகத் தொடர்ந்து செபிப்பதற்கு மேற்கூறியவை துணைபுரிகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் IV விடைகள்

1. மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1 – 1 | 6 – 3 | 11 – 4 | 16 – 2 |
| 2 – 3 | 7 – 4 | 12 – 2 | 17 – 1 |
| 3 – 2 | 8 – 1 | 13 – 1 | 18 – 2 |
| 4 – 4 | 9 – 3 | 14 – 3 | 19 – 3 |
| 5 – 2 | 10 – 2 | 15 – 4 | 20 – 4 |

2. சுருக்கமான விடை தருக.

1. சீனாய் உடன்படிக்கை

2. I. ஒன்றானது II. பரிசுத்தமானது III. அனைவர்க்கும் போதிக்கும் பொது இயல்பைக் கொண்டது IV. அப்போஸ்தலரிடமிருந்து வருவது

3. திருச்சபை கிறிஸ்துவின் மறையுடலாகவிருந்து, கிறிஸ்துவின் தெய்வீக உயிராலும், வாழ்வாலும், மீட்புப் பணியாலும், அரும்போதகங்களாலும் மக்களுக்கு மீட்பளித்து திருவருட்சாதனங்களால் புனிதப்படுத்தி அறியாமை, பயம் என்பவற்றிலிருந்து முழுவிடுதலையை அளிக்கின்றது. எனவே திருச்சபை மீட்பின் திருவருட்சாதனம் என அழைக்கப்படுகின்றது.

4. தை, 18–25 ஐக்கியவாரம் என அழைக்கப்படும். நமது திருச்சபையிலிருந்து பிரிந்து பற்பல கிறிஸ்தவ சபையில் வாழும் பிரிந்துபோன சகோதரர்களுக்காகச் செபித்து ஓரே மேய்ப்பனும், ஓரே மந்தையுமாக வாழும் கிறிஸ்துவின் நோக்கைக் கொண்டு உழைத்தல்.

5. குருக்களின் ஒத்துழைப்புடன் கண்காணிக்கப்படுவதற்காக ஆயரிடம் ஒப்படைக்கப்பட்ட இறைவனின் மக்களுள் ஒரு பகுதியே மறைமாவட்டம்.
பெயர்:..............................

6. திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், குருத்துவம்.

7. தவத்திரு. யோசவ்வாஸ் அடிகள், யாக்கோமே கொன்சால்வே அடிகள்.

8. குடும்ப உறுப்பினர் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பாலும், இவர்கள் ஒன்றாகக் குழுமி கடவுள்பால் எழுப்பும் செபத்தாலும், திருச்சபையின் இல்லத்திருவிடமாய் இக்குடும்பம் விளங்குவதாலும், திருச்சபையின் இறைபணியில் குடும்பம் பங்குகொள்வதாலும், சகோதரரின் சேவைக்காக நீதியையும், பிற நற்செயல்களையும் ஊக்குவித்து அப்போஸ்தலிக்க பணி செய்வதாலும் இறைபணி நற்செயல்களுக்குத் தங்களை அர்ப்பணிப்பதாலும் குடும்பம் திருச்சபையின் உயிருள்ள அணுவாக விளங்குகின்றது.

9. – பன்மொழிப் புலவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாச அடிகள்
– தமிழ்த்தூது தவத்திரு தனிநாயக அடிகள்
– தவத்திரு தாவீது அடிகள்

10. திருப்பலி, திருவருட்சாதனங்கள், திருப்புகழ்மாலை எனும் மூன்று முக்கிய செயல் வழியாகத் திருச்சபை திருவழிபாடு செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.

| | | | |
|---|---|---|---|
| 1. | வேதாகமத்தின் | 1. | திருச்சபைக்கு |
| 3. | முழுநம்பிக்கை | 4. | மெய்விவாகம் |
| 5. | கல்வாரிப்பலி | 6. | உலகமுடிவுவரை |
| 7. | அதிகாரத்தைப் | 8. | இராயப்பரால் |
| 9. | சுற்றுமடல்களென | 10. | பொதுநிலையினருக்கு |

## பகுதி II

1. அ. ஆட்டுமந்தை — ஆயன் கிறிஸ்து ஆடுகள் இறைமக்கள்

ஆட்டுப்பட்டி — ஆட்டுப்பட்டி திருச்சபை அதன் ஒரே வாயில் கிறிஸ்து
விளைநிலம் — தந்தை பயிரிடுபவர், இறைமக்கள் நல்ல விளைநிலம்.
கட்டடம் — கிறிஸ்து மூலைக்கல், திருச்சபை கட்டடம்
தாய் — திருச்சபை ஓர் அன்னை. நான் திருச்சபைத்தாயின் பிள்ளை
மணமகள் — மணமகன் கிறிஸ்து மணமகள் திருச்சபை
மறையுடல் — கிறிஸ்து உடலின் தலை. நான் உயிருள்ள உறுப்பு
திராட்சைக்கொடி— கிறிஸ்து திராட்சைக் கொடி. நான் அதன் கிளை

ஆ. கிறிஸ்து தம் மந்தையை வழிநடத்தி அதற்கு உணவளித்து வருகிறார். அதன் நல்ல மேய்ப்பர் கிறிஸ்து. கிறிஸ்து தம் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனாலன்றோ என் ஆயன் ஆண்டவர் எனக்கென்ன குறைவு என உரிமையுடன் பாடி மகிழ்கின்றோம். (சங். 22) இதனால் திருச்சபை ஒரே தலைவனைக்கொண்ட ஒரே சபை என்பது புலனாகின்றது.

இ. 1. ஆண்டவர் எனதாயன்
2. ஆண்டவரின் திருச்சந்நிதியில்
3. ஆண்டவர் எனது நல்லாயன்

2. அ. — பங்குத் திருச்சபையின் வளர்ச்சிக்கு உதவும் இயக்கங்களில் குருவுடன் இணைந்து பணியாற்றல். (ஆலயசபை, பங்குச்சபை, மறைமாவட்டசபை)
— மரியாயின்சேனை, வின்சென்டிபோல் போன்ற பக்திச் சபைகளின் வழியாக இறைமக்களுக்குப் பணியாற்றுதல்.
— ஒதுக்கப்பட்டோர், கைவிடப்பட்டோர்க்குச் சேரிப் பகுதிகளில் பணிபுரிதல்.
— மறைக்கல்வி கற்பித்தல்
— சமூகத்தொடர்பு சாதனங்கள் வழியாக நற்செய்திப் பணிபுரிதல்.

ஆ. — கோவில் திருப்பணிகளுக்கு உதவி செய்வேன் (கோவிலை அலங்கரித்தல், சுத்தம் செய்தல், வழிபாட்டுக்குரிய பொருட்களைக் கொடுத்தல்)
— திருவழிபாட்டு வாசகங்களிலும், பாடகர் குழுவிலும், பீடப்பணியாளர் குழுவிலும் சேர்ந்து பங்கில் உதவுவேன்
— பக்திச்சபைகள், கிறிஸ்தவ இளைஞர் இயக்கங்களில் இணைந்து செயற்படுவேன்
— நோயாளர், துன்பப்படுபவர்களுக்கு என்னாலான உதவியையும், ஆறுதலையும் அளிப்பேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அ. — அப்போஸ்தலரின் படிப்பினையைக் கேட்டு, செபத்திலும், அப்பம் பகிர்தலிலும் ஒரே மனதுடன் நிலைத்திருந்தனர்.
— சகோதர மனப்பான்மையுடன் தம் உடைமைகளையெல்லாம் பொதுப்பொருளாய்ப் பயன்படுத்தினர்.
— வாழ்க்கைச் சான்ருல் கிறிஸ்துவைப் பிரதிபலித்தார்கள்
— மறைபரப்புப்பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.
— விசுவாசத்திற்காகத் தம் உயிரையுமே அர்ப்பணித்து மற்றவர்களுக்குச் சான்றுவாழ்வு வாழ்ந்தார்கள்.

ஆ. — எல்லோருக்கும் எனது அன்பைப் பகிர்ந்து வாழ்வேன்
— எனது மாதிரிகையான வாழ்வால், வார்த்தையால், கடவுளின் பிள்ளையாக வாழ்ந்து இறையரசைப் பரப்ப முயலுவேன்
— சாதி, மத பேதமின்றி எல்லோரையும் சகோதரராக ஏற்றுப் பகிர்ந்து வாழ்வேன்
— சகமாணவர்களால் ஏற்படும் துன்பங்களைப் பொறுமையுடன் ஏற்று, மன்னித்து உறவாடி வாழ்வேன்.

4. அ. போதனை, திருவருட்சாதனங்கள், அருட்கருவிகள்

ஆ. அருள் உள்ளத்துக்கு அளிக்கப்படுவதைக் குறித்துக்காட்டுவதுதான் திருவருட்சாதனம். அதாவது அருள் அளிக்கும் அடையாளம் கிறிஸ்து. தமது மரணத்தாலும், உயிர்ப்பாலும், அடைந்த அருளை நமக்களித்து நம்மைப் புனிதப்படுத்தி மீட்புக்கு இட்டுச் செல்வதே திருவருட்சாதனங்களாகும். இதனுல் நாம் கிறிஸ்துவைச் சந்தித்து உறவாடுகின்ருேம்.

இ. சிலுவைப்பாதை — இயேசுவின் பாடுகளுடன் நம் வாழ்வை இணைக்க
தீர்த்தம் — தூய்மைப்படுத்த, புனிதப்படுத்த
குருத்தோலை — கிறிஸ்துவின் வெற்றி மாட்சியை நினைவுபடுத்த
விபூதி — தவத்தை அறிவுறுத்த

மெழுகுதிரி, புனிதர்களின் திருச்சுருபங்கள், செபமாலை, திருச்சிலுவை, திருப்படங்கள், மந்திரிப்புச்சடங்குகள், பல்வேறு ஆசியுரைகள் என்பனவும் அருட்கருவிகளாகும். திருச்சபையால் ஏற்படுத்தப்பட்ட இந்த அருட்கருவிகள் ஒரு கிறிஸ்தவன் பயன்படுத்தும் அனைத்தையும் அர்ச்சிப்பதற்காகப் பயன்படுத்தும் சாதனங்கள். திருவருட்சாதனங்களில் நாம் பெறும் அருள்வாழ்வில் நிலைத்திருக்கவும், வளரவும் நம் வாழ்வில் பல்வேறு சூழ்நிலைகளையும் புனிதப்படுத்தவும் அருட்கருவிகள் துணைபுரிகின்றன.

5. அ.

| | |
|---|---|
| கிறிஸ்து | கிறிஸ்து |
| இராயப்பர் | திருத்தந்தை (உரோமை ஆயர்) |
| அப்போஸ்தலர்கள் | ஆயர்கள் |
| மூப்பர்கள் | குருக்கள் |
| திருத்தொண்டர்கள் | திருத்தொண்டர்கள் |
| பொதுநிலையினர் | பொதுநிலையினர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. குருக்கள் இறைவார்த்தையை அறிவித்து நற்கருணை வழிபாட்டில் தம் திருப் பணியை ஆற்றுகின்றனர்

— உளம் வருந்தும் விசுவாசிகளைக் கடவுளோடு மீண்டும் ஒப்புரவாக்கவும், நோயுற்ற விசுவாசிக்ளின் நோயைத் தணிப்பதற்குமான பணியைச் சிறப் பாக நிறைவேற்றுகின்றனர்.

— விசுவாசிகளின் தேவைகளையும், மன்றாட்டுக்களையும் இறைத்தந்தை முன் கொணருகின்றனர்.

— மந்தையின் நடுவில் நின்று ஆவியிலும் உண்மையிலும் இறைவனை ஆராதிக் கின்றனர்.

— இறைவனின் குடும்பத்தை ஒருமனப்பட்ட சகோதரத்துவ குழுவாக ஒன்று கூட்டுகின்றனர்.

இ. அந்தந்தப் பங்கிலுள்ள குருக்கள் துறவற குருக்கள், துறவற சபைகள், திருத் தொண்டர்கள், (தியாக்கோன்மார்) இவர்களைப் பற்றிக் கேட்டு அறிந்து கொள்ளவும்.

# வினுப்பத்திரம் V விடைகள்

1. மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1 — 2 | 6 — 2 | 11 — 4 | 16 — 4 |
| 2 — 4 | 7 — 3 | 12 — 1 | 17 — 3 |
| 3 — 2 | 8 - 2 | 13 — 3 | 18 — 1 |
| 4 — 1 | 9 — 1 | 14 — 1 | 19 — 2 |
| 5 — 2 | 10 — 2 | 15 — 2 | 20 — 3 |

2. சுருக்க விடை தருக:

1. எல்லாம் வல்ல இறைவன் நாம் மீட்படைய வேண்டும் என்பதற்காக விண் ணிலிருந்து இறங்கி வந்து மனிதனுக மனிதனுடன் உறவு கொண்டார். இந்த உறவின் முதிர்ச்சியில் நம் அயலாருடன் அன்புடனும், சமாதானத்துட னும் வாழவேண்டுமென்பதைச் சிந்தித்தல்.

2. கி. பி. 451-ல் கல்சதோன் திருச்சங்கம் இயேசு கடவுளும், மனிதனும் என்ற கோட்பாட்டை வெளியிட்டது.

3. கிறிஸ்து, மெசியா, தாவீதின் மகன், ராபி, இம்மானுவேல், மனுமகன், இறைவர்க்கினர், அகரமும், னகரமும், கடவுளின் செம்மறி என்னும் பெயர் களால் அழைத்தார்கள்.

4. கிறிஸ்துவின் வாழ்வு, பாடுகள், மரணம், உயிர்ப்பு இவை அனைத்தும் ஒரே நிகழ்ச்சி. இந்த மாபெரும் நிகழ்ச்சி வழியாகக் கிறிஸ்து மனித மீட் பினை நிறைவேற்றினுர். இதுவே கிறிஸ்துவின் பாஸ்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கிறிஸ்து வரலாற்றில் ஆண்டவர் என்பதைக் குறிக்கின்றது.

6. திருச்சபை, வழிபடும் திருச்சபை, வழிபாடு நடத்தும் குரு, வார்த்தை, திருவருட்சாதனக் கொண்டாட்டம், நற்கருணை, கிறிஸ்துவின் பிரசன்னத்தில் இறைமக்கள்.

7. ஆங்காரம், கோபம், மோகம், லோபம், காய்மகாரம், போசனப்பிரியம், சோம்பல்.

8. மரியாள் இன்றைய திருச்சபையில் எமக்கு முன்னோடியாக இருக்கின்றாள். செபிப்பதற்கு எம்மை அழைக்கின்றாள். துயரப்படுவோர்க்கு ஆறுதலும் அறியாமையில் இருப்போர்க்கு வழிகாட்டியுமாக இறைவனிடம் வல்லமையுள்ள மத்தியஸ்தியுமாக விளங்கி இறைவனின் அடையாளமாகத் திகழுகின்றாள்.

9. போஞ்சு பிலாத்துவின் அதிகாரத்தில் பாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கம் செய்யப்பட்டார்.

10. மேலான அன்பு, வெறுமைநிலை, தியாகம், கீழ்ப்படிவு, இரக்கமுள்ள அன்பு, நன்மைத்தனம், இறைவனின் திருவுளத்திற்குத் தன்னைக் கையளித்தல்.

3. கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக:

| | |
|---|---|
| 1. பிறந்தநாள் விழா | 2. இரக்கம் |
| 3. இறையரசைப்பற்றி | 4. இதய சிந்தனைகள் |
| 5. மறைபொருள் | 6. திருமுழுக்கு |
| 7. கிறிஸ்து | 8. பாவிகளை |
| 9. மீட்பரைப் | 10. மரியாள் |

## பகுதி II

1. அ. — சென்மபாவத்தின் தீயவிளைவுகளால் நாம் பாவச்சார்புள்ளவர்களாக இருக்கின்றோம். இச்சையின் வழியாக இவ்வுலக இன்பம், சொத்து, மகிமை, புகழ், இவற்றின்மேல் அளவுகடந்த பற்றுக்கொள்ளச் செய்கின்றது.
— இன்னல்கள், துன்பங்களிடையே வாழவேண்டியுள்ளது. சாவு, நோவு, மரணம் ஏற்படுகின்றது.
— பசாசு உலகின்மேல் ஆதிக்கம் கொண்டுள்ளது.

ஆ. கிறிஸ்து தம் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்னும் பாஸ்கா மறைபொருள் நிகழ்ச்சிகளால் பாவத்தை வென்று இத்தீமைகளிலிருந்து முழுமையான விடுதலையை அளித்தார்.

இ. கிறிஸ்துவின் உயிர்ப்பே நாமும் ஒருநாள் உயிர்த்து என்றும் வாழ்வோம் என்ற உறுதிப்பாட்டை அளிக்கின்றது. இவ்வுலகிலுள்ளவற்றிற்காக நாம் கவலைகொண்டு விரக்தியுறுவது தவறு. ஏனெனில் இவ்வுலகில் துன்பங்களின் வழியாகவே மீட்பின், உயிர்ப்பின், அருளை நாம் பெறுகின்றோம். கிறிஸ்து

Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

வின் உயிர்ப்பு எம்வாழ்வுக்கு அழியாத நம்பிக்கையும், உறுதுணையுமாயுள்ளது. திருமுழுக்கு வழியாக நாம் உயிர்த்த கிறிஸ்துவைப் போலவே ஆகியுள்ளோம். (இவை போன்ற கருத்துக்களைக் கூறலாம்)

2. அ. — இயேசு தந்தையிடமிருந்து வந்தவராகையால் நாம் அடையவேண்டிய குறிக்கோளையும் அதற்கேற்ற சரியான வழியையும் நன்கறிந்தவர். உண்மையான வழிகாட்டியாக இயேசு நம் வாழ்நாளெல்லாம் நம்முடன் வருகின்றார். நம்முடன் இருந்து நம்மை வான்வீட்டிற்குக் கூட்டிச் செல்லும் ஒப்பற்ற வழிகாட்டியாயுள்ளார் இயேசு.

— மாந்தர் அனைவரும் மேல்வரிச்சட்டமாகக் கொண்டு பின்பற்ற வேண்டிய ஒப்பற்ற தலைவர் கிறிஸ்து. உங்களில் பெரியவனாய் இருக்க விரும்புகின்றவன் முதலில் பணிவிடை செய்யட்டும் என்றார் கிறிஸ்து. இவரையே நமது ஒப்பற்ற தலைவராக இறைவன் எமக்கு அளித்துள்ளார்.

ஆ. — இறைவனின் விருப்பத்தை ஏற்று வாழ்தல்
— சகோதர அன்புடன் பகிர்ந்து வாழ்தல்
— இறையரசுக்கு ஏற்ற மாதிரிகையாக வாழ்தல்
— பகைவர்களை அன்பு செய்து ஏற்று வாழ்தல்
— பொதுநலனுக்காக உழைத்தல் — சேவை மனப்பான்மையும், தியாகம் நிறைந்த பிறரன்பும் கொண்ட வழி வாழ்தல்
— நீதியினதும், இரக்கத்தினதும் வழியைப் பின்பற்றல்
— தன்னலம் மறுத்து பிறர்நலம் பேணும் வழிவாழ்தல் என்பன.

3. அ. மேய்ப்பனில்லாத ஆடுகள் போல் அலைந்து திரியும் மக்களின் அவலநிலையைக் கண்டு, தம்முடைய தந்தையின் இல்லம் சேர்க்கும் நல்வழியை உண்மை நெறியைக் காட்ட வேண்டுமென்னும் பேரன்பால் போதகப் பணியைச் செய்தார்.

ஆ. அவரது முக்கிய போதனைகள் மலைப்பொழிவில் அடங்கியுள்ளன. (மத் 5,6,7அ)

இ. — அவரின் போதனையைப் பற்றிக் கலந்துரையாடல்
— நற்செய்தி வழியாக அறிவித்தல்
— சான்று வாழ்வால் எடுத்துக்காட்டுதல்
— சிறப்பாகப் புதிய போதனையாகிய அன்பின் கட்டளையால் எடுத்துக்காட்டுதல்

4. அ. தலைசிறந்த போதகர், எவ்வகைச் சூழ்நிலையையும் மேற்கொள்பவர், ஆட்கொள்பவர், அன்பும் இரக்கமும் நிறைந்தவர், மன்னிக்கும் மனமுள்ளவர், பணிபுரிய வந்தவர், அநீதியைக் கண்டிப்பவர், பகைவரை நாணச் செய்தவர், செயல்வீரர் இத்தகைய பண்புகளே மக்களை ஈர்த்தன.

ஆ. இயேசுவிடம் குற்றம் காண வந்தவர்களைத் துணிவுடன் சந்தித்து அவர்கள் கெடுமதியைக் கண்டித்தார். தலைமைக் குருக்களும், மறைநூல் அறிஞரும் யேசுவின் பேச்சில் குற்றம் கண்டுபிடித்தபொழுது இயேசுவின் மறுமொழியைக் கேட்டு அவர்கள் வியந்து பேசாதிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அ. கிறிஸ்துவின் மீட்புப்பணியைத் தொடர்ந்து திருச்சபையில் விண்ணரசுக்காக உழைக்கும் துறவிகள் அப்போஸ்தலத்துவ பணிகளில் ஈடுபடுகின்றனர்.
- பங்குக் குருக்களோடு இணைந்து நற்செய்திப் பணிபுரிதல்.
- மறைக்கல்வி ஊட்டல்
- மேய்ப்புப் பணிகளுக்கு உதவுதல்
- இறைமக்களுக்குப் பல்வேறு வழிகளில் ஒத்தாசை செய்தல்
- கல்வி ஊட்டுதல்
- வைத்தியசாலை, மருந்தகம், சிறுவர் இல்லம், அநாதை இல்லம், வயோதிபர் இல்லம் இவற்றில் அன்புப் பணிபுரிதல்
- சமூக அபிவிருத்திச் சேவைகளின் ஊடாக இறையரசைப் பரப்புதல் போன்ற பணிகளில் ஈடுபடுகின்றனர்.

# வினாப்பத்திரம் VI விடைகள்

1. மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக:

| | | | |
|---|---|---|---|
| 1 — 3 | 6 — 2 | 11 — 2 | 16 — 3 |
| 2 — 2 | 7 — 3 | 12 — 2 | 17 — 1 |
| 3 — 1 | 8 — 4 | 13 — 1 | 18 — 4 |
| 4 — 2 | 9 — 1 | 14 — 4 | 19 — 2 |
| 5 — 4 | 10 — 3 | 15 — 2 | 20 — 1 |

2. சுருக்க விடை தருக:

1. இயேசு யூதப் பெரியார்களுள் ஒருவரான நிக்கதேமு என்பவருக்குத் திருமுழுக்கின் அவசியத்தைப் பற்றிச் கூறினார். உண்மையிலும் உண்மையாக உமக்குச் சொல்லுகிறேன்; ஒருவன் நீரினாலும், ஆவியினாலும் பிறந்தாலன்றி கடவுளுடைய அரசில் நுழைய முடியாது. (அரு 3 ; 5)
2. கடவுளின் பிள்ளைகளானோம், திருச்சபையின் கூட்டுறவில் இணைக்கப்பட்டோம். திருவருட்சாதனங்களையும், திருச்சபையின் ஞானச் செல்வங்களையும் பெற்று, விண்ணகம் செல்லும் உரிமையையும் அடைந்தோம்.
3. மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்.
4. விபூதிப் புதனும், பெரிய வெள்ளியும் மாமிசத் தவிர்ப்பு, உபவாச நாட்களாகும்.
5. முதல் மூன்று கற்பனைகளும் கடவுள் மட்டில் எமக்குள்ள கடமைகளை அறிவுறுத்துகின்றன. கடவுளை ஆராதித்து, அவரது திருப்பெயரைப் புனிதமாகப் போற்றிக், கடவுளின் நாளைச் சிறந்த வகையில் கொண்டாட வேண்டுமெனக் கற்பிக்கின்றன.
6. இறைவார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு
7. புனித செபஸ்தியார். (புனித அக்னெஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கிறிஸ்து பிறப்புப் பெருவிழா — மார்கழி 25-ம் திகதி
தேவதாய் மாசில்லாமல் உற்பவித்த பெருவிழா — மார்கழி 8ந் திகதி
தேவதாயின் விண்ணேற்புப் பெருவிழா — ஆவணி 15ந் திகதி.

9. கடவுள் தாம் படைத்த பொருளுக்குக் கொடுக்காத சக்தி அப்பொருளில் மறைந்திருப்பதாகக் கூறுவது குருட்டுப்பக்தியாகும்.

10. புனிதர்கள் கடவுளின் நண்பர்களாகவிருப்பதால் நமது விண்ணப்பங்களை அவர்கள் வழியாகக் கடவுளுக்கு அளிக்கின்றோம். அவர்களின் வாழ்வின் மாதிரிகையை நாம் பின்சென்று, நல்வாழ்வு வாழப் புனிதர்களின் வணக்கம் எமக்குப் பயனளிக்கின்றது.

3. கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக;

1. திருவருட்சாதனத்தையும் 2. புதுப்பிறப்பு
3. ஆராதனை 4. பாஸ்குத் திருநாள்
5. மறையுரையை 6. கிறிஸ்து
7. அருளின்றி 8. மரியாள்
9. விண்ணகச் செல்வங்களை 10. 50-ம் சங்கீதம்

## பகுதி II

1. அ. விசுவாசம், நம்பிக்கை, பரமஅன்பு

ஆ. — அடிக்கடி செபம் செய்தல்
— திருப்பலி, திருவருட்சாதனங்களில் பங்குகொள்ளல்
— திருச்சபையின் அறிவுரைகளுக்குச் செவிமடுத்தல்
— இறைவனின் மேல் முழு நம்பிக்கை வைத்தல்
— வேத கற்பனைகளின்படி வாழ்தல்
— மறைக்கல்வி வழியாக விசுவாச உண்மைகளை ஆழமாக்கல்
— இறைவனையும், பிறரையும் அன்பு செய்தல்
— பகிர்ந்து வாழ்தல், மன்னித்தல், பிறருக்கு உதவி செய்தல் என்பவற்றால் நாம் உடல், உள, ஆன்மீக வளர்ச்சி பெற்று முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவர்களாகலாம்.

2. அ. — திருமுழுக்குப் பெற்றபின் வனாந்தரத்தில் 40 நாட்கள் செபித்தார் (லூக்4:2)
— அப்போஸ்தலரை அழைப்பதற்கு முன் செபித்தார் (லூக் 6:12)

ஆ. விசுவாசத்தோடு கேட்பவை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு செபித்தல்
— இறைவனின் சித்தம் நிறைவேறுவதற்குக் காத்திருத்தல்
— தான் பாவி என ஏற்று தாழ்மை உள்ளத்தோடு செபித்தல்

இ. அன்பான இறைவா, எமது நாட்டை ஆள்பவர்களை ஆசீர்வதியும். அவர்கள் உண்மை, நீதி, அன்பு ஆகிய பண்புகளில் மக்களை நடத்த உதவி செய்யும். உமது திருவுளப்படி அவர்கள் ஆளவும், மக்களை நல்வழிப்படுத்தவும் உதவி புரியும். (இவ்வாறான செபங்களை எழுதலாம்)

3. அ. — ''மனந்திரும்புங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கிவிட்டது (மத். 4:17)
— காலம் நிறைவேறிற்று, கடவுளரசு நெருங்கிவிட்டது. மனந்திரும்பி இந் நற்செய்தியை நம்புங்கள்'' (மாற்கு 1:15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. பாவங்களை மன்னிக்கக் கடவுளுக்கு மட்டும் உரிமையுண்டு. இயேசு கடவுளின் மகன் பாவங்களை மன்னிக்கத் தமக்கு அதிகாரமுண்டென்று தம் வாழ்வி லேயே எடுத்துக் காட்டியுள்ளார். ''மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மனு மகனுக்கு அதிகாரம் உண்டு'' எனத் திமிர்வாதக்காரனைக் குணமாக்கியபோது (லூக் 5 : 24) கூறியுள்ளார். தமக்குள்ள இந்த வல்லமையைத் தொடர்ந்து ஆற்றத் திருச்சபை அதிகாரிகளுக்கு அதிகாரம் அளித்துள்ளார். ''எவர்களு டைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவர்களுக்கு அவை மன்னிக்கப்பெறும். எவருடைய பாவங்களை மன்னியாது விடுவீர்களோ அவை மன்னிப்பின்றி விடப்படும்'' (அரு 20: 20 –23) எனவே இயேசுவின் கட்டளைப்படி எமது பாவங்களைக் குருவுக்கு அறிக்கையிடுவது அவசியம். பாவமன்னிப்பு நீதி செலுத்தும் முறையில் அளிக்கப்பட வேண்டுமென்றே கிறிஸ்து இவ்வாறு பாவ அறிக்கை செய்யும்படி கூறியுள்ளார். ஆகவே பாவமன்னிப்படையப் பாவசங் கீர்த்தனம் அவசியமானதாகும்.

4. அ. ''சர்வேசுரனுடைய திருநாட்களைப் பரிசுத்தமாய் அனுசரிக்க மறவாதிருப்பா யாக''

ஆ. திருப்பலிக்கு நேரத்துடன் சென்று அனைவருடனும் ஒன்றுசேர்ந்து செபங்களி லும், பாடல்களிலும் பங்குகொண்டு இறைவார்த்தை மறையுரையைக் கவன மாகக் கேட்டுச், சிந்தித்து எமது வாழ்வை இறைவனுக்குக் காணிக்கையாக்கி, திருவிருந்து உட்கொண்டு கிறிஸ்துவோடு ஒன்றித்து திருப்பலியில் பங்கு கொள்ளலாம்.

இ. இல்லை. ஏனெனில் ஒரு வாரத்தில் கிறிஸ்தவர்களின் முக்கியமான நிகழ்ச்சி ஞாயிறு பூசை. பங்கிலுள்ள அத்தனை மக்களும் பொதுவாகவும், தனியாகவும் கிறிஸ்துவின் பாஸ்காவை நினைவுகூர்ந்து, கடவுளுக்கு உரிய மகிமையைக் கிறிஸ்து வழியாகச் செலுத்த வேண்டுமெனத் திருச்சபை கூறுகின்றது. கிறிஸ்தவர்கள் சமூகமாக ஒன்றிணைந்து பலியில் பங்குகொள்வதால் கடவுள் மகிமைப்படுத்தப் படுகின்றார். வானொலி, தொலைக்காட்சிகளால் நாம் பொது ஆராதனையைச் சமூகமாகச் செலுத்தத் தவறுகின்றோம். திருப்பலியில் முழுமையாகப் பங்கு பெறுவதற்கு அறிந்து, உணர்ந்து, செயலாற்றிப் பங்கெடுப்பது அவசியம்.

5. அ. பாஸ்கு திருவிழிப்புத் தினத்தில்
ஞானஒடுக்க முடிவுநாளில்
புதுநன்மை, உறுதிப்பூசுதல் தினத்தில்
திருமுழுக்குப் பெற்ற நாளில்

ஆ. – புதிய சமுதாயத்தின் கிறிஸ்தவர்களைக் கண்டுபிடித்து, அவர்களோடு உற வாடி உறவை வளர்த்தல்

– அவர்களைப் பங்குத் தந்தைக்கு அறிமுகப்படுத்தி இறைமக்கள் சமுதாயத்தில் இணைத்துக் கொள்ளல்.

– திருவழிபாடு, ஆராதனை, மறைக்கல்வி வகுப்பு, திருவருட்சாதன வழி பாட்டு முறைகளில் பங்கெடுத்துச் செயலாற்ற எமது அறிவுரைகளாலும், உதவியாலும் துணைபுரிதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் VII விடைகள்

1. மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக:

| | | | |
|---|---|---|---|
| 1 – 3 | 6 – 2 | 11 – 3 | 16 – 4 |
| 2 – 2 | 7 – 1 | 12 – 1 | 17 – 2 |
| 3 – 1 | 8 – 3 | 13 – 4 | 18 – 2 |
| 4 – 1 | 9 – 1 | 14 – 2 | 19 – 1 |
| 5 – 2 | 10 – 2 | 15 – 3 | 20 – 4 |

2. சுருக்கமான விடை தருக.

1. பகிர்ந்து வாழ்தல், பகைவர்க்கு அன்பு செய்தல், நீதியோடு நடத்தல், தீர்ப்பிடாதிருத்தல், தீமையை எதிர்த்துப் போராடல். (இவற்றில் இரண்டு)

2. திருச்சபையின் மேய்ப்பர்களாக இருந்து பயணம் செய்யும் திருச்சபையை தமது ஞானத்தாலும், முன்மாதிரிகையாலும் வழிகாட்டிச் செல்கின்றனர். தங்கள் மந்தையில் கிறிஸ்துவுக்குப் பதிலாகத் தலைமை வகித்து இறைபணி நிறைவேற்றுவதில் செயலாற்றி மறைக்கோட்பாடுகளைப் போதித்து, விசுவாசிகளின் நடுவில் பிரசன்னமாயிருக்கின்றார்கள்.

3. மனிதனது உடல், உள, அறிவாகிய மனித முன்னேற்றத்திற்குப் பணிபுரிவது, சமூகசேவை. ஆனால் இம்மைக்கும், மறுமைக்கும் மனிதன் நலன்பெற முழுமனித மீட்புக்காக உழைத்து இறையரசுக்கு வழிகாட்டுவதே அப்போஸ்தலிக்க சேவையாகும்.

4. 6-ம் சின்னப்ப பாப்பரசர்.

5. இயற்கைச்சட்டம், பத்துக்கற்பனைகள், கிறிஸ்துநாதருடைய முன்மாதிரிகை, திருச்சபையின் போதனைகள், கட்டளைகள், செபம், பெரியோர்களின் அறிவுரைகள்.

6. வீண்புகழைத் தேடாது இறையரசை முதலில் தேடுதல், மறைநூலின் உட்பொருளைச் சரியான முறையில் விளங்கிக் கொள்ளப் பரிசுத்தஆவியின்துணை அவசியம். இறைவனின் திட்டப்படி படைப்பைப் பயன்படுத்திக் கடவுளின் அரசைக் கட்டியெழுப்புதல். தன்னிலேதானே உறுதியான ஒழுங்கை உருவாக்கி நல்லதைத் தெரிந்து கொள்ளுதல்.

7. பலத்த காற்று : பரிசுத்தஆவியின் ஆற்றல்
நெருப்பு : தூய்மை பெறல்
நாவுகள் : இறைவார்த்தையை எடுத்துரைத்தல்

8. மறை ஆயரே உறுதிப்பூசுதல் எனும் திருவருட்சாதனத்தை நிறைவேற்றுகின்றார். பரிசுத்த ஆவியின் முத்திரையைப் பெற்றுக்கொள். பரமதந்தையின் உன்னதகொடை அவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கொடைகள் : ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பக்தி, தெய்வபயம்.
கனிகள் : அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம்.

10. இயேசுவின் விண்ணேற்புக்கு அடுத்துவரும் ஞாயிறு பரிசுத்தஆவியின் திருவிழா கொண்டாடப்படுகின்றது.

3. கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக:

1. பிறப்பு
2. குருக்கள்
3. கொடிய பாவமாகும்
4. திருச்சபைத் தலைவர்களிலும்
5. நற்செய்திப் போதக
6. பரிசுத்த ஆவியின்
7. உன்னத அடையாளமாக
8. புனித. சின்னப்பர்
9. பரிசுத்தஆவியை
10. நிறைவாக்குகின்றது

## பகுதி II

1. அ. பரிசுத்த ஆவியின் வருகையின்பின் இராயப்பரின் முதல் மறையுரையைக் கேட்டு மனந்திரும்பித் திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடன் இணைந்து திருச்சபையின் புதிய சமுதாயமாக உருவானது.

ஆ. – அப்போஸ்தலர்களும், சீடர்களும் பரிசுத்தஆவியினுல் புத்தித்தெளிவு அடைந்து மெய்யறிவைப் பெற்றனர். அவர்களிடமிருந்த கோழைத்தனம் நீங்கியது.
– இயேசு கற்பித்த உண்மைகளை அவர்கள் நினைவுக்குக் கொண்டு வந்தார்.
– அவர்கள் துன்பத்தில் ஆறுதலும், மனத்துணிவும் பெற்றனர்.
– விசுவாசத்திற்காகத் தங்கள் உயிரையே அர்ப்பணிக்கும் வலிமை பெற்றனர்

இ. நமது விசுவாசத்தை மனஉறுதியுடன் வெளிப்படுத்தி, அதற்காகத் தைரித்தோடு முன்வர உதவுமாறு பரிசுத்தஆவி நம்மில் செயலாற்றுகின்ருர். பசாசு, துர்நாட்டமுள்ள நமது உடல், ஆபத்துக்கள் நிறைந்த உலகம் எனும் பகைவர்களோடு போராட வலிமையை அளிக்கின்ருர். உலகைப் புனிதப்படுத்துவதற்கும், நமது குடும்பத்தில், நமது நிலையின் அலுவல்களில், பொதுவாழ்வில் அப்போஸ்தலிக்க சேவையாற்றுவதற்கும் நம்மைத் தகுதியாக்குகின்ருர்.

2. அ. கடவுள் அவற்றை நம்மிடம் ஒப்படைத்திருப்பதாலும், அதுபற்றி நாம் கணக்குக் கொடுக்க வேண்டியிருப்பதாலும்; அது ஒருநாள் மகிமையில் உயிர்த்தெழும் என்றபடியாலும், நாம் உயிரையும், உடல் நலத்தையும்பற்றி அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆ. துணைபுரிகின்றன.
– உல்லாசப் பொழுதுபோக்குகள் ஆளுமையில் வளர்ந்துவரும் இளைஞரது மனதிலும்; உடலிலும் புதிய ஆனந்தத்தைப் பெருக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— இறைவனின் படைப்பின் அழகைக் கண்டு ரசிக்கத் தோட்டங்கள், மலைகள் அருவிகள், சுரங்கங்கள் இன்னும் பல இயற்கைக் காட்சிகள் துணைபுரிகின்றன.

— தொழிற்சாலைகள், உற்பத்தி செய்யும் இடங்களைப் பார்ப்பதால் அறிவும், அனுபவமும் வளர வாய்ப்பு உண்டாகின்றது.

— தோழமை அறிவு ஆற்றலைப் பெருக்க உதவுகிறது.

— எல்லாவற்றிலும் இறைவனின் மேலான வல்லமையையும், அறிவாற்றலையும், திட்டத்தையும் கண்டுணர்ந்து ஆளுமையில் வளர்ச்சியடைய உல்லாசப் பொழுதுபோக்குகள் இளைஞருக்கு உதவி புரிகின்றன.

இ. நமது உயிர் கடவுளுக்குச் சொந்தமானது. அவரே அதைப் படைத்தார். அதை அவரே விரும்பியபோது எடுப்பார். நாம் தற்கொலை செய்வது இறைவனின் உரிமையைப் பறிப்பது, அவமதிப்பது போலாகும். அன்றியும் துன்ப துயரங்களைக் நாம்கண்டு மனமுடைந்து போகாது இறைவனில் கொண்டுள்ள விசுவாசத்தால் அவைகளை நன்முறையில் எதிர்கொள்ள வேண்டும். இவ்வுலக துன்பதுயரங்களை நாம் இறைவனுக்காக நன்மனதுடன் ஏற்றுக்கொள்ளும் போது அவை முடிவில்லா மகிமையைப் பெற்றுத் தரும். துன்பங்கள், தோல்விகள் வாழ்வின் வெற்றிக்கு அடையாளம். உலகத்திற்காக நாம் வாழாது இறைவனுக்காக, இறையரசுக்காக வாழவேண்டும்.

3. அ. பரிசுத்த ஆவியுடன் இணைந்து கிறிஸ்தவ கண்ணோட்டத்துடன் உலகை விருத்தி செய்து வளங்களைப் பெருக்கி, மனிதவாழ்வுக்கும், மனித முன்னேற்றத்திற்கும் வழிகாட்டி, சமுதாயத்தில் எமது சான்று வாழ்வால் ஆன்மாக்களைப் புனிதப் படுத்துதல்.

ஆ. சமுதாய தேவைகளில் கிறிஸ்தவன் அக்கறை கொண்டு முன்னின்று உழைத்தல். ஆற்றல், சக்தி, திறமைகள் அனைத்தையும் சமுதாய தேவைகளை நிவர்த்தி செய்யப் பயன்படுத்தல். மக்கள் உணவு, உடை, உறைவிடம், சலுகைகள், உரிமைகளைப் பெற முன்வரல், அறிவியல் தொழில், சமூகப்பண்பாடு இவற்றில் எல்லோரும் முன்னேற வழிவகுத்தல். புத்துயிர் பெற்ற ஓர் ஆன்மீக சமுதாயத்தை உருவாக்குதல் என்பனவே கிறிஸ்தவனின் கடமையாகும்.

4. இன்றைய சமுதாயத்தினர் நல்வாழ்வு அடைவதற்குப் பொருள், பதவி, பணம், அறிவாற்றல் இவற்றை நிறைவாகப் பெற்று, மனிதநலக் கோட்பாடுகளை விருத்தி செய்வதே கதி என்று வாழ்கின்றனர். ''கடவுளின் அரசையே முதலில் தேடுங்கள்'' என்ற கிறிஸ்துவின் திருமொழி சவாலாக அமைகின்றது. கடவுளின் விருப்பத்தைச் செய்வதே எமது இவ்வுலக வாழ்வின் நோக்கம். கடவுளின் அரசு என்பது இறைவனது விருப்பத்தைச் செய்வதே. நாம் இவ்வுலகில் இன்பமாக வாழவேண்டுமென அவர் திட்டமிட்டுள்ளார். உண்மை, அன்பு, நீதி, இவற்றின்படி கற்பனைகளை அனுசரித்து வாழ்வதே கடவுளின் அரசு. எமது நல்வாழ்வை நோக்காது எல்லோரது வளமான வாழ்வையும் நோக்கமாகக் கொள்ளல் வேண்டும். ''மண்ணுலகில் செல்வம் சேர்த்துவைக்க வேண்டாம். இங்கே பூச்சியும், துருவும் அழித்துவிடும். திருடரும் கன்னமிட்டுத் திருடுவர். ஆனால் விண்ணுலகில் செல்வம் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியும், துருவும் அழிப்பதில்லை. திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை. உங்கள் செல்வம் எங்குள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்'' (மத். 6: 19 - 21).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பாடல் : பரிசுத்த ஆவியைப் பற்றிய பாடல்.

ஆரம்பச் செபம் : நம்வாழ்வுக்கு உயிர்தரும் ஊற்று தூயஆவி. நம் புத்திக்கு ஒளி தந்து ஊக்குவிப்பவர் அவர். குளிர் பொங்கும் இதயத்தில் அனல் பொங்கச் செய்பவர் அவர். இருள் மூண்ட எண்ணத்தில் அறிவொளியைப் பாய்ச்சுபவர் அவர். துன்பத்தில் துவளும் எளியோர்க்கு மேலான ஆறுதல் அவர். அனைத்தை நெஞ்சங்களில் அன்பனலைப் பாய்ச்சுபவர் அவர். இறுகிய இதயங்களை இறையருளால் பற்றி எரியச் செய்பவரும் அவரே.

ஆதியிலே வார்த்தையானவர் வழியாய்ப் பேசியதும், யோர்தான் நதியிலே புறு வடிவில் தோன்றிவரும், எண்ணற்ற புதுமைகளை இயேசு வழியாய்ச் செய்தவரும், கோழைகளாய் ஒழிந்து நின்ற சீடர்களை வீரர்களாய் மாற்றியவரும் அந்த ஆவியே.

இத்தகைய தூயஆவியானவர்பற்றி நம் ஆண்டவர் எத்தனையோ முறை தம் அப்போஸ்தலர்கட்குக் கூறியுள்ளார். தூயஆவியைத் துணையாக அனுப்புவேன் என்று உறுதியளித்தார். அதன்படியே ஆண்டவர் தம் விண்ணேற்றத்திற்குப் பின் தூயஆவியை அனுப்புகின்றார். திருச்சபையின் வழியாக இன்று செயலாற்றி வருகின்றார். இந்த நிகழ்ச்சியை அப்போஸ்தலர் பணியில் இருந்து வாசிக்கக் கேட்போம்.

வாசகம் : அப்போஸ்தலர்பணி 2 : 1 - 12

அஞ்சி, நடுங்கி அறையில் பதுங்கிக் கிடந்த அப்போஸ்தலர்கள் புயலாய் மாறிப் போதிக்கத் தொடங்கினர். தூய ஆவியின் வருகைக்குப் பின் இத்தகைய இறைவனின் ஆவி நம்மீதும் எழுந்தருளி வந்து இருண்ட நம் வாழ்விற்கு ஒளியையும், குளிர்ந்த நம் நெஞ்சத்தில் அன்பனலையும் மூட்டுமாறு நம் தந்தையாம் இறைவனிடம் தாழ்ந்த உள்ளத்துடனும், ஒன்றுபட்ட நெஞ்சத்தோடும் வரம் கேட்போம்.
மன்றாட்டு:

1. இறைவனின் ஆவியே வலிமையின்றித் திறமை குன்றி வாழ்வும், சாவும் ஒன்றென வாழும் எங்களுக்கு உம் அன்பைத் தாரும். கல்போல் இறுகி நிற்கும் எங்கள் இதயங்களை இறையன்பாலும், பிறரன்பாலும் இளக்கியருள உமது ஆவியை எங்கள்மேல் பொழிந்தருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

2. அன்பான இறைவா, எம் தகுதியின்மையைப் பாராமல் உமது ஞானக் கொடைகள் அனைத்தும் தந்து மாறிவரும் உலகிலே உப்பாகவும், ஒளியாகவும் திகழ உம் அருள் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இரக்கம் நிறைந்த தந்தையே, எம் வாழ்வு பொருளற்று, வரண்ட பாலையாய் தோன்றும் இவ்வேளையில் எம்மைத் தேற்றி எம் வாழ்வை வளப்படுத்தவும், நாங்கள் சரியானவற்றை இறைஆவியின் ஏவுதலால் உணர்ந்து எம் வாழ்வில் மகிழ்வும், ஆறுதலும், நிறைவாய் விளங்க வரமருள வேண்டுமென்று உம் திருமகன் கிறிஸ்து வழியாய் வேண்டிநிற்கின்றேன். ஆமென்.

**இறுதிச் செபம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் VIII விடைகள்

1. மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1 – 1 | 6 – 2 | 11 – 4 | 16 – 4 |
| 2 – 2 | 7 – 3 | 12 – 2 | 17 – 2 |
| 3 – 3 | 8 – 1 | 13 – 1 | 18 – 2 |
| 4 – 2 | 9 – 4 | 14 – 2 | 19 – 3 |
| 5 – 4 | 10 – 1 | 15 – 3 | 20 – 1 |

2. சுருக்கமான விடை தருக.

1. நோயாளர் தம் துன்ப வருத்தங்களை இறையரசுக்காக ஒப்புக்கொடுப்பதே நோயாளரின் அப்போஸ்தலத்துவமாகும்.
2. மணத்துறவு, ஏழ்மை, கீழ்ப்படிவு
3. செபமாலைத்தாசர் சபை, பெரிய கார்மேல் சபை, திருக்குடும்பத் தியான சபை.
4. இறைவனைத் தந்தை என்று அழைப்பதில் நம்பிக்கை கொண்டவளாகவும், கபடற்ற குழந்தை உள்ளத்தோடும், சிறிய காரியங்களையும் பிரமாணிக்கமாய் செய்யும் பண்புள்ளவளாகவும் வாழ்ந்து இறைவனை அன்பு செய்தாள்.
5. கிறிஸ்து, இதோ இறைவா வந்துவிட்டேன். உமது திருவுள்ளத்தை நிறைவேற்ற என்று இறைவனின் சித்தத்திற்குப் பணிந்து நடந்தார்.
6. பாப்பரசரின் அங்கீகாரத்தின் கீழ் விசுவாசத்தைப் பரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சபையே விசுவாசப் பரப்புதல் சபையாகும்.
7. தன்னலப் போக்கும், குறுகிய மனப்பான்மையும், ஒருவரை ஒருவர் மதித்து ஏற்றுக்கொள்ளாமை என்பன.
8. விசுவாசத்தில் வளர்தல், போதியளவு கல்வி அறிவு ஊட்டல், அவர்களில் கரிசனை கொண்டு மதித்து அவர்களைப் புரிந்து ஏற்றுக்கொள்ளல், அவர்களுடைய நண்பர்கள் தொடர்புகள், உறவுகள் மட்டில் விழிப்பாயிருத்தல், ஆன்மீகக் கடமைகளை நிறைவேற்றுவதில் அக்கறை கொள்ளல், இவையே இன்றைய இளைஞர் மட்டில் பெற்றோர்க்குரிய கடமைகளாகும்.
9. அறியாமை, வறுமை, பிணி, துன்பம் எனும் தீமைகளைப் போக்க அரும்பாடுபடுகின்றனர். சிறுவர், முதியோர் கல்வி ஊட்டுவதில் அக்கறை காட்டுகின்றனர்.
   - தொழுநோயாளருடன் வாழ்ந்து,பிணியால் வருந்துபவர்களுக்கு ஊக்கம்
   - தொழுநோயாளருடன் வாழ்ந்து, பிணியால் வருந்துபவர்களுக்கு ஊக்கம் ஊட்டும் பணியைச் செய்து வருகின்றனர்.
   - வீடற்றவர்களைத் தாபரித்து வருகின்றனர்.
   - மரணத்தருவாயிலுள்ளவர்களைப் பராமரித்து அடக்கம் செய்யும் பணியிலும் ஈடுபடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சரீரபலவீனத்தில் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்தல், அவர்களை மதித்து அன்பு செய்தல், நோயுற்றிருக்கும்போது அக்கறையுடன் பராமரித்தல், ஆன்மீக நலன் பெற உதவுதல்.

3. கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.

1. உழைப்பு
2. திருவருட்சாதனத்தை
3. சகோதரரும்
4. புனித. வின்சென்ற்
5. விண்ணரசில்
6. இளைஞருக்கு
7. மறைசாட்சிகள்
8. கீழ்ப்படிந்திருங்கள்
9. குடும்பம்
10. புகலிடம்

## பகுதி II

1. அ. – எல்லாவற்றையும் விட்டுவிட்டு கிறிஸ்துவைப் பின்செல்லல்,
– தனக்குச் சொந்தமானவர்களைத் தன் பெற்றோர், உறவினர்களையும், உடைமைகளையும் விண்ணரசுக்காகத் துறந்துவிட்டுக் கிறிஸ்துவைப் பின்பற்றிவாழ்தல்.

ஆ. கிறிஸ்தவ விசுவாசியாக அழைக்கப்பட்ட ஒருவர் திருமுழுக்கினால் பாவத்திற்கென மரித்து இறைவனுக்கெனப் புனிதப்படுத்தப்படுகின்றான். இந்த அருள் நிறைந்த, தெய்வீக உயிருள்ள புதிய வாழ்வை நிறைவாக வாழ்வதற்கு இறைமக்கள் குழுவிலிருந்து இறைவன் துறவறநிலைக்குச் சிலரை அழைக்கின்றார். இவர்கள் நற்செய்தி அறிவுரைகளைத் திருச்சபையில் வெளிப்படையாக ஏற்று அன்பின் ஆர்வத்திலிருந்து கிறிஸ்துவுக்குத் தங்களைக் கையளித்து, விண்ணரசின் முன்னடையாளமான திருச்சபையிலே தங்களை அழைத்த துறவற சபையிலே திருமுழுக்கு அர்ப்பணிப்பை நிறைவாக வாழுகின்றார்கள். இறையரசின் மீட்புப்பணிக்காக, மக்களுக்காகத் தங்களைக் கையளித்து வாழ்கின்றார்கள். எனவே திருமுழுக்கு அழைப்பை நிறைவாக வாழ்தலே துறவற அழைப்பாகும்.

இ. – நான் துறவறநிலைக்கு ஏற்றவனாக வர அடிக்கடி செபிப்பேன்.
– பெற்றோர், பெரியோர், குருக்களுக்கு எனது விருப்பத்தை எடுத்துரைத்து அறிவுரை பெறுவேன்.
– நன்றாகப் படித்து என் ஆளுமையை விருத்தி செய்வேன்
– வேதாகமம், ஞானநூல்கள் இவற்றை அதிகம் வாசித்து இறைவனின் ஒளியில் வாழ்வேன்.

2. அ. ''பிதாவையும், மாதாவையும் சங்கித்திருப்பாயாக''

ஆ. – ஆசிரியரின் நன்மதிகளுக்கு அமைந்து பாடங்களைக் கவனமாகப் படிப்பேன்
– அவர் மேல் நல்லெண்ணம் கொள்வேன். சகமாணவர்களோடு சேர்ந்து தவறாகக் கதைக்காது இருப்பேன்.
– வகுப்பில் அமைதியாகவும், கண்ணியமாகவும் நடந்து கொள்வேன் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசிரியரோடு இணைந்து ஒத்துழைப்பேன்
- அவருக்காகச் செபிப்பேன்
- அவரைப்பற்றி நன்மையாகப் பேசுவேன்

3. அ. ஒரு கிறிஸ்தவன் தான் பெற்றுக்கொண்ட புதுவாழ்வின் வழியாகத் தான் வாழும் உலகைத் தழுவியமைக்கப் பொறுப்பும், கடமையும் உள்ளவனாக இருக்கின்றான். கடவுள் அளித்த கொடையாகிய உடல், உள ஆற்றல்கள் ஆன்மீக ஆர்வம், திறமைகள், முயற்சிகள் என்பனவற்றைப் பயன்படுத்தி, மனித சமுதாயத்தை விருத்தி செய்யவும், கடவுளின் அரசைப் பரப்பவும் உழைக்க வேண்டும். காய்க்காத அத்திமரத்தின் உவமை, பொற்காசுகளின் உவமையால் பொறுப்புணர்வோடு வாழக் கிறிஸ்து படிப்பிக்கின்றார். இதைச் சரியாகப் புரிந்துகொள்ளும் எவனும் சட்டங்கள், விதிகளால் ஏற்படும் கட்டுப் பாட்டிலும் மேலாகத் தனது மனச்சான்று, சுத்த கருத்தின்படி வாழத் தன்னையே பயிற்றிக் கொள்ள வேண்டும்.

ஆ. – கிறிஸ்துவின் அழைப்பை ஏற்று அப்போஸ்தலர்கள் நற்செய்தியை எங்கும் போதித்தார்கள்.
- திருப்பலி, திருவருட்சாதனங்களை நிறைவேற்றினார்கள்.
- கிறிஸ்துவைத் தமது சான்று வாழ்வால் பிரதிபலித்தார்கள்.
- திருச்சபையின் சமூகங்களைத் தாம் சென்ற இடமெல்லாம் நிறுவித் தலைவர் களை ஏற்படுத்தினார்கள்.
- பரிசுத்தஆவியின் ஆற்றலால் தம் பொறுப்புக்களை ஏற்று நிறைவாகச் செயல்பட்டார்கள்.
- எதிர்ப்புக்களைப் பொருட்படுத்தாது விசுவாசத்திற்காக உயிரையும் அர்ப் பணித்தார்கள்.

இ. – எல்லோரையும் அன்பு செய்தல், உதவி செய்தல், ஒற்றுமையை உருவாக்கல்
- கடமைகளைப் பொறுப்புணர்வுடன் செய்தல்
- பெற்றோரை மதித்து அவர்களுக்குக் கீழ்ப்படிதல்
- குடும்பத்தின் கிறிஸ்தவ கடமைகளுக்கு ஒத்துழைப்பாயிருத்தல்
- குடும்பத்தின் நற்பெயரைப் பாதுகாத்தல்
- குடும்ப நல்வாழ்வுக்காக உழைத்தல்
- பெற்றோர் சகோதரர் மட்டிலுள்ள கடமைகளை நிறைவேற்றல்

4. அ. – மரணம் வரை ஒருவரையொருவர் அன்பு செய்து, பிரமாணிக்கமாய் வாழ் தல்
- ஒருவர் ஒருவருக்கு மதிப்பளித்துத் தமக்குரிய கடமைகளை நிறைவேற்றல்
- பிள்ளைகளைக் கடவுளுக்காக வளர்த்து, தம் வாழ்வாலும், வார்த்தையாலும் நன்முன்மாதிரிகையாக விளங்குதல்.
- பிள்ளைகள் இம்மைக்கும், மறுமைக்கும் வேண்டிய நலன்பெற உழைத்தல் என்பன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. – போதிய காரணங்களோடு திருச்சபையின் விசேட அனுமதியைப் பெற வேண்டும்.

– கத்தோலிக்கராய் இருப்பவர்கள் விசுவாசத்தைக் காக்கவும் தங்கள் பிள்ளைகளைத் திருச்சபையின் விதிகளுக்கேற்ப வளர்க்கவும் வாக்குறுதி கொடுக்க வேண்டும். கத்தோலிக்கரல்லாதோர் தம் குடும்பத்தவர்கள் சமயக் கடமைகளை நிறைவேற்ற எதுவிதத்திலும் தடையாய் இருக்கமாட்டார்கள் என்ற வாக்குறுதி கொடுக்கவேண்டும்.

இ. குடும்பக் கட்டுப்பாடு, கருச்சிதைவு, பொருளாதாரக் குறைவு, திருமண தம்பதியரின் பொறுப்பற்ற தன்மை, பிரமாணிக்கமின்மை, விவாகரத்து, குடும்பப் பிரிவினைகள், கலப்பு மணம், பிள்ளைகளின் முற்போக்கான வாழ்க்கை பிறரின் தலையீடுகள்.

5. அ. படைப்புக்கெல்லாம் மனிதன் தலைவன். படைப்பைப் பாதுகாத்து, விருத்தி செய்து பயன்படுத்தி வாழ்வது மனிதனது அழைப்பு. படைப்பு மனிதனது சுதந்திரத்திற்குக் கட்டுப்பட்டுள்ளது. அதை நல்வழியில் பயன்படுத்தி, எல்லா வளங்களையும் பெருக்கி அவற்றைப் பகிர்ந்து அனுபவித்து மகிழ்ந்து வாழ இறைவன் விடுக்கும் அழைப்பு இது.

ஆ. இவ்வுலகில் எமது உழைப்பினால் கடவுளுக்கு மகிமை கொடுப்பதுதான் நமது முக்கிய அலுவலும் அழைப்புமாகும். எமக்கும் மற்றவர்களுக்கும் வேண்டிய உணவை அளித்து வாழ்விக்கின்றது. எதிர்காலத்தில் நாம் வளமுடன் வாழ வழி வகுக்கின்றது. எமது அறிவு, உடல், ஆற்றல்களைப் பயிற்றுவித்து வளர்க்கின்றது. அறிவின் தெளிவையும், உடலில் சுகத்தையும் பாதுகாக்கின்றது. சோர்வும், சலிப்பும் நமக்கு ஏற்படா வண்ணம் தடுக்கின்றது. பற்பல சோதனைகளினின்றும், பாவத்தினின்றும் நம்மைப் பாதுகாக்கின்றது. நமக்கு நித்திய பரிசை ஈட்டுவதும், இன்பத்தின் சுனையாகவிருப்பதும் உழைப்புத்தான். எனவே தான் உழைப்பு இளைஞருக்கு அழைப்பாகவும், அறைகூவலாகவும் அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாப்பத்திரம் IX விடைகள்

1.

| | | | |
|---|---|---|---|
| 1 – 3 | 6 – 4 | 11 – 2 | 16 – 2 |
| 2 – 2 | 7 – 2 | 12 – 2 | 17 – 3 |
| 3 – 1 | 8 – 1 | 13 – 3 | 18 – 4 |
| 4 – 4 | 9 – 3 | 14 – 4 | 19 – 1 |
| 5 – 3 | 10 – 4 | 15 – 1 | 20 – 2 |

2. சுருக்கமான விடை தருக.

1. பிறர் பாவம் செய்ய ஒருவன் காரணமாய் இருத்தல் அல்லது பிறரைப் பாவத்தில் விழச் செய்தல் இடறல் என்னும் பாவமாகும்.
2. குருத்துவம் என்னும் திருவருட்சாதனத்தின் வழியாகக் கிறிஸ்துநாதர் குருத்துவத்தின் அதிகாரத்தையும், குருத்துவத்திற்கு ஏற்ற வாழ்வு வாழவும் பணி செய்யவும் வேண்டிய அருள் அளிக்கின்றார்.
3. இறைபணியிலும், வார்த்தைப் பணியிலும் ஆயருடனும் அவர்தம் குருக்களுடனும் ஒன்றுபட்டு இறைமக்களுக்கு ஊழியம் செய்கின்றனர். ஆடம்பரமாய் திருமுழுக்கு அளிப்பதும், நற்கருணையை வைத்துப் பாதுகாப்பதும் பகிர்ந்தளிப்பதும், திருமணத்தில் சாட்சியாய் நின்று ஆசீர் அளிப்பதும், திருமறைநூலை வாசித்து மக்களுக்கு அறிவுரை அளிப்பதும், விசுவாசிகளின் வழிபாட்டில் தலைமை வகிப்பதும், அருட்கருவிகளை அளிப்பதும், இறுதிச் சடங்குகளையும், அடக்கச் சடங்குகளையும் நிறைவேற்றுவதுமே தியாக்கோன்மாரின் பணிகளாகும்.
4. சகோதரிகள்: திருக்குடும்பக் கன்னியர் சபை, அப்போஸ்தலிக்க கார்மேல் சபை, திருச்சிலுவைக் கன்னியர் சபை, நல்லாயன் சபை, பிரான்சிஸ்கன் சபை, அன்புக் கன்னியர் சபை
   சகோதரர்: டெலாசேல் சபை, பிரான்சிஸ்கன் சபை, புனித சூசையப்பர் சபை
5. திருத்தந்தை 13-ம் சிங்கராயர் – ரேரும் நோவாரும்
   திருத்தந்தை 11-ம் பத்திநாதர் – குவாத்ரா ஜெசிமோ அன்னோ
6. ''உங்கள் பேச்சு ஆம் என்றால் ஆம்; இல்லை என்றால் இல்லை என்றுஇருக்கட்டும்'' (மத். 5 : 37; யாக. 5 : 12)
   ''பொய்யை விலக்கி, ஒருவர் ஒருவரிடம் உண்மையையே பேசுங்கள்; ஏனெனில் நாம் ஒருவருக்கொருவர் உறுப்புகளாய் இருக்கிறோம்'' (எபே. 4:25)
   ''பொய்யர்களை ஆண்டவர் வெறுக்கிறார். உண்மையாய் நடக்கிறவர்களை அவர் விரும்புகிறார்'' (பழ. ஆக. 12 : 22)
7. ''உன் கண்ணிலே உள்ள விட்டத்தைக் கவனியாது உன் சகோதரன் கண்ணிலுள்ள துரும்பைப் பார்ப்பதேன். உன் சகோதரனை நோக்கி; உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுக்கவிடு என்று நீ எப்படிச் சொல்லலாம். இதோ உன் கண்ணிலே விட்டம் இருக்கிறதே; வெளிவேடக்காரனே, முதலில் உன் கண்ணிலிருந்து விட்டத்தை எடுத்து எறி; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுக்க நன்றாகக் கண் தெரியும்'' (மத். 7:3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மறையுடலின் தலையாகிய கிறிஸ்துநாதரிடமிருந்து பரிசுத்த ஆவி உறுப்புக் களில் உயிர் ஓட்டம் போன்று நிறைந்திருக்கின்றார். எல்லா உறுப்புக்களை யும் தலையோடும், ஒன்றோடு ஒன்றாயும் சேர்த்து இணைக்கின்றார். ஆகை யால் பரிசுத்த ஆவி திருச்சபையின் ஆன்மாபோல் விளங்குகின்றார்.

9. பெரிய குருவாகிய கிறிஸ்துநாதர் அப்பம் இரசத்தின் தோற்றத்தில் தம் மையே பலியாக்கிப் பிதாவுக்கு ஒப்புக்கொடுக்கின்றார். பரிசுத்த நற்கருணை வழியாக அதே சமயத்தில் நமக்கு உணவாகவும் வருகின்றார். இது நாம் கண்ணால் காணும் பலியாகவும், திருவிருந்தாகவும் இருக்கின்றது.

10. — சுயமொழியில் திருப்பலியும், திருவருட்சாதனங்களும், திருவழிபாடுக ளும் நிறைவேற்றப்படல்
— குருவும் இறைமக்களும் இணைந்து திருப்பலியை நிறைவேற்றல்.
— திருப்பலி திருவருட்சாதனங்களில், வழிபாடுகளில் மக்கள் செயலாற்றிப் பங்கெடுத்தல்.

3. கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.

1. அக்கறையுடன் 2. கடவுளைக்
3. கிறிஸ்துநாதர் 4. திருவுளத்திற்கு
5. ஏழைகளுக்கு 6. நற்புகழ்
7. புறணி 8. உறுதிப்பாட்டிற்கும்
9. திருச்சபையும் 10. துறவிகள்

## பகுதி II

1. அ. கிறிஸ்து இவ்வுலகில் ஆற்றிய செயல்கள் முழு மனித மீட்பையே மையமாகக் கொண்டுள்ளன.

— உண்மையான மீட்பின் வழியை மக்களுக்குக் காட்டினார்.
நானே வழியும் உண்மையும் உயிரும்; என் வழியாயன்றி எவனும் பரம தந்தையிடம் வருவதில்லை'' (அரு. 14 : 6)
— பிறரால் வெறுத்து ஒதுக்கப்பட்ட பாவிகளையும், ஆயக்காரரையும் அரவ ணைக்க அஞ்சவில்லை. அவர்கள்மீது மனமிரங்கினார். (மத். 19:13; 20:32-34
— நோயுற்றோர் துன்புற்றோரிடம் பரிவு காட்டினார் (மத். 9:11)
— மக்கள்மீது இரக்கம் கொண்டார் (அரு. 6; 1 - 15; 14: 13 - 14;15:32-33
— அன்பையே போதித்தார்; அன்புக்காகவே வாழ்ந்தார். அன்பினால் நமக்கா கத் தம் உயிரையே கையளித்தார்.
இவ்வாறு அவர் ஆற்றிய செயல்கள் அனைத்தும் மனித மீட்பையே மையமா கக் கொண்டுள்ளன.

ஆ. — செபத்தாலும், தூண்டுதலாலும், முன்மாதிரிகையினாலும் அவர்களுக்கு உதவி புரிதல்
— ஆன்மா, உடலைச்சார்ந்த இரக்கச் செயல்களைச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2\. அ. — தமது சொந்த உழைப்பு
— விலை கொடுத்து வாங்குதல்
— வாரிசு வழியான சொத்து
— நன்கொடை
— பண்டமாற்று — இவற்றால் நேர்மையான வழியில் பொருள் சம்பாதிக்கலாம்

ஆ. களவு, அநீதி, வன்செயல்கள், அபகரிப்பு, கொள்ளை இலாபம் பெறுதல், வியாபாரத்தில் திருட்டு, பொறுப்பின்றி வேலை செய்தல், அநியாயவட்டி என்பன.

இ. — எனது ஆற்றல் திறமைகளுக்கு ஏற்ற வேலையைத் தெரிவேன் (பொற்காசுகளின் உவமைக்கேற்ப ஆற்றல் திறமைகளை வளர்த்தல்)
— எனது தேவைகளையும், குடும்பத்தினரது தேவைகளையும் கவனிப்பதற்கு ஏற்றதாக இருத்தல்.
— நாட்டின் அபிவிருத்திக்கு உகந்ததாக இருத்தல்.
— ஆன்ம நன்மைகளைக் கவனிக்கக்கூடிய வேலையைத் தெரிதல்.
— எனது மீட்புக்கும் மற்றவர்களின் மீட்புக்கும் உழைப்பது என்ற கருத்தைக் கொள்ளல்.
காலத்தை வீணாக்காது பொறுப்புடன் உழைத்தல் இவைபோன்ற கருத்துக்களைக் கொண்டிருத்தல்.

3\. அ. திருமண வாழ்க்கையின் தூய்மைக்கும், மனித உயிரின் உற்பத்திக்கும், வளர்ச்சிக்கும் உதவக் கடவுள் நம் உடலில் அமைத்திருக்கும் சக்திகளைக் கடவுளின் நோக்கத்திற்கேற்ப பயன்படுத்திக் கொள்வதுதான் கற்புடைமையாகும்.

ஆ. — நாணமும் தன்னடக்கமும் உடையவர்களாய் இருத்தல்.
— கடவுளோடு ஒன்றித்து வாழ்தல். செபித்தல், திருவருட்சாதனங்களைப் பெற்றுக் கொள்ளல்.
— பாவச்சமயங்களை விலக்கி வாழ்தல்.

இ. — உடல் உணர்ச்சிகள், அவற்றின் தேவைகளில் அதிக நாட்டம் கொள்ளுதல்
— பாலியல் பற்றிய தப்பான கருத்துக்கள்
— இதுபற்றிய திருச்சபையின் படிப்பினைகளில் அலட்சியம் கொள்ளல்
— விரிவாக்கப்பட்ட ஆண், பெண் சமுதாய உறவுத் தொடர்புகள் இவை போன்றவை.

4\. அ. கடவுள் உண்மையுள்ளவர். நாம் உண்மையுள்ளவர்களாய் விளங்கும்படி விரும்புகிறார். உண்மையுள்ளவர்களாய் நடப்பவர்கள்மீது இறைவன் மிகவும் பிரியமுள்ளவராயிருக்கிறார். உண்மை பேசுபவர்களையே மக்களும் மதித்து ஏற்றுக்கொள்வார்கள். இதனால் நாம் உண்மையுள்ளவர்களாய் விளங்கவேண்டும்

ஆ. — இறைவனுக்கு மிகவும் பிரியமுள்ளவர்களாக்குகின்றது.
— இது நம்மைப் பெருந்தன்மை உள்ளவர்களாகவும், மதிப்புக்குரியவர்களாகவும் ஆக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுள் நம்பிக்கைக்கும் உறுதிப்பாட்டிற்கும் உறுதியான அடித்தளமாக விளங்குகிறது.

— பொய்மை மனிதனுடைய நடத்தையைக் கெடுத்து விடுகின்றது.
— மக்கள் நடுவே நம்பிக்கையையும், பொறுப்பையும் அழித்து விடுகின்றது.
— உலகில் முடிவில்லாத துன்பத்துக்குக் காரணமாயுள்ளது.

இ. — பார்த்தெழுதுவது நேர்மைக்கும் உண்மைக்கும் எதிரானது.
— இதனுல் எமது அறிவு, சுயமுயற்சி, தன்உருவாக்கம் என்பன குன்றுகிறது.
— நாம் இறைவனையும், பிறரையும் இதனுல் ஏமாற்றுகிறேம்.

5. அ. திருச்சபையின் உறுப்பினர் யாவரும் ஓர் உடலில் உள்ள உறுப்புகளைப்போன்று ஒருவரோடு ஒருவர் இணைக்கப்பட்டு இருக்கின்றனர். இந்த உடலின் தலை விண்ணகத்தில் இருக்கும் நம் ஆண்டவர் கிறிஸ்துநாதரே. இவர் உடல் முழுமையும் ஒன்ருக இணைத்து, இயங்கி வாழ வைக்கின்ருர். எனவே திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல் என்று அழைக்கப்படுகின்றது.

ஆ. — மறை உடலின் உறுப்புக்கள் இறைமக்கள் எல்லோரும் கிறிஸ்துநாதரைத் தங்கள் தலையாக அன்பு செய்தல்.
— கிறிஸ்தவ சகோதரர்களை அவருடைய உறுப்புகளாய் அன்பு செய்தல்.
— செபத்திலும், பலியிலும் தலையாகிய கிறிஸ்துவுடனும், உறுப்புகளுடனும் ஒன்றித்து இறுத்தல்.
— ஒவ்வோர் உறுப்பினரும் தனக்குரிய பணியை அறிந்து அதைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றல் என்பன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினப்பத்திரம் X விடைகள்

மிகச்சரியான விடையின் கீழ்க் கீறிடுக

| | | | |
|---|---|---|---|
| 1 – 3 | 6 – 4 | 11 – 4 | 16 – 2 |
| 2 – 4 | 7 – 2 | 12 – 2 | 17 – 4 |
| 3 – 1 | 8 – 3 | 13 – 4 | 18 – 3 |
| 4 – 2 | 9 – 3 | 14 – 3 | 19 – 2 |
| 5 – 3 | 10 – 1 | 15 – 1 | 20 – 3 |

சுருக்கமான விடை தருக.

1. – சிலுவைப்பலி கல்வாரிமலையில் ஒருமுறைமட்டும் நடந்த இரத்தம் சிந்திய காணிக்கைப்பலி
   – திருப்பலிப்பூசை இரத்தம் சிந்தாதபலி. நமது ஆண்டவர் திரும்பி வருமளவும் நடைபெற்றுவரும் புதிய ஏற்பாட்டின் நிலையான பலியாகத் திருப்பலி விளங்குகின்றது.
2. புனித. அருளப்பர் நற்செய்தி (6-ம் அதிகாரம்)
3. மன்னு உணவு, பெலிக்கான்பறவை, கோதுமைப்பயிர், திராட்சைக்கொடி, மீனும் அப்பக்கூடையும்
4. நற்கருணை வழியாகக் கிறிஸ்துவோடு நெருங்கிய முறையில் ஒன்றிக்கின்றோம். கிறிஸ்துவின் ஒரே உடலை உட்கொள்வதால் நாமும் ஒருவரோடொருவர் ஒன்றுபடுகின்றோம். இறைவனோடும் பிறரோடும் எம்மை ஒன்றிக்கச் செய்கின்றது. கிறிஸ்து தம்மைப் பிட்டு மற்றவர்களுக்கு அளிப்பதுபோல நாமும் மற்றவர்களுக்காக எங்களைப் பகிர்ந்துகொள்ளுவோம். இதுவே நற்கருணை வாழ்வாகும்.
5. 1. எழுந்தேற்றத்தின் பின் – நாம் அளிக்கும் விசுவாசத்தின் பதில்: ஆண்டவரே நேவரீர் வருமளவும் உமது மரணத்தை அறிக்கையிடுகின்றோம். உமது மீட்பையும் எடுத்துரைக்கின்றோம்.
   2. கிறிஸ்து கற்பித்த செபத்தின் பின் – குரு செபிப்பது: நாங்கள் நம்பியிருக்கும் பேரின்பவாழ்வையும் எம் மீட்பராகிய இயேசுக்கிறிஸ்துவின் வருகையையும் எதிர்பார்த்திருக்கின்றோம்.
6. கிறிஸ்து அரசர் பெருவிழா.
7. "ஆண்டவராகிய இயேசுவே வாரும்" (திருவெளிப்பாட்டு நூலின் கடைசி வார்த்தை திருவருகைக்காலம் எமக்கு இதை நினைவூட்டுகின்றது)
8. நல்விதையும் களைகளும், வலையின் உவமை, தாலந்து உவமை, பத்துக்கன்னியர் உவமை, அத்திமரத்தின் உவமை, மேற்பார்வையாளன் உவமை.
9. "செசாருடையதைச் செசாருக்கும், கடவுளுடையதைக் கடவுளுக்கும் செலுத்துங்கள்" (மத் 22 : 21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. "தலைமை ஏற்போர், ஆட்சிபுரிவோர், வலிமைமிக்கோர் அனைவரையும் அவர் தகர்த்து விட்டுக் கடவுளும் தந்தையுமானவரிடம் அரசை ஒப்படைப் பார்" (1 கொரி 15 : 24)

கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.

1. பிள்ளைகளின்
2. அருள்
3. பற்றுறுதி
4. விண்ணகத்தில்
5. நாழிகையும்
6. நாடுகளை
7. கிறிஸ்தவனின்
8. அடையாளமாக
9. மகிமையால்
10. விருந்திற்கு

## பகுதி II

1. அ. இறுதி இரவுணவின்போது இயேசு அப்பத்தை எடுத்து நன்றிகூறி பிட்டு அவர்களுக்கு அளித்து, 'இது உங்களுக்காக அளிக்கப்படும் என் உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்' என்றார். அவ்வாறே உணவு அருந்தியபின் கிண்ணத்தை எடுத்து 'இக்கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படும் என் இரத்தத்தினாலாகும் புதிய உடன்படிக்கை' என்று கூறி நற்கருணையை ஏற்படுத்தினார்.

ஆ. நற்கருணைப்பலி, நற்கருணை ஆராதனை, நற்கருணை ஆசீர்வாதம், நற்கருணை எழுந்தேற்ற ஆராதனை, நற்கருணை ஆடம்பரப் பவனி, நற்கருணை மகாநாடு இவற்றால் திருச்சபை நற்கருணை நாதரை மகிமைப்படுத்துகின்றது. (இற்றை வரைக்கும் 42 நற்கருணை மகாநாடுகள் அனைத்துலக திருச்சபையில் நடந்தேறி உள்ளது. இறுதியான மகாநாடு தேவதாய் காட்சிகொடுத்த லூர்துகெபியில் 1981 ஆடி மாதம் நடைபெற்றது)

இ. எமக்கு வாழ்வளிக்க உம்மையே ஈந்த இறைமகனே, எனது ஆற்றல் சக்தி அனைத்தையும் ஒன்றிணைத்து உம்மை ஆராதிக்கின்றேன். உமக்கு நன்றி நவில் கின்றேன். தெய்வீக பிரசன்னத்தில் நான் என்றும் வாழவும் உம்மைப்போல் என்னை முழுமையும் மற்றவர்களுக்கு அளித்து வாழவும் எமக்கு உதவிசெய்யும்.

2. அ. கிறிஸ்து தம் மரணத்தினால் விண்ணகப் பேரின்பவாழ்வை எமக்குப் பெற்றுத் தந்துள்ளார். அவர் சாவின் தன்மையை மாற்றிவிட்டார். எனவே நாம் கடவுளின் மக்களாக வாழ்ந்து கிறிஸ்துவில் அடையும் மரணம் விண்ணகப் பேரின்ப வீட்டிற்கு வாயிலாக உள்ளது. கிறிஸ்துவின் வழியாக மரணிப் போர் இறந்தாலும் என்றென்றும் வாழ்வார்கள். "ஆண்டவருக்குள் இறப்ப வர்கள் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் செய்த நன்மையே அவர்களோடு கூடவரும்". (திருவெளிப்பாடு 14 : 13)

ஆ. திருப்பலி ஒப்புக்கொடுத்தல், சிறப்பான செபவழிபாடுகள் செய்தல், செபங் கள், ஒறுத்தல் முயற்சிகள், தானதருமம் செய்தல், சிலுவைப்பாதை என்பன.

3. அ. "அந்நாட்களின் வேதனைக்குப்பின் உடனே கதிரவன் இருண்டுவிடுவான். நிலா தன் ஒளிகொடாது. விண்மீன்கள் வானத்தினின்று விழும். வானத்தின் படைகள் அசைக்கப்படும். அப்போது வானத்தில் மனுமகனின் அறிகுறி தோன்றும். மண்ணுலகின் குலத்தார் எல்லாரும் புலம்பி அழுவர். மனு மகன் மிகுந்த வல்லமையோடும், மாட்சிமையோடும் வானமேகங்களின் மீது வருவதைக் காண்பார்கள். எக்காளம் முழங்க அவர் தம் தூதரை அனுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார். அவர்கள் உலகில் ஒருமுனை முதல் மறுமுனைவரை நாற்றிசையிலுமி ருந்து அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத் திரட்டுவார்'' (மத் 24:29-31)

ஆ. நாம் எப்போதும் இறைவனோடு இணைந்து அருளில் நிலைத்து வாழவேண்டும். மரணம் எப்போது வருமென்று எமக்குத் தெரியாது. மரணமானது எந்த வயதிலேயோ, எந்தச் சூழ்நிலையிலேயோ எம்மைத் தழுவிக்கொள்ளும். நாம் எப்போதுமே ஆயத்தமாக இருக்க வேண்டும். விழிப்பாயிருங்கள் என்ற கிறிஸ்துவின் வார்த்தைகள் எம்மை எப்போதும் தயாராக இருக்க ஏவுகின்றது. ஆண்டவருக்குள் இறப்பவர்கள் பேறுபெற்றோர் எனவே எப்போதும் விழிப்பா யிருப்போம். நற்கனிகளாகிய நற்செயல்களால் இறைவனோடு ஒன்றித்துவாழ் வோம். நாம் பெற்ற விசுவாசத்திற்கேற்ப இறைவனின் சித்தத்தின்படி வாழும்போது நாம் மரணத்திற்குத் தயாராய் இருக்கின்றோம். மனிதனுக்கு வாழ்வு எப்படியோ சாவும் அப்படியே.

4. அ. — இறையரசைச் சார்ந்த பண்புகளை வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்தல்
- — காலத்தின் அறிகுறிகளைக் கருத்தில்கொண்டு சமுதாயத்திலே இயக்காற்றல் சக்தியுடன் வாழ்தல். மற்றவர்களை வாழத் தூண்டுதல்.
- — வாழ்வைப் பொறுப்புடன் ஏற்று பொதுநலனுக்காக உழைத்தல்
- — சமுதாயத்தில் நிலவும் ஊழல்களை நீக்க முயற்சித்தல்

ஆ. கிறிஸ்து இறுதிநாளில் இப்பொழுது காணப்படும் உலகைப் பாவத்தின் விளை வால் அதற்கு நேர்ந்த எல்லாவித தீமைகளினின்றும், ஒழுங்கற்ற நிலையினின் றும் விடுவிப்பார். அதை முடிவில்லா மகிமையால் நிரப்புவார். இவ்வாறு படைப்பு முழுவதுமே அதன் சொந்த இயல்புக்கேற்றவண்ணம் கிறிஸ்துநாதரு டைய உடலின் மகிமையில் தானும் பங்கு அடையும்.

இ. பரிசுத்த திருச்சபை, ஐக்கியநாடுகள் பொதுச்சபை, கூட்டுச்சேரா அணிகளின் மகாநாடுகள், கொழும்புத்திட்டம் போன்றவை.

5. அ. — இறைவன் மட்டிலுள்ள கடமைகளைச் செய்தல். அவரை ஆராதித்தல், மகிமைப்படுத்துதல், அவரை அறிதல், அவருக்குப் பணி செய்தல். இறை வனின் அடையாளமான திருச்சபையின் பணிகளில் பொறுப்புடன் வாழ்தல்.
- — நாட்டில் தலைவர்கள், திருச்சபை அதிகாரிகள், பெரியோர், பெற்றோர் இவர்களுக்குத் தக்க மரியாதையும், கீழ்ப்படிவும் காட்டல்.
- — உண்மை, நீதி, அன்பு, பொறுப்புணர்வு ஆகிய பண்புகளை வளர்த்தல்.
- — மனித மாண்பை மதித்தல், கற்பொழுக்கத்தில் வாழ்தல்.
- — எல்லா உயிர்களையும் மதித்துப் பேணி வாழ்தல். இயற்கை வளங்களைப் பங்கிடு செய்தல் என்பன.

ஆ. குடிமக்கள் தங்கள் அரசாங்க சட்ட திட்டங்களின் படி நடக்கவேண்டும். அரசாங்க அதிகாரிகளுக்குத் தக்க மரியாதை காட்டவேண்டும். பொதுநலத்தை முன்னேற்ற தங்களால் ஆனவற்றைச் செய்யவேண்டும். இறைவனின் திரு வுளத்திற்கு ஏற்ப மக்களை வழிநடத்தித் தகுதியுள்ளவர்களுக்கு வாக்குரிமை வழங்க வேண்டும் நியாயமான வரிகளைச் செலுத்த வேண்டும். ஆபத்துக்களி லிருந்து நாட்டைக் காப்பாற்ற உயிரையும் தியாகம்செய்யத் தயாராக இருத் தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணப் பரீட்சை

## மார்கழி 1979

## கிறிஸ்தவம் ரே. க.

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1 — 3 | 11 — 4 | 21 — 3 | 31 — 3 |
| 2 — 2 | 12 — 2 | 22 — 2 | 32 — 2 |
| 3 — 1 | 13 — 3 | 23 — 2 | 33 — 2 |
| 4 — 4 (2) | 14 — 3 | 24 — 3 | 34 — 3 |
| 5 — 2 | 15 — 3 | 25 — 1 | 35 — 2 |
| 6 — 4 | 16 — 2 | 26 — 1 | 36 — 4 |
| 7 — 2 | 17 — 1 | 27 — 4 | 37 — 3 |
| 8 — 4 | 18 — 2 | 28 — 4 | 38 — 1 |
| 9 — 4 | 19 — 3 | 29 — 4 | 39 — 3 |
| 10 — 1 | 20 — 4 | 30 — 4 | 40 — 2 |

## பகுதி II

1. அ. தனிப்பட்டவரினதும், குடும்பத்தினதும், சமூகத்தினதும் மத்தியில் ஏற்படும் சிக்கலானதும் தீர்க்கமுடியாததுமான பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தல். சட்ட திட்டங்களை ஆக்கல் - நீதி நிலவச் செய்தல் - குற்றவாளிகளைத் தண்டித்தல் - அந்நிய நாட்டினருடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளல் - எதிரிகளிடமிருந்தும், பொருளாதார வீழ்ச்சியினின்றும் நாட்டைக் காப்பாற்றுதல், தனியார் உடைமைகளையும், பொது உடைமைகளையும் பாதுகாத்தல் என்பன.

ஆ. மக்கள் மத்தியில் ஒற்றுமையும், சமாதானமும் அற்றுப்போதல் - அபிவிருத்தி வேலைகள் தடைப்படல் - நாட்டின் முன்னேற்றம் தடைப்படல் - சமூகத்தினதும், சமயத்தினதும் இணைப்பு விலகுதல் - மனித மாண்புகளைச் சரியான முறையில் கண்டுபிடித்துச் செயலாற்றுமையால் சுயநலப்போக்குடையோர் உருவாகுதல் - நாட்டின் நிர்வாகத்திற்கும், பாதுகாப்பிற்கும் இடைஞ்சல் ஏற்படல் - மனித மாண்பை மதியாமை.

இ. நாட்டின் பொதுச் சட்டதிட்டங்களை அனுசரித்து நடக்க - நாட்டின் ஆளுனர்களையும், அதிகாரிகளையும் கௌரவிக்க - பொதுநலனுக்காக உழைக்க - வாக்குரிமையைச் சரியானவிதத்தில் உபயோகிக்க - மனச்சாட்சியின்படி வரிகளைச் செலுத்த - நாட்டைக் காப்பாற்ற - அநீதி நிலவும் இடத்தில் நீதியை நிலைநிறுத்த - பாவச் சமயங்களை எதிர்நோக்கும்போது அவைகளுக்குக் கீழ்ப்படியாமல் இருக்க மக்களை அறிவுறுத்தல். இப்படியான போதனைகளை எழுதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2\. அ. மெய்விவாகத்துக்காக உண்மையான கரிசனையுடன் தம்மை ஆயத்தப்படுத்துதல் - மணமக்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாய், விசுவாசத்துடன் மரணம் மட்டும் அன்பாய் வாழும் தன்மையை இறைவன் அளிக்கும்படியாய் வேண்டுதல் - பெற்றோர், ஆசிரியர், குருக்கள் இவர்களின் ஆலோசனையைப் பெறல் - கிறிஸ்தவ கோட்பாடுகளுக்கிணங்கி வாழத் தீர்மானித்தல் - நல்லதோர் முன்னேற்ற வாழ்வு வாழத் தம்மைத் தயாரித்தல் - சுகமே வாழ முயற்சித்தல்.

ஆ. வாழ்நாள் முழுவதும் ஒருவருக்கொருவர் விசுவாசத்துடனும், பிரமாணிக்கத்துடனும் சீவித்தல் - ஒரே கடவுளை வணங்குதல் - ஒவ்வொருவரினதும் பாதுகாப்பையும், சுகத்தையும் கவனித்தல் - பிள்ளைகளைக் கொடுத்து இறைவன் அவர்களின் மணவாழ்வை ஆசீர்வதிக்குமிடத்து வாழ்க்கையினாலும், வாக்கினாலும், அன்புடன் பிள்ளைகளை இறைவனிடம் செல்ல வழிகாட்டல் - பிள்ளைகளின் இவ்வுலக வாழ்வுக்கும், மறு உலக வாழ்வுக்கும் வழிகாட்டுதல் - திருமணத்துக்குரிய கடமைகளைக் கிறிஸ்தவ கோட்பாடுகளுக்கிணங்க நடைமுறைப் படுத்துதல்.

இ. நற்பண்புகளை வளர்த்துக்கொண்டு பெரியவனாய் வளர இப்போதே திடசங்கற்பம் கொள்ளல் - ஒருவரை ஒருவர் வஞ்சிக்காமல் எதார்த்தமாய் கௌரவத்துடன் வாழப் பழகுதல் - பிரதி அன்பு எதிர்பாராது அன்பு செய்யப் பழகுதல் - நற்பண்புகளுடனும், பழக்கவழக்கங்களுடனும் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையுடன் வளர்தல் - திருமணம் முடியும்வரை திருமணத்துக் கடுத்த உடலைச்சார்ந்த கடமைகளில் ஈடுபடாமை - பொருளாதார ரீதியில் ஓர் குடும்பத்தை நடத்த முடியுமான வழிவகைகளைச் செய்து கொள்ளல்.

3\. அ. பிறர் உடமைகளை நிர்வகிக்கவோ, பாதுகாப்பாக வைத்திருக்கவோ அல்லது பாவிக்கவோ சந்தர்ப்பம் கிடைக்குமிடத்து என் பொருட்களை எவ்வளவு கவனமாகப் பாவிப்பேனே அதே போன்று அவற்றையும் கவனித்தல் - அரசுக்கும் சமூகத்துக்கும், தனியாருக்கும் உரிமையான சொத்துக்களைக் கவனமுடன் பாதுகாத்தல் - மற்றவர்களிடமிருந்து இரவலாகப் பெற்றதைத் திருப்பிக் கொடுத்தல் - கடன்களையும் குறிப்பிட்ட காலத்தில் தவறாது செலுத்துதல் - நமக்குக் கிடைத்திருக்கும் பொருள் பிறத்தியாரின் பொருளெனில் அதை உரியவருக்குக் கொடுத்தல். கண்டெடுத்ததை உரியவருக்குக் கொடுக்க முயற்சித்தல் - அல்லது கண்டுபிடிக்க முடியாது போனால் பொதுநலச் சேவை புரியும் ஓர் நிறுவனத்திற்கு அதைக் கொடுத்து உதவுதல் - நேர்மையற்ற முறையில் சொத்துக்களைத் தேடாதிருத்தல்.

ஆ. சரீரத் தேவைகளைப் பெற்றுக்கொள்ள வழியற்றிருப்போர், நோயாளர், முதியோர், ஊனமுற்றோர், படிப்பறிவற்றோர், இளையோர், அநாதைகள், விசுவாசத்தில் மந்த புத்தி உடையோர்.

இ. உடலைச் சார்ந்த இரக்கச் செயல்கள் 3 எழுதவும்.

4\. அ. 40 நாட்கள் உபவாசமிருந்து அதன்மூலம் சோதனைகளை வெற்றி கொண்டது, இளமைப்பருவத்தில் தன் குடும்பப் பொறுப்பின் பங்கை சரியான முறையில் நிறைவேற்றியது, யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சுயநலப் பற்றின்மை
2. உலகப் பொருட்களுக்கு அடிமையாகாதிருத்தல்
3. உலக சுகங்களை எதிர்பாராமை
4. இறைவனில் விசுவாசம்

ஆ. லூக்காஸ் 5 : 1 - 11 பகுதி, அதாவது கெனசரேத்து ஏரிக்கரையில் இராயப்பர் யாகப்பர், அருளப்பர் ஆகியோரை அழைத்த சம்பவம்.

1. எம் ஒவ்வொருவருக்கும் இறைசித்தத்தின்படி குறிக்கப்பட்ட கடமைகளை சரியான முறையில் செய்ய எப்போதும் ஆயத்தமாய் இருக்க வேண்டும்.
2. இறைவன் பற்பல வழிகளில் நம்மை அழைக்கின்றார். அந்த அழைப்புக்களுக்குச் செவிமடுத்தல் எம் கடமை.
3. எம் வெற்றிகளில் பங்குகொள்வதுபோல் தோல்விகளிலும் இறைவன் நம்மை அழைக்கின்றார்.
4. வாழ்வில் அன்றன்றைய நாளில் ஏதாவதொரு சம்பவத்தினால் கிட்டும் செய்திகளைச் சரியான முறையில் விளங்கிக்கொள்ள முயலவேண்டும்.
5. சரியானதோர் அமைப்புக் கிடைக்குமிடத்து இலௌகீக செல்வங்களைக் கூடக் கைவிட்டுப் போவதற்கு எம்மில் ஆன்ம சக்தி இருக்க வேண்டும்.
6. இறையரசுக்காக மனிதர்களை வெற்றி கொள்ள வேண்டும் என்ற நோக்கம் தன்னில் ஏற்பட வேண்டும்.

5. அ. இறைவன் படைப்பாளரும், மீட்பரும் என்பதாலும், செபம் இன்றி நாம் விண்ணரசில் நுழையமுடியாது என்பதாலும் செபம் செய்ய வேண்டும்.

ஆ. சாவதானத்துடன், கீழ்ப்படிதலுடன், பக்தியுடன், விசுவாசத்துடன் இடைவிடாமல் எம் வேண்டுதல் நிறைவேறுமளவும் செபம் செய்ய வேண்டும்.

இ. அதனால் எனக்குக் கிட்டும் செய்தியைப் பிழையின்றிக் கண்டுபிடிக்கவும், அதன்படி வாழ்வை அமைத்துக் கொள்ள வழி காண்பிக்கும்படி இறைவனின் வரப்பிரசாதத்தையும், சக்தியையும் வேண்டிச் செபத்தை அமைக்கவும்.

6. அ. நாடு முழுவதும் சென்று போதித்ததன் மூலம் - அருங்குறிகள் மூலம் - இறை வாக்குகளை நிறைவேற்றியதன் மூலம் - தன் வாழ்க்கைச் சான்றின் மூலம் - விண்ணரசின் மதிப்பைப்பற்றித் தம் சாட்சியின் மூலம்

ஆ. நவீன உபகரணங்களினால் வேலை செய்யும்போது நேரமும் காலமும் மீதமாயிருக்கிறது. அந்த நேரத்தையும், காலத்தையும் இறையரசைப் பரப்பும் பணியில் செலவழித்தல். சமூகத்தொடர்புக் கருவிகளை இறையரசைப் பரப்பும் பணியில் உபயோகித்தல் என்பன.

இ. 1. பொது சகோதரத்துவம், மனித மாண்புகளை மதித்தல் (ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அணிசேரா நாடுகளின் கூட்டணி இப்படியான நிறுவனங்கள் மூலம்)

2. ஏக பரிசுத்த திருச்சபை
3. தார்மீக சமுதாயமொன்று உருவாக்க வேண்டுமென்ற அரசின் கொள்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அ. நாம் காணும் உலகின் மூலம் - மனச்சாட்சியின் மூலம் - காலத்தின் பல்வேறு அடையாளங்கள் வழியாக - அநேக தருணங்களில் கிறிஸ்தவரல்லாத பிற மக்களின் மனித மதிப்பீடுகள் மூலமும் மாண்பின் மூலமும், உலகில் காணப்படும் பல்வேறு மறைகளில் கற்பிக்கப்படும் நல்லதும், தூயதுமான படிப்பினைகள் மூலம் - அந்நிய இனத்தவரின் மத்தியில் காணும் சாதாரண நற்பண்புகள் மூலம்.

ஆ. தம்மை எமக்கு அறிமுகப்படுத்த - இறைசித்தத்தை அறிவிக்க - நாம் யார் என்பதை நாம் விளங்கிக் கொள்வதற்காக - எம் பொறுப்புக்களை எமக்கு எடுத்துக்காட்ட - இறைசத்தியங்களை வெளிப்படுத்த - இறைபராமரிப்பை எடுத்துக்காட்ட

இ. மனித மாண்பும், உண்மை சகோதரத்துவமும் என்னவென்று விளங்கிக் கொள்ளல் - பல்வேறு போதனைகளில் காணப்படும் நல்லதும், தூயதுமான படிப்பினைகள் மூலம் கிட்டும் ஒற்றுமைகளைத் தெரிந்துகொள்ள முடிதல் -உலகில் காணப்படும் பல்வேறு மக்களினதும், சமூகவாழ்வு பற்றியும், அவர்களின் கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், பிரிவினைகளுக்கல்ல சமாதானத்துக்கான வழிவகைகள் என்பதை உணர்ந்துகொண்டு செயற்படமுடிதல் - இறைசித்தத்தின்படி மாற்றமடைய இருக்கும் இவ்வுலக வாழ்வுக்காகப் பற்பல மக்களும், நாட்டவர்களும் தம்தம் பொறுப்புக்களை உணர்ந்து கொள்ளல்.

8. அ. ஏழ்மை வெட்கத்துக்கோ, அல்லது ஏழ்மை தன் பொறுப்புக்களில் இருந்து விலகிவிட மக்களால் கிடைக்கும் ஓர் அனுதாபமோ அல்ல - வலிமையிலும், ஞானத்திலும், கடவுள் அருளிலும் அபிவிருத்தியடைதல் - பெற்றோருக்குத் தாழ்மையாய்க் கீழ்ப்படிதல் - இறைச்சித்தத்தை முதலில் நிறைவேற்றுதல் - கடவுளுக்கும், மனிதருக்கும் மேன்மேலும் உகந்தவராகுதல் - தன் நாட்டின் கலாச்சாரப் பழக்கவழக்கங்களுக்கு மதிப்பளித்தல் - எதிர்காலத்தில் தான் மேற்கொள்ளவிருக்கும் பொறுப்புக்களுக்குத் தன்னைத் தயாரித்தல் - காலத்தை வீணாக்காதிருத்தல் முதலியன.

ஆ. அருட் திரு டி. ஜே. அந்தனி — புத்தக வெளியீடுகள் மூலம்
ஈ. டப்ளிவ். பெரேரா — மனித சுதந்திரத்திற்காகப் போராடத் தைரியமாய் முன் நின்றவர்
அருட்திரு. பீட்டர் பிள்ளை — உயர்கல்வி கற்பது சம்பந்தமாய் அவர் ஆற்றிய சேவைகள் மூலம்
திரு. எஸ். டப்ளிவ். ஆர். டி. பண்டாரநாயக்கா — மனித மாண்பையும், கௌரவத்தையும் உணர்ந்து அதற்காக உழைத்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணப் பரீட்சை

## டிசம்பர் 1980

## கிறிஸ்தவம் றோ. க.

# விடைகள் I

| | | | |
|---|---|---|---|
| 1 – 4 | 11 – 3 | 21 – 4 | 31 – 4 |
| 2 – 1 | 12 – 1 | 22 – 3 | 32 – 2 |
| 3 – 1 | 13 – 3 | 23 – 4 | 33 – 1 |
| 4 – 3 | 14 – 2 | 24 – 1 | 34 – 2, 3 |
| 5 – 4 | 15 – 3 | 25 – 2 | 35 – 3 |
| 6 – 2 | 16 – 3 | 26 – 2 | 36 – 3 |
| 7 – 4 | 17 – 3 | 27 – 2 | 37 – 3 |
| 8 – 1 | 18 – 1 | 28 – 3 | 38 – 4 |
| 9 – 1 | 19 – 4 | 29 – 3 | 39 – 1 |
| 10 – 1 | 20 – 2 | 30 – 3 | 40 – 2 |

## பகுதி II

1. அ. நம் மோட்ச தந்தையாகிய இறைவன் தம்மைப்பற்றிய அநேக உண்மைகளை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் சொல்லுகிற யாவும் உண்மையே; ஏனெனில் அவரே நித்திய உண்மையானவர். அவர் தவறு ஒன்றும் ஒருபொழுதும் செய்யவே முடியாது. அல்லது பொய்யானதை ஒருபொழுதும் சொல்லவும் இயலாது. ஆதலால் நாம் இறைவனில் விசுவாசம்வைக்கவேண்டும்.

   ஆ. 1. கெட்ட கதைப்புத்தகங்கள், சினிமா, பாடல்கள், நாவல்கள்
   2. விஞ்ஞானத்தின் மூலம் சகலதும் சாதிக்கலாம் எனும் கொள்கை
   3. இறைவனை நம்பாதவர்களுடன் பழக வாய்ப்புக்கள்
   4. விசுவாசத்துக்கெதிரான பிரச்சாரங்கள், வாழ்க்கை சூழ்நிலைகள்

   இ. மாணவர்கள் தங்கள் கருத்துக்கேற்றபடி எழுதவும்.

2. அ. 1. கடவுளை அறிதல்
   2. அவருக்கு அன்பு செய்தல்
   3. அவருக்கு ஊழியம் புரிதல்
   4. அதனால் அவரோடு என்றென்றும் வாழ்தல்
   5. பிறரை அன்பு செய்தல், தேவைகளில் உதவுதல்

   ஆ. வாழ்வில் வெளி ஆடம்பரங்களை மட்டும் விரும்பக்கூடாது.
   – உள்ளூர இறைவனில் விசுவாசம் அவசியம்
   – தன் குற்றங்களை ஏற்றுக்கொண்டு திருந்த நல்மனம் வேண்டும்
   – இறைவனில் விசுவாசம் கொண்டு தகுந்த பலனைக் கொடுக்காவிட்டால் அத்திமரத்திற்கு ஏற்பட்ட கதியே நமக்கும் இறுதிநாளில் கிட்டும்.
   – விசுவாசமும், அதில் தளரா மனப்பான்மையும் ஏற்படுத்த முயலவேண்டும்
   – பெரியோரின் அறிவுரைகளைக் கேட்டு நடத்தல்

   இ. மாணவர்கள் தங்கள் அறிவுரைகளை எழுதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அ. பிதா, சுதன், பரிசுத்தஆவி எனக் கடவுள் மூன்று ஆட்களாய் இருக்கிறார் என்றும், இந்த மூன்று ஆட்களும் ஒரே கடவுள் என்றும் நம் திருமறை கற்பிக்கின்றது.

ஆ. – தாய், தகப்பன், பிள்ளைகளைக் கொண்ட நல்லதோர் குடும்பமாகும்.
– இது இவ்வுலகில் உண்மை அன்பின் சிறிய சமுதாயமாக இருக்கின்றது.

இ. ஒற்றுமை, எல்லோருடனும் அன்பில் வாழ்தல், சுயநலத்தை வெறுத்தல், சமூகத்துக்கு முன்மாதிரிகையாய் வாழ்தல்.

4. அ. லூக் 22 : 24 - 64 பகுதியின் கருத்தை எழுதவும்.

ஆ. 1. யோசேப்பின் முன் மண்டியிட்டு அழுதனர்
2. ஆகாரம் உட்கொள்ளாமல் இரவு முழுவதும் முகம் குப்புற விழுந்து மண்டியிட்டு இறைவனிடம் மன்றாடி வேண்டினர்
3. உடம்பில் சாம்பல் பூசிக்கொண்டு, சாக்கினால் தம்மைப் போர்த்திக் கொண்டு தபம் செய்து மனஸ்தாபப்பட்டனர்.
4. தான் அநீதியாய் வசூலித்தவைகளுக்காக நான்கு மடங்காக உத்தரிக்க மனதாயிருந்தார்.

இ. – மனச்சான்றைச் சரியாக ஆராயாமை
– பாவத்தின் கனதியைத் மறைத்தல்
– உத்தம மனஸ்தாபமின்மை
– திரும்பவும் பாவம் செய்யமாட்டேன் எனத் தீர்மானம் செய்யாமை.

5. அ. இதை என் ஞாபகமாகச் செய்யுங்கள் என்று தம் அப்போஸ்தலருக்குக் கூறி பரிசுத்த நற்கருணைப்பலியை ஒப்புக்கொடுக்க அதிகாரத்தையும், வல்லமையையும் அளித்தார். அவர்கள் அப்பத்தை மகா பரிசுத்த சரீரமாகவும், இரசத்தை தம் மகா பரிசுத்த இரத்தமாகவும் மாற்றி, இப்பலிப்பொருளை விண்ணக பிதாவுக்கு ஒப்புக்கொடுத்து, அவைகளையே விசுவாசிகளுக்கு உணவாகவும் கொடுக்க வேண்டும்.

– அவர்களுக்குப் பின் குருத்துவப் பதவியில் வருபவர்களுக்கும் இப்பொறுப்பு உண்டு. ஆண்டவர் மீண்டும் உலகிற்கு வருமளவும் அவர்கள் இந்தத் திவ்விய நற்கருணைப்பலியை ஒப்புக்கொடுக்கும் பொறுப்பு உண்டு. அது மட்டுமன்றி கிறிஸ்து தாழ்மையை எப்படிக் கடைப்பிடித்துக் காட்டினாரோ அதேபோல் தாங்களும் ஒருவரை ஒருவர் மன்னித்து அன்பு செய்து வாழும் பொறுப்பும் உண்டு.

ஆ. திவ்விய நன்மையில் கிறிஸ்துநாதர் நம்மோடு மிக நெருங்கி ஒன்றிக்கிறார். நம்மில் அருள் உயிரை வளர்க்கின்றார். நாம் கடவுளின் பிள்ளைகளாக வாழப் புதிய வலிமையைத் தருகிறார்.

இ. எம் வாழ்வு மாற்றமடைந்து எம் சொல், செயல், முன்மாதிரிகை, சேவை முதலியவற்றால் கிறிஸ்துவுக்குச் சான்றுபகரும் முறை விளக்கப்படல் வேண்டும்.

6. அ. இயற்கைச் சட்டம், பத்துக்கற்பனைகள், கிறிஸ்துநாதருடைய முன்மாதிரிகை, திருச்சபையின் போதனை, கட்டளைகள், இவை யாவும் அதற்கு வழிகாட்ட வேண்டும். இவை நமக்குச் கடினமாகத் தோன்றும்பொழுது, ஞானஒளியைப் பெறக் கடவுளை மன்றாடுதல் வேண்டும். நம் பெற்றோர்கள், நமது குரு, ஆசிரியர் அல்லது நம்பிக்கைக்குரியவர்களிடம் ஆலோசனை கேட்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. உயிர் : — உயிருக்கு ஆபத்து உண்டாக்கக் கூடாது
— உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய வழிவகைகளைத் தவிர்த்தல்
— தன் வேதத்திற்காக, அல்லது தன் அயலாரின் நன்மைக்காக, அல்லது ஒரு நியாயமான போரில் தன் சொந்த நாட்டைப் பாதுகாக்கத் தன் உயிரைக் கொடுக்கலாம்.

உடல் : — உடல் நலத்தைக் கவனித்தல்
— அதைத் தூய்மையாக வைத்திருத்தல்
— நல்ல உணவு அளித்தல்
— தகுதியான உடையால் உடுத்துதல்
— உடலுக்குப் பயிற்சி அளித்தல்
— நியாயமான இளைப்பாற்றியையும், பொழுதுபோக்கையும் அளித்தல்

இ. 1. மதுவகைகள் பாவித்தல்
2. முதியோரின் முன்மாதிரிகையின்மை
3. எப்போதும் நவீனமானவற்றை விரும்பிப் பழமையை வெறுத்தல்
4. வறுமை, மற்றும் பொருத்தமானவற்றை எழுதலாம்.

7. அ. அயலவர் கடவுள் வழிசெல்ல நம் செபங்களாலும், தூண்டுதலாலும், முன்மாதிரிகையாலும் உதவி செய்யாமை. ஆன்ம இரக்கச் செயல்கள் செய்யாமை, முதலிய காரணங்களாலாகும்.

ஆ. 1. பாவிகளை மனந்திருப்புவது
2. அறியாதோர்க்குக் கற்பிப்பது
3. ஐயப்படுவோர்க்கு அறிவுரை கூறுவது
4. துயரப்படுவோர்க்கு ஆறுதல் கூறுவது
5. நிந்தைகளைப் பொறுமையோடு சகிப்பது
6. தீங்கு செய்தோரை மன்னிப்பது
7. உயிருடையோருக்காகவும், இறந்தோர்க்காகவும் மன்றாடுவது.

இ. பாடசாலை மாணவன் என்ற தகுதிக்கேற்ப பதிலை எழுதவும்

8. அ. இப்பொழுது காணப்படும் உலகம் மாறிவிடும். அது ஒன்றுமில்லாமையாகப் போவதில்லை. ஏனெனில் கடவுள் தாம் செய்தவைகளை அழிக்கமாட்டார்.. ஆனால் இவ்வுலகத்தின் கோலம் மாயமாய்ப் போகின்றது (1கொரி 7:31) அது முற்றிலும் புதுப்பிக்கப்படும். கடவுளுடைய தூய்மையின் அனலில் புதிதாக மாறி நிறைவு பெறும்.

ஆ. செபம் : இஸ்பிரீத்து சாந்துவே தேவரீர் எழுந்தருளி வாரும்......
கீர்த்தனை : சங்கீதம் 129 சுவாமி பாதாளங்களில்...... சங்கீதம் 144
(அல்லது ஏதும் பொருத்தமான கீர்த்தனைகளை எழுதலாம்)

இ. ஆதியாகமம் (1 : 26 - 28) பகுதியின்படி மனிதன் பூமியை நிறைவு செய்ய பயிர், குடியிருப்புக்கள், புதிய நகரங்கள், பற்பல வித சாதனங்களாலும், விஞ்ஞான அபிவிருத்திகளாலும், தன் திறமைகளாலும் முயலல் வேண்டும். இன்று நம் நாட்டிலும் இப்படியான பணிகள் நடப்பதாக விளக்கினால் நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதிரிப் பாடம் — 9-ம் வகுப்பு

வகுப்பு : 9.

பாடம் : திருச்சபை இறையரசின் அடையாளம் (26)

செய்தி : — இஸ்ராயேல் மக்கள் பழைய உடன்படிக்கையின் இறைமக்கள்.

— புதிய உடன்படிக்கை இறை மக்களைக் கிறிஸ்து தம்பலியினாலும், உயிர்ப்பினாலும் உருவாக்கினார்.

— கிறிஸ்துவின் வழியை, மீட்பின் வழியை மக்களுக்குக் காட்டுவதே திருச்சபையின் பணி.

— கிறிஸ்துவால் நிறுவப்பட்ட உண்மையான இறையரசே திருச்சபை.

— இறையரசின் மக்களைத் திருச்சபை புனிதப்படுத்தி அவர்களின் ஆன்ம சரீர நலன்களில் அக்கறை காட்டி வருகின்றது.

மனநிலை : திருமுழுக்கினால் இறையரசின் குடும்பத்தைச் சேர்ந்த நான், திருச்சபைதான் மீட்பின் ஏக வழி என்பதை உணர்ந்து புனிதத்துவத்தில் வளர்ந்து ஏனையோர்க்கு மாதிரிகையாக விளங்கும் மனநிலையை உருவாக்கல்.

அடையாளம் : பிரதானிகள் மூலம் பல நாடுகளைப் பரிபாலித்து வரும் பேரரசன்.

இறைவார்த்தை : 2:19—22. எபேசியர்.

துணைக் கருவிகள் : கடுகு மரத்தின் படம்.

1. (அ) **அடையாளத்தை அறிமுகம் செய்தல்:** நாடுகள் பலவற்றைக் கொண்ட ஒரு பேரரசன் தன் பிரதானிகளை எல்லா நாடுகளுக்கும் அனுப்பி அவற்றைப் பரிபாலிக்கின்றான். அவர்கள் அரசனின் கட்டளைகளையும், சட்டங்களையும், நீதி முறைமையையும் மக்களுக்கு அறிவிக்கின்றார்கள். மக்கள் தம் அரசனது அன்பையும், அக்கறையையும் பிரதானிகள் வழியாகச் சுவைத்தனர். அரசனில் அன்பும், விசுவாசமும் உள்ள மக்களாக அவர்களை உருவாக்க பிரதானிகள் பிரமாணிக்கமாக உழைத்தார்கள்.

(ஆ) **செய்தியை அளித்தல்:** இறைவனின் திருச்சபையும் இதே போன்றதே. கிறிஸ்து மறைந்த தலைவராய் இருந்து திருச்சபையை வழிநடத்தி வருகின்றார். திருச்சபை கிறிஸ்துவின் போதனைகள், பத்துக் கற்பனைகள் வழியாக போதித்து மக்களை நன்னெறியில் இட்டுச் செல்கின்றது. அன்றியும் பரிசுத்த ஆவியின் வல்லமையாலும், திருவருட்சாதனங்களாலும் இறையரசின் மக்களைப் புனிதப்படுத்துகின்றது. கிறிஸ்து நிறுவிய திருச்சபை ஒன்றாகவும், பரிசுத்தமாகவும் அனைவர்க்கும் போதிக்கும் பொது இயல்பைக் கொண்டும், அப்போஸ்தலர் வழிவரும் பண்பையும் உடையது. கத்தோலிக்க திருச்சபை மட்டுமே கிறிஸ்துவின் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. விண்ணகத்திற்கு வழி காட்டும் சக்தி வாய்ந்தது. தம் தலைவரான கிறிஸ்துவைப் பின்சென்று மக்களது ஆன்ம வாழ்வில் மட்டுமல்லாது இவ்வுலக வாழ்விலும் அக்கறை கொண்டு சமூக சேவைகள் மூலம் மனித சமுதாயத்தை வளப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. (அ) இறைவார்த்தையை எடுத்துரைத்தல்: (எபேசி 2:19–22)

அனைத்துலகப் பண்பைக் கொண்ட திருச்சபை இனமத பேதமின்றி இறையரசுக்கு மக்களை அழைக்கின்றது. இதைப் புனித சின்னப்பர் எபேசியருக்கு எழுதிய பகுதியில் வாசிக்கக் கேட்போம்.

(ஆ) பட்டுணர வைத்தல்:

- கிறிஸ்து தமது இரத்தத்தால் முத்திரையிட்டு புதிய இறைமக்களை, திருச்சபையை உருவாக்கினார்.
- அதன் போதகம், புனிதம், வழி நடத்தல் யாவும் இறைவனிடமிருந்தே வருகின்றது.
- எந்நாளும் உங்களோடு இருப்பேன் என்ற கிறிஸ்துவின் கூற்றிலிருந்து திருச்சபை ஒருபோதும் தவறாது.
- அதன் போதனை, திருவருட்சாதனங்கள் யாவும் மக்களைப் புனிதத்துக்கு இட்டுச் செல்கின்றது.
- இதில் அனைவரையும் இறைமக்களாக திருச்சபை அறைகூவி அழைக்கின்றது.
- கத்தோலிக்க திருச்சபை மட்டுமே கிறிஸ்துவின் உண்மையான அதிகாரத்தைக் கொண்டுள்ளது.
- திருச்சபையுடன் இணைந்து இறைமக்கள் செயற்படவேண்டுமென்பதே கிறிஸ்துவின் திருவுள்ளம்.

3. மாணவர் செயற்பாடு: 1. இறையரசின் அடையாளமாக விளங்குவது எது?
2. திருச்சபை எவ்வாறு இறைமக்களை வழிநடத்துகின்றது?
3. அனைத்துலக திருச்சபையின் பண்புகள் எவை?

பயிற்சி : பாடப் புத்தகத்தில்.

## மாதிரிப் பாடம் — 10-ம் வகுப்பு

வகுப்பு : 10.

பாடம் : மனிதனில் இறைவனின் குரல் (13)

செய்தி :
- சரியானதைத் தெரிந்து, தீயவற்றைத் தவிர்த்து நல்வழியில் நாம் நடக்க இறைவன் மனச்சான்றை எமக்கு அளித்துள்ளார்.
- இதற்குப் பிரமாணிக்கமாய் நடந்தால் இறைவன் எமது மனதிற்கு மகிழ்ச்சியையும், நிறைவையும் அருளுவார்.
- மனச்சான்றின் நல்வழி காட்டுதலை மீறி நடக்கும்போது பாவம் செய்கின்றோம். உள அமைதியை இழக்கின்றோம்.

மனநிலை : எம்மில் மறைந்துள்ள இறைவனின் குரலான மனச்சான்றின் தெளிவான நல்ல ஏவுதல்களுக்குச் செவிமடுத்து இறைவனின் விருப்பத்தைச் செய்வோம். பாவத்தால் மனச்சான்றை இருளடையச் செய்யாதிருப்போம். மனச்சான்று நல் ஒளி பெறமுயற்சி செய்வோம்

அடையாளம் : சலமோன் அரசனின் கதை.

இறை வார்த்தை : உப ஆகமம் 30:11–14.

துணைக் கருவிகள் : ஒளி, இருள் அடங்கிய படங்களை விளக்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. (அ) அடையாளத்தை அறிமுகம் செய்தல்: இஸ்ராயேலரில் புகழ்பெற்ற சலமோன் மன்னன் சிறுவனாய் இருந்தபோதே அரசனானார். அவருக்கு இறைவன் கனவில் தோன்றி நீ விரும்புவதைக் கேள் என்றார். அதற்கு அவர் பொன்னையும், புகழையும், நீடு வாழ்வையும் கேட்கவில்லை. மாறாக நன்மை தீமையைப் பகுத்தறிந்து மக்களை நீதியோடு வழிநடத்த ஞானமுள்ள உள்ளத்தை இறைவனிடம் கேட்டார். அவரது விருப்பத்தின்படியே இறைவன் ஞானமுள்ள இதயத்தைக் கொடுத்து, உலகிலுள்ள அரசர்களில் சிறந்த ஞானமுள்ள அரசனாக இவரை உயர்த்தினார்.

(ஆ) செய்தியை அளித்தல்: நாமும் இவ்வுலகில் நல்லவற்றை விரும்பிச் செய்யவும் தீயவற்றைத் தவிர்க்கவும் இறைவனின் குரலை (மனச்சான்றை) ஏற்க வேண்டும். மனச்சான்றின் ஒளியில் தூய்மையாக வாழும்போது இறையமைதி எம்மில் நிலவுகிறது. எமது மனச்சான்றிற்கு நல்வழி காட்ட வேதாகமம், பத்துக் கற்பனைகள், திருச்சபைக் கற்பனைகள், சட்டங்கள், இயற்கைச் சட்டங்கள், குருக்கள்–பெரியோர்–பெற்றோரது அறிவுரைகள் என்பன உதவுகின்றன. எது சரியானதென்பதைத் தெரிந்தெடுப்பது சில சந்தர்ப்பங்களில் கடினமாகத் தோன்றும்போது இறை ஒளி பெற இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டும். பெரியோர்களின் அறிவுரையை நாடவேண்டும். நாம் மனச்சான்றின் குரலுக்கு மறுத்து பாவத்தில் நிலைத்திருந்தால் அது இருளடைந்து போவதுடன் மனவேதனையுமடைவோம். எனவே நல்லவற்றை செய்து மனச்சான்றின் நல்வழியில் நடந்து இறைவன் குரலுக்கு நற்சான்று பகர்வோம்.

2. (அ) இறைவார்த்தையை எடுத்துரைத்தல்: (உப ஆகமம் 30:11–14)

எம்மோடு கூட இருந்து பேசும் நல்வழிகாட்டியான மனச்சான்றின் படி வாழ மோயீசன் கூறிய அறிவுரைப் பகுதியை வாசிக்கக் கேட்போம்.

(ஆ) பட்டுணர வைத்தல்:

– எம்மில் மறைந்துள்ள இறைவனின் குரலே மனச்சான்று.
– இதற்கு நாம் செவிசாய்த்து, நன்மை தீமைகளைப் பகுத்துணர்வோம்.
– நன்மையை விரும்பிச் செய்து தீமையை விலக்குவோம்.
– மனச்சான்றை நல்முறையில் பயன்படுத்தி அதற்கு நல்ஒளி காட்டுவோம்.
– பாவத்தால் இறைவனின் குரலான மனச்சான்றை இருள் ஆக்காதிருப்போம்.

3. மாணவர் செயற்பாடு:
1. மனச்சான்று என்பது பற்றி நீர் விளங்குவது என்ன?
2. மனச்சான்றிற்கு ஒளி யூட்டும் நல்வழிகாட்டிகள் யாவை?
3. சரியானதைச் செய்யமுடியாத நிலையில் செய்யக் கூடியதென்ன?
4. பாவப் பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் எவை?

பயிற்சி : பாடப் புத்தகத்தில் உள்ளபடி.

இறுதிச் செபம் : விரும்பியபடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை ரூபா: 7/-

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org